உ

சிவமயம்.

ஆறாவது

# பதிபசுபாசவாதம்.

---:o:---

## VI

# PATI PASU PASA VADAM.

இஃது

"ஆரியன்" என்பவரால்

எழுதப்பட்டு,

சென்னை:

மதராசு ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1894

இதன் விலை அணா 6.

# இதிலுள்ள விஷயங்கள்.


| இலக்கம். | | பக்கம். |
|---|---|---|
| ௧ | கேள்விகள் எட்டு | ௧ |
| ௨ | "பிர்மவித்தியா ஆரியன்" வினாவின் அழிவுபாடு | ௨ |
| ௩ | பதிபசுபாசவாதம் (இதில் அனேகவிஷயங்களடங்கியிருக்கின்றன) | ௭ |
| ௪ | இருளும் வெளியும் பேதமாதல் யாங்ஙனம்? | ௧௫ |
| ௫ | சொற்பொருள் பேதாபேதமா? | ௧௭ |
| ௬ | ஆன்மா எல்லாமாதல் | ௧௯ |
| ௭ | ஜீவன்வேறு, பிரமமான ஆன்மாவேறு | ௨௦ |
| ௮ | பிரமம் பிரமபட்டாபிஷேகத்தைக் கட்டியாளும் | ௨௨ |
| ௯ | தேகத்திற் சிறைபட்டிருப்பது ஜீவனே | ௨௩ |
| ௧௦ | ஜீவான்மா வியாபகமென்பது குற்றம் | ௨௬ |
| ௧௧ | வியாபகமான ஆன்மா அணுவாகாது | ௨௭ |
| ௧௨ | பூரணசிவத்தில் பூரணஆன்மா அமைவதெங்ஙனம்? | ௨௮ |
| ௧௩ | சிவன்திருவடியில் ஆன்மா பின்னமாக அமையுமா? அபின்னமாக அமையுமா? | ௨௯ |
| ௧௪ | சமாதானம் முன்னே வந்திருக்கிறது | [illegible] |
| ௧௫ | பிரமம் எல்லாமாய் வியாபித்தல் | ௩௦ |
| ௧௬ | பிரமம் பசுபாசங்களில் எப்படி வியாபித்தது? | ௩௨ |
| ௧௭ | நீர், குடத்தில் வியாபித்த உபமானம் | [illegible] |
| ௧௮ | நெய், எள்ளில் வியாபித்த வுபமானம் | ௩௩ |
| ௧௯ | பழத்திற் சுவை வியாபித்த வுபமானம் | ௩௪ |
| ௨௦ | பூ, வாசனையில் வியாபித்த வுபமானம் | ௩௫ |
| ௨௧ | மணி, ஓசையில் வியாபித்த உபமானம் | ௩௫ |
| ௨௨ | கட்டையில் நெருப்பு வியாபித்த வுபமானம் | ௩௬ |
| ௨௩ | சதுர்பூதத்தில் ஆகாயம் வியாபித்த வுபமானம் | ௩௬ |
| ௨௪ | குடத்தில் மண் வியாபித்த உபமானம் | ௩௭ |
| ௨௫ | பாலில் நெய் வியாபித்த வுபமானம் | ௩௭ |
| ௨௬ | கண்ணொளியில் சூரியனொளி வியாபித்த உபமானம் | ௩௮ |
| ௨௭ | சூரியன், ஒளியில் வியாபித்த வுபமானம் | ௪௪ |
| ௨௮ | கடல், நீரில் வியாபித்த வுபமானம் | ௪௬ |
| ௨௯ | படிகம், பலவர்ணங்களில் வியாபித்த வுபமானம் | ௪௭ |
| ௩௦ | சிலந்தி யுபமானத்தைத் தப்பாய்ச் சொல்வது | ௪௮ |
| ௩௧ | நிலம் வித்து அங்குர உபமானம் | ௫௨ |
| ௩௨ | கேவலநிமித்த காரணவாதம் நீலகண்டர்க்குடம்பாடில்லை | ௫௩ |
| ௩௩ | சகுணநிர்க்குணவாதம் | ௫௫ |
| ௩௪ | அரூபநிர்க்குணம் சரூபசகுணம் | ௫௯ |
| ௩௫ | வைதிகசைவர் தாந்திரிகசைவர் | ௬௩ |
| ௩௬ | கேட்ட கேள்வியைத் திருப்பிக்கேட்டல் | ௬௬ |
| ௩௭ | விடைகூறாமல் மௌனஞ் சாதித்தது | ௬௬ |
| ௩௮ | நீலகண்டசிவாசாரியர்மதம் வேறு, இவர்மதம் வேறு | ௬௭ |
| ௩௯ | கண்ணொளிவிஷயாக முன்றொடர்ச்சி | ௬௯ |
| ௪௦ | முடிவுரை | ௭௧ |

உ

சிவமயம்.

# பதிபசுபாசவாதம்.

## கேள்விகள் எட்டு.

(ப்ரம்மவித்தியாபத்திரிகை.)

ஞானாமிர்த பத்திராதிபர் அடியில்வருங் கேள்விகளுக்குச் சமாதானஞ் சொல்லுவாரென நம்புகின்றேன்.

1. பதிக்குப் பசு பின்னமா? அபின்னமா? பின்னாபின்னமா? பின்னமாயின் பதிக்குப் பூரணத்துவங் குறையும். அபின்னமாயின் பதியே பசுவாகிப் பசுவுக்குள்ள பாசம் பதியையுஞ் சாரும். பின்னாபின்னமாயின் மேற்படி இருவித தோஷமும் பொருந்துவதனோடு நேர்மறுதலையான இருவித தர்மம் ஒருபொருளின்கணிருத்தல் அமையாது. அன்றிப் பதி பசு ஆகிய இரண்டு பொருள்களில் ஆதாரமெது? ஆதேயமெது? ஆதார ஆதேயங்களுக்குத் திருட்டாந்தமொன்று கூறவேண்டும்.

2. பதிக்கு உலகம் பின்னமா? அபின்னமா? பின்னாபின்னமா? பின்னமாயின் பதி பரிபூரணப் பொருளாகாமற் போகும். அபின்னமாயின் பதியே உலகாய் உலகத்திலுள்ள சடத்துவம் பதியைச்சாரும். பின்னாபின்னமாயின் மேற்படி இருவகைத் தோஷங்களும் பொருந்துதலோடு, நேர்மாறான இருவகைத் தர்மம் ஒருபொருளின்கணிருத்தல் அசம்பவமாம்.

3. மாயைக்கு உலகம் பின்னமா? அபின்னமா? பின்னாபின்னமா? மாயையினிடத்து உலகுண்டாதல் மாதாவினிடத்துப் பிள்ளையுண்டாதல்போலா? வித்தினின்றும் மரமுண்டாதல்போலா? பால் தயிராவதுபோலா? மண் கடமாவதுபோலா? கயிற்றினிடத்து அரவுண்டாதல்போலா? இவைகளெல்லாவிடில் வேறெதுபோல்? மாயையின்கண் உலகம் பொருளா? குணமா? தொழிலா?

4. ஞானாமிர்தத்தில் ஆன்மா வியாபகமென்று கூறப்பட்டிருக்கின்றது. வியாபகமெனின் சரீரத்துக்குள் மாத்திரம் வியாபகமா? சரீரத்துக்கு வெளியிலும் வியாபகமா? சரீரத்துக்குள் வியாபகமெனின் அவ்வியாபகத்தின் அளவு எவ்வளவு? அது ஒரே அளவா? பல அளவா? ஒரே அளவெனின் எறும்பு சரீரத்துக்கும் யானை சரீரத்துக்கும் ஒரே அளவாயிருப்பதெங்ஙனங் கூடும்? பல அளவெனின் ஆன்மா விரிதல் சுருங்குதல்களான இலக்கணம் பெற்றிருக்கவேண்டும். சரீரத்துக்கு வெளியிலும் வியாபகமெனின் இச்சா ஞானக்கிரியைகளோடுகூடிய ஆன்மா, சரீரத்துக்கு வெளியிலும் இருந்து அறிதல் மயமாயிருக்கவேண்டும். அவ்வாறிருக்கின்றதென்பதற்கு அநுபவஞ் சிறிதுங்காணோம். அவ்வாறிருக்கிறதாக வைத்துக்கொ

ள்ளினும் ஒவ்வொரு ஆன்மாக்களும் வியாபகமா யிருக்கின்றமையால் அனேக ஆன்மாக்கள் ஒரு இடத்தில் இருக்கின்றனவென்று சொல்ல நேரிடும். ஒரு இடத்தில் இரண்டு பொருளிருத்தலே கூடாதெனின் பலபொரு ளிருக்கின் றனவென்பது அசங்கதமாம்.

5. ஆன்மா ஞானவடிவா யிருக்கின்றதென ஞாநாமிர்தபத்திராதிபர் வரைந்திருக்கின்றார்; அஞ்ஞானத்தால் மறைப்புண்டிருக்கின்றதென்றுங் கூறுகின்றார். இது எப்படிப்பொருந்தும்? ஞானத்தை அஞ்ஞான மெப்படி மறைக்கும்? ஒளியை இருள் மறைக்குமா? சூரியனை இருள்மறையாதே.

6. வியாசமுனிவரியற்றிய வேதாந்த சூத்திரத்துக்கு நீலகண்ட சிவாசாரியார், சங்கராசாரியார், இராமாநுஜாசாரியார், மத்துவாசாரியாராகிய இந்நால்வரும் தனித்தனியே பாடியஞ் செய்தருளினார்கள். இதில் சைவபாடியம் நீலகண்ட சிவாசாரியா ரியற்றியது. இப்பாடியத்தை யிப்போதுள்ள ஞாநாமிர்தத்தைச்சார்ந்த சைவசித்தாந்திகள் தங்கள் பாடியமாக ஒப்புக்கொள்ளுகின்றனரா? ஒப்புக்கொள்கின்றார்களென்னின் நீலகண்ட சிவாசாரியார் உலகத்துக்குப் பிரமம் அபின்ன நிமித்தோபாதான காரணமாகக் கூறுகின்றனரே. அதை மேற்படி சைவசித்தாந்திகள் அங்கீகரிக்கின்றனரா? நீலகண்ட சிவாசாரியார் பிரமத்தை யெப்போதுஞ் சகுணமாகவே கூறுகின்றனரே; நிர்க்குணத்துக்குத் தோஷமுங் கூறுகின்றனரே. அது இச்சைவ சித்தாந்திகளுக்கு உடன்பாடாமா? அன்றி நீலகண்ட சிவாசாரியார் பாடியம் விசிஷ்டாத்வைதமா? சுத்தாத்வைதமா? அல்லது வேறா?

7. ஆதிசைவர்களான குருக்கள்மார், உலகிற்கு மாயையை முதற்காரணமாகவும், சிவத்தை நிமித்தகாரணமாகவும், சிற்சத்தியைத் துணைக்காரணமாகவும் கொண்ட சிவஞானபோதவுரையைத் தமது சித்தாந்தமாக அங்கீகரிக்கின்றனரா?

8. வைதிகசைவரென்றும் தாந்திரீக சைவரென்றும் ஞாநாமிர்தக்காரர் இருவகையாகக் கூறியுள்ளாரே; இப்போதுள்ளவரில் வைதிகசைவர் யார்? தாந்திரீக சைவர் யார்? வைதிக சைவர்க்குச் சிவாகமம் பிரமாணமா? தாந்திரீக சைவர்க்கு வேதம் பிரமாணமா? இவ்விருசைவங்களைப் பிரித்துச் சொல்லும் பிரமாணநூல்களெவை? அந்நூல்களில் இவற்றைக்காட்டும் சுலோகங்களின்னவெனத் தெரிவித்தல் வேண்டும்.

ஆரியன்.

---

(இதற்குச் ஸ்ரீ. சோமசுந்தர நாயகர் கொடுத்த விடை வருமாறு:—)

## "பிர்மவித்தியா ஆரியன்" வினாவின் அழிவுபாடு.

(நாகைநீலலோசனிபத்திரிகை.)

---

பிர்மவித்யாவில் "ஆரியன்" என்பவர் சிலகடாக்களை யேவி யிருக்கின்றார். அவற்றின் கதியை ஈண்டுச் சிறிது யோசிப்பாம்.

அவர் பதிக்குப் பசுவும், உலகமும் பின்னமா? அபின்னமா? பின்ன பின்னமா எனவும், மாயைக்கு உலகம் பின்னமா? அபின்னமா? பின்ன பின்னமா? எனவும், மாயையினிடத்து உலகுண்டாதல் மாதாவினிடத்துப் பிள்ளையுண்டாதல்போலா? வித்தினின்றும் மரமுண்டாதல்போலா? பால் தயிராவதுபோலா? மண்கடமாவதுபோலா? கயிற்றினிடத்து அரவுண்டா தல்போலா? மாயையின்கண் உலகம் பொருளா? குணமா? தொழிலா? என வும் வினவித் தமது ஸாமர்த்தியத்தைக் காட்டினர். இவ்வாறு கூறுவது சைவசித்தாந்த முடிவாயி னிவ்வினக்களை யெழுப்பியது ஸாமஞ்சஸமாம். அங்ஙனமாகாமையி னிவற்றிற்கு விடைபகர்வது எமக்கு அநாவசியகமாம். ஆகையால், இவரெம்பக்கத்தில் விடுத்த கடாக்களை யிவரிடத்திலே தானே திருப்பி யொழிப்பாம்.

பதிக்குப் பசுவுமுலகமும் பின்னமெனின், வஸ்து இரண்டும், மூன் றுமாகி இவரது ஏகவாதத்தின்றலையி லிடிவிழும். அவை பதிக்கு அபின்ன மெனின், பதிநிர்மலமும், பாசம்மலமும், பசு அம்மலத்தை யுடையது மாயி னமையால் இம்மூன்றும் அபின்னமாயிடுதல் கூடாது. பின்னபின்னமெ னின், மேற்கூறிய தோஷங்களேவந்துசேரும். இனிப் பிரமத்தினிடத்தில் உலகு உண்டாதல் மாதாவினிடத்திற் பிள்ளையுண்டாதல்போலா மெனின், பிதா இல்வழி மாதாவினிடத்துப் பிள்ளையுண்டாகாமையால், பிரமமாகிய மா தாவினிடத்திற் பிள்ளையுண்டுபண்ணத்தக்க வேறொரு பொருள் வேண்டும். அன்றி, பிரமம் வித்தும், உலகம் மரமு மாகட்டுமே யெனின், வித்து நிலத் தையாதாரமாகப் பெறுதபோது, அதில் மரந் தோன்றுதாகையால், அவ்வித் தாகிய பிரம[illegible]க்கு ஆதாரமாகிய வேறொருபொருள் வேண்டும். ஆயின், பிரமம் பாலு[illegible] உலகம் தயிருமாகட்டுமேயெனின், பாலைத் தயிராக்குதற்குப் பிறைமோர் [illegible]வேண்டுமாகையாலும், தயிர்மீண்டும் பாலாகாதாகையாலும் பிர மத்தை யுலகமாகப் பரிணமிக்கச் செய்வதற்கு வேறொரு பொருள் வேண்டு வதன்றியும் அவ்வுலகம் மீண்டும் பிரமமாயிடமாட்டாது. அற்றேல் பிரமம் மண்ணும், உலகம் கடமுமாகட்டுமே யெனின், பிரமமாகிய மண்ணைக் கடம் போன்ற வுலகமாகக் காரியப்படுத்தற்கு வேறொரு பொருள்வேண்டும். ஆனல், பிரமம் கயிறும், உலகம் அதிற்றோன்று மரவு மாகட்டுமேயெனின், பிரமமா கிய கயிற்றில் அரவாகிய வுலகத்தைக் காண்பதற்கு வேறொருபொருள் வேண்டும். இஃதுநிற்க, பிரமத்தினிடத்தில் உலகம் பொருளெனின் உலகமாகிய பொருள், அழிவுபாடுடையதாகையால், அதனை அழிவுபாடெய்தாத பிரமத் தினிடத்தி லுண்டாய பொருளென்றிடல் பொருந்தாது. இனி யவ்வுலகத் தைக் குணமெனின், ஜடமும், ரூபமுடையவதனைச் சேதனமும், அரூபமா கிய பிரமத்தின் குணமென்றிடல் கூடாது. ஆயினதனைத் தொழிலென்பா மெனின், பரனது தொழிலால் உலகம் தொழிற்படுதலுண்மையின், தொழி ற்படும் பொருளாகிய வதனைத் தொழிலென்றது கூடாது. அன்றி, தொழி லுக்கு உருவங்கூறுதலுங் கூடாது. உலகம் உருவமுடையதாகலின், அதனை யுருவமெய்தாத பிரமத்தின் றொழிலென்பது பேதமையேயாம். இனி, "புற ச்சமயத்தவர்க் கிருளாயகச்சமயத் தொளியாய்ப் புகலளவைக் களவாகிப் பொற்பணிபோலபேதப் ,பிறப்பிலதா யிருள்வெளிபோற் பேதமுஞ் சொற் பொருள்போற் பேதாபேதமுமின்றிப் பெருநூல் சொன்ன, வறத்திறனல் விளைவதா யுடலுயிர் கண்ணருக்க னறிவொளிபோற் பிரிவருமத்துவிதமா

குஞ், சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாஞ் சைவசித்தாந்தத் திறனிங்குத் தெரிக்கலுற்றாம்" என்னும் பிரமாணத்தாற் போதருமுடிவே யெமது சித்தாந்தமென் றுணர்க. இதனை நமதன்பர் நல்லாசிரியரை யடைந்து அவருக்கேவல்செய்து கேட்டுத் தெளிந் தின்புறுவாராக. இது நிற்க.

இவர் "ஆன்மா வியாபகமெனின் சரீரத்துக்குள் மாத்திரம் வியாபகமா? வெளியிலும் வியாபகமா?" என் றுசங்கித்துத் தமது மதத்துக்கே நேத்திரபங்கந் தேடிக்கொண்டார். எங்ஙனமெனின், இவரது மதத்திற்றானே ஆன்மா சர்வ வியாபகமுடையது என்று கூறுவது வழக்கு. எமது மதத்தில் ஆன்மா சிற்றறிவுஞ் சிறுதொழிலு முடையதெனவும், அது மாயையை நோக்க வியாபகமும், சிவவியாபகத்தில் வியாத்தியுமாகத் தக்கதெனவும், அதன் அறிவு தொழில்கள் வியாப்பியமாகிய ஆணவத்தாற் கட்டுண்டிருப்பனவெனவும் கூறுவதுண்மை. அதனால், பெத்தத்தி லதன்விபுத்வங் காணப்படாது. அது பற்றியன்றே அதனை யணுவென்பர் பெரியோர். இவ்வுண்மை போதரவே "அசித்தருவியாபகம்போல் வியாபக மருவமன்றாய், வசித்திடவரும் வியாபியெனும் வழக்குடையனாகி, நசித்திடாஞானச்செய்தி யனாதியேயுடையனாகிப், பசுத்துவ முடையோனாகிப் பசுவென நிற்குமான்மா" என்றார் எமது சந்தானாசாரியாரும். இனி நமதன்பர் பின் வினாக்களுக்கு விடைபகர்வாராக. "ஆன்மா அல்லது பிரமம் வியாபகமுடையதெனின், அதற்கிரண்டாவது பொருளில்லாதபோது அதுவேறு எதில் வியாபிப்பது? எல்லாந் தானா யிருதலே வியாபகமாகையால், எதில் எது வியாபித்தது என்றது அடாதெனின், அப்போது வியாப்தி வியாப்பியம் என்னுஞ் சொற்களும் அவற்றின் பொருள்களும் என்னாவது? அன்[illegible]ம் எல்லாந் தானாயிருதலே வியாபகமெனின், எல்லாம் என்றது பாசப[illegible]க்களேயாம். தான் என்றது பதியாம். இப்படி ஏனோ அப்பதி பாச பசுக்க[illegible]க விரிந்தது? அல்லது வியாபித்தது? பாசமாகவும் பசுவாகவும் வியாபித்த பதி ஏனோ இன்னும் (பாசபசுக்களுக்கு வேறாய) பலபொருள்களாக வியாபித்தல் கூடாது? அங்ஙனம் பதி வியாபியாமையால், அவ்வாறு வியாபிக்கத்தக்க வாற்ற லதற்கில்லையென்பது சித்தமாம். அதவா வியாபிக்குமெனக் கொள்ளின், அவ்வாறு வியாபிக்குமெவ்வளவு வியாபகமும் அதனது வியாபகத்தின் அகண்டமாகாமல் கண்டமேயாய் முடியும். அதனால் அது சர்வவியாபகப்பொருளாதல் யாண்டும் பூர்த்திகட்டாது. இதனால், தானே எல்லாமாயதென்னும் வாதத்தை யொழித்துத் தான் என்னும்பதி எல்லாம் என்னும் பசுபாசங்களில் வியாபித்தலை யொப்புவதே பதியினது வியாபக தர்மமாம். பசுபாசங்களை யியக்குதற்கேபதி அவற்றில் வியாபித்தமையால், அதுவே பூரணமாம். பசுபாசங்களைத்தவிர வேறு பொருள்க ளில்லாமையால், பதிக்கு அவற்றின்மேலிட்ட வியாபகத்வங் கேட்கப்படவில்லை. பதியைப்போலப் பசுபாசங்களும் நித்தியமாகையால், இவற்றிற்கு அன்னியமாக வேறுபொருள்களின் பிரஸ்தாபம் சாஸ்திரங்களி லுண்டாகவில்லை. இவ்வாறு தெளிந்திடாத விவர் பதியினது வியாபகத்தை விசாரித்துச் சைவசித்தாந்தத்தை மறுக்கப் புகுந்தது ஆச்சரியமாயதென்க. இது நிற்க.

இவர் ஆன்மா எல்லாப்பொருளுமாகிய தென்னுங்கால், அவ்வெல்லாப்பொருளும் ஆன்மாவைப்போல அறிவா யிருத்தல்வேண்டும். இவர்

கூறுமான்மாவை அறிவுஎன்பது சொல்லேயன்றி அதற்குப் பொருளில்லை.
ஏனெனின், இவரறியாமை துக்கங்களோடுகூடி யிரவும்பகலும் விஷயவா
சனைகளின் மொத்துண்டு வருந்தி யுழல்கின்றார். இவரதறிவு சுழுத்தியில்
இருந்தவிடந் தெரியாம லிருக்கின்றது. கருவிகரணங்களைக்கூடிச் சாக்கிர
த்தில் வந்தபோது நான் அறிவு என்று தலைநீட்டுகின்றது. அறிவே எல்லா
மாவதும், வியாபகமாவது முறுதியாயின், இவ்வஸம்பாவிதங்களுக்குக் கதி
யென்னை? தேகம், இந்திரியம், பிராணன், கரணம் இவைகளைக் கூடாமல்
ஆன்மாத் தனி நின்று தான் அறிவு வடிவாயிருத்தலைக்காட்டிப் பதிஸ்தான
த்துக்குரிய பிரஹ்மபட்டாபிஷேகத்தைக்கட்டி யாளட்டும் பார்ப்போம்.

இவரது ஆன்மா, அல்லது பிரமம் தேகத்திற் சிறைப்பட்டிருப்பதொ
ன்று. இவரது மதம் ஆன்மா வியாபகப்பொருளென்று கூறுகின்றது. அங்
ஙனமாயின், அது சாக்கிராதியவத்தைகளை யெய்தி அறிவு ஏறியுங் குறைந்து
மியங்குமாறென்னை? சரீரத்தினுள் அது வியாபித்ததெனின், கண்ணொன்
றினைப் பார்க்கிறபோது அதில் வியாபித்தவான்மா செவியில் வியாபித்து
ஒன்றினைக்கேளாத தென்னை? இப்படியே யேனை யிந்திரிய வியாபாரங்க
ளிடத்துங் காண்க. சாக்கிரத்தில் நுதலினும், சொப்பனத்தில் கண்டத்தி
னும், சுழுத்தியில் நாபியினும், துரிய துரியாதீதங்களில் வேறிரண்டிடங்க
ளினுந் தங்கி அறிவு ஏறியுங் குறைந்தும் நின்று சீவிக்கும் ஆன்மாவைச் சரீ
ரத்தின் உள் வியாபகமுடையதென்னும் வாதம் எங்ஙனே மணம் பெறும்?
உள்வியாபகத்துக்கே யோக்யதை கெட்டிருக்கும் அவ்வான்மா வெளிவியா
பகமுடையதென்னும் வாதம் (குருவுக்குக் குதிரைமுட்டை வாங்கிக்கொடு
த்த) அவிவேகபூரணகுருவின் சீடர்களுக்கு மாத்திரமே பயன்படத்தக்க
தென்க.

இனி ஆன்மா வியாபகமாயின், அவ்வான்மாக்கள் பலவாகையால்
அவையாவும் எப்படி வியாபகம் பெறுதல் கூடுமென்றுசங்கித்தாராகையால்,
அதற்கிறைதந்தொழிப்பாம். யாம் கூறுமான்மவியாபகம் முத்தித்தசையில்
அது சிவன்றிருவடியி லமைவதொன்று. ஒரு சந்திரனை யேககாலத்தி லுல
கத்திலுள்ளார் யாவரது கண்களும் பார்த்ததாகக் கொள்வோம். அப்படிப்
பார்க்குங்கால், யாவரது கண்ணொளிகளு மிடைவெளியி லொன்றோடொ
ன்று கலந்து வியாபித்தலும், அத்தனையும் அந்தச்சந்திரனை முற்றும் பரிசி
த்து இன்புறுதலுங் கூடுமாகையால், எமது வியாபகம் சாமஞ்சஸமேயாயி
ற்று. இவர் ஒரு இடத்தி லிரண்டு பொருள்களிருத்தல் கூடாதென்றார். அது
உருவப்பொருள்களிடத்தன்றி அருவப்பொருள்களிடத்திற் சிறவாது. இவ
ருக்கு வியாபகவிலக்கணந் தெரியாமையால், கண்டகண்டவாறு பிரசங்கித்
துக் கழிந்தார். இவரது வியாபகத்தையும், எமது வியாபகத்தையும் யாம்
ஈண்டொருவாறு பிரகாசப்படுத்தினோமாகையா லினி யிவரது தெளிவை
விவேகிகள் யூகித்தறிவது சுலபமென்க. இது நிற்க.

இவர் ஆன்மா ஞானவடிவாயின், அதனை அஞ்ஞானம் எப்படிமறை
க்கும் எனவும், சூரியனை இருள்மறைக்குமா? எனவுங் கடாவித் தருக்கி
னார். இதுவுமிவரது மதத்துக்கே தீங்குதேடியதாயிற்று. எங்ஙனமெனின்,
எமதுமதத்தில் ஆன்மா ஞானவடிவம் என்றது அதனது சிற்றறிவை. அச்
சிற்றறிவுதானும் அறிவித்தாலன்றித் தானே யறியாது. இச்சிற்றறிவினை

அநாதியே மலம் அல்லது அஞ்ஞானம்.மறைத்தது சகசம். இது என்போலு
மெனின், கண்ணொளியைப் பூதவிருள் மறைத்ததுபோலாம். "அருக்கன்புகு
தவிருள்போம் அடியிற் பொருந்த மலம்போம்" என்றபடி பூதவிருளால்
மூடப்பெற்ற கண்ணானது கதிரோனாலும் அஞ்ஞானவிருளால் மூடப்பெ
ற்ற வான்மாவானது சிவனாலுஞ் சத்திகுன்றித் துலங்குமென்க. கண்ணொ
ளியையே பூதவிருள் மறைப்பதன்றிக் கதிரொளியை மறைக்கமுடியாதாற்
போல ஆன்மவொளியையே அஞ்ஞானவிருள் மறைக்குமன்றிச் சிவவொளி
யை மறைக்கமுடியாதென்க. இஃதோராது ஆன்மாவாகிய தன்னைச் சிவ
மாக மயங்கி, அச்சிவம் அஞ்ஞானத்தாலாவரிக்கப்பட்டது என்பாரது மத
மே யீனமதமாயதென்க. இம்மதத்திற்றானே நமதன்பரிறங்கிக் கொண்
டானடிப்பதாலிவர் தேடியசங்கரமதமிவரைத் தெருவில் விட்டதென்க.
எம்முடைய சங்கரமதம் யாவரையு முய்விப்பதென வறிக. இவரது சங்க
ரர் கேரளபசுவும், எமது சங்கரர் வேதகாரணபதியுமாயினமையால், யாம்
கூறியது சர்வஸம்பிரதிபந்நமாயினதறிக. விரிக்கிற் பெருகும். இது நிற்க.

இவர் ஸ்ரீநீலகண்ட சிவாசாரியார் தமது பாஷ்யத்தில் உலகத்துக்குப்
பிரமம் அபின்ன நிமித்தோபாதானமாயுள்ளது எனவும், அந்தப்பிரமம் சகு
ணமாவதன்றி நிர்க்குணமாகாது எனவும் பிரசங்கித்திருப்பதால், அது எப்
படிச் சைவர்க்கு அங்கீகாரமாம் என்று கடாவிச் செருக்கினார். இவர் சைவ
மரபறியாதவராகையால், வீண்கேள்விகளை விடுத்து எமக்குச் சிரமத்தை
யுண்டுபண்ணுகிறார். ஆயினு மிவரது கொடுமையை விலக்கி, ஸாதுக்களுக்கு
ஸந்தோஷத்தை யுண்டுபண்ணுவதை யாம் விரதமாகக் கொண்டமையால்,
அதனையும் விசாரித்துப் பரிஷ்கரிப்பாம். சிலந்திப்பூச்சியினிடம் நூல் உண்
டாகியதுபோல் பிரமத்தினிடத்தில் உலகமுண்டாகியது என்று வேதங்
கூறுகின்றது. நூலுக்கு முதற்காரணமும் நிமித்தகாரணமும் சிலந்தியே
யாயினவாறு உலகுக்கு முதற்காரணம், அல்லது உபாதானகாரணமும், நிமி
த்தகாரணமும் பிரமமேயாகியது என்று சைவபாஷ்யகாரர் கொண்டிருக்
கலாம். சிலந்தியினது தேகம் அதனிடத்துண்டாகிய நூலுக்கு உபாதான
மாயினதன்றி, அத்தேகத்தைத் தாங்கியிருந்த சைதன்யம் உபாதானமாயி
னதில்லை. அது நிமித்தமாகவே நின்றது. இதனை இவ்வாறு பிரித்துரையா
டும்போது பிரமம் கேவலம் நிமித்தப்பொருளாகின்றது. இந்தப் பின்ன நிமி
த்தவாதத்தை நிறுத்துதற்கு அவ்வேதந்தானே குலாலஸ்தானத்தில் பிரம
த்தைக் குடியேற்றுகின்றது. இரண்டும் ஸாமஞ்சஸமேயாம். நிலங்குளிர்
ந்தவழி வித்தினின்றும் அங்குரந் தோன்றுதல்கண்டாம். நிலத்தினின்றும்
அங்குரமுண்டாயது என்பதும் வித்தினின்று மங்குரமுண்டாயதென்பதும்
ஸாமஞ்சஸமாயினவாறு உலகத்துக்கு அபின்ன நிமித்தோபாதானவாதங்
கூறுவதும், கேவலம் பின்ன நிமித்தவாதங் கூறுவதும் எமக்குடம்பாடே
யாமென்க. இக்கருத்தேபற்றியன்றோ எமது அருணந்திசிவம் "உலகவனுரு
விற்றோன்றி யொடுங்கிடும்" என்று சிவஞானசித்தியாரில் அருளிச்செய்
தது? இவ்வாறு விசாரித்து யாம் துதித்து வழிபடும் ஸ்ரீ பாஷ்யம் போலாது
மிச்சாவாதத்தைப் போதித்தும், பசுபாசங்களும், பதியுமொன்றென்று உபபா
தித்தும் முரணிக்கூறுஞ் சங்கரபாஷ்யமேயாம் வெறுக்கத்தக்கதென்க. இவ்
வாறு தெளிந்திடாமல் இவர் "ஆதிசைவர்கள் உலகிற்கு மாயையை முதற்
காரணமாகவும், சிவத்தை நிமித்தகாரணமாகவும், சிற்சத்தியைத் துணைக்கா

ரணமாகவுங் கொண்ட சிவஞானபோதவுரையைத் தமது சித்தாந்தமாக அங்கீகரிக்கின்றனரா?" எனப் பின்னர் வினவியதும் அஸம்பாவிதமாயின தறிக. ஆதிசைவ மணியாகிய சகலாகமபண்டித ஸ்வாமிகளேயன்றே சிவ ஞானபோதத்துக்கு நிமித்தகாரண வாதத்தை யங்கீகரித்துச் சிவஞானசித் தியார் என்னு முரைசெய்தருளினர்? இவர் வேறு எந்த ஆதிசைவர்களை யோ அவ்வாறு சொள்ளாதவர்கள் என்று கண்டு கூறியது? இவரது பிரமத்துக் குப் பிரமையுண்டானவாறு இவர்க்குண்டாகும் பிரமையை யெல்லா மிவர் வினுக்களாக்கி யெழுதிவிடுகின்றாரிதென்கொலோ? இதுநிற்க.

சைவபாஷ்யகாரர் பிரமத்தை எப்போதுஞ் சகுணமாகவே கூறுவ தன்றி, நிர்க்குணவாதத்தைப் பிரதிஷேதிப்பதென்னையென வோராசங்கை எழுப்பியிருக்கின்றார். வேதத்திற்கூறிய தஹரோபாசனை முதலியயாவும் உமாஸஹாயத்வாதி லிங்கங்களோடு கூடிய பிர்மத்தைக் குறித்ததேயாகை யாலும், தேவாரமுதலிய திராவிடசூக்திகளும், சிவஞானபோதமுதலிய சித்தாந்த நூல்களு மவ்வாறே கூறுகின்றமையாலும் ஸ்ரீபாஷ்யகாரரது வா தம் ஸர்வஸம்ப்ரதி பந்நமாயதென்க. நிர்க்குணவாதமும் அவருக்குத் தோ ஷக்ரஸ்த மாகாதெனினும், நிர்க்குணமே முக்கியம் என்று வாதிடும் மாயா வாதமூர்க்கரை யுத்தேசித்து, அதனைப் பிரதிஷேதித்திருக்கலாமென்க. நிர்க் குணம் வேதபடிதமாயினும், அது ஏகமலபத்தாளாகிய விஞ்ஞானகலருக்கு ரிய அரூப சிவத்தை யாசிரயித்துடையதென வறிந்தின்புறுதலே யெமது சித்தாந்தமென்றுணர்க. விரிக்கிற்பெருகும்.

இவரிவ்வளவி லமையாது வைதிக சைவர் யார்? தாந்திரிகசைவர் யார்? என்று கடாயினர். வைதிகசைவர் வேதசிவாகமங்களைத் தெளிந்து அவ்விருவித நூல்களினுங் கூறிய வநுட்டானங்களையும், நிட்டையையும் மேற்கொண்டவர்கள். தாந்திரிகசைவராவார் சிவாகம மொன்றினையே விசா ரித்து, அது வேதத்தின் பாஷ்யமாயிடுதலைத் தெளிந்து வேதாவிரோத புத் தியுடன் அச்சிவாகமாநுட்டானத்தையும், அதிற்போந்த நிட்டையையும் மேற்கொண்டவர்கள். இவ்விருதிறத்துச் சைவப்பெரியாரும் யாம் வழிப டற்குரியா ரென்க.

இங்ஙனம்,

**சூ. சோமசுந்தரா நாயகர்.**

---

**(இதன்பேரில் "ஆரியன்" என்பவர் மறுத்த மறுப்புவருமாறு:—)**

## ப தி ப சு பா ச வா த ம்.

**(ப்ரம்மவித்யாபத்திரிகை.)**

---

1892ஞு மேமீ 11உ வெளியான ப்ரம்மவித்தியாவின்கண் ஞானு மிர்த பத்திராதிபரை யெட்டுவினுக்கள் வினுவினேம். ஞானுமிர்த பத்திரா திபர் இதுவரையில் ஏதும் விடையளித்தா ரில்லை. இனி யளிப்பாரோ என் னமோ அறியேம். இங்ஙனமாக நாகைநீலலோசனியில் "பிர்ம்மவித்தியா ஆரியன்" வினுவின் அழிவுபாடு" என நாமந் தந்து, சூ. சோமசுந்தர நாய கரெனக் கையொப்பமிட்ட வொருவர், பதிலளிப்பார் போன்று வெளியேறி,

விளக்கெண்ணெய் வார்த்துச் சௌசம் செய்வார்க்கொக்கச் சில பலபேசிக் குழப்பி, அதுவரையில் பதில் அளித்துவிட்டதாக மனப்பாலருந்தி, தாம் ஏதோ சாதித்துவிட்டதாகக் களித்து, வினாவை அழிவுபாடு செய்ததாகப் போலிவிருது கூறி, "ஏகவாதத்தின் தலையி லிடிவிழும்" முதலிய தூஷணைச் சொற்களைப் பிரயோகித்து வீண்காலம் போக்கினார்.

இவர், நாம் விடுத்த வினாக்களைத் திருப்பியொழிப்பாமென்று தொடங்கி நம்மைக் கேள்வி கேட்கிறார். நாம் ஞானாமிர்தத்தார், சைவமதஸ்தாபகராகவும், புறமதத்தை நிராகரிப்பவராகவும பேசுவதாலும், அதற்காகப் பத்திரிகை நடத்துவதாலும் அவரைக் கேள்வி கேட்க வெழுந்தனம். அவ்வாறு நாம் அந்தஸ்தானத்தை யடைந்து எமது மதசித்தாந்த மின்னதெனக் காட்டும்போது எம்மைக் கேள்வி கேட்டால் சொல்வோம். அவ்வாறில்லாத போது எம்மைக் கேட்கவேண்டிய தென்னை? 'இவரது ஏகவாதத்தின் றலையி லிடி விழும்' என்றும், "பிரமத்தின்றொழி லென்பது பேதமையேயாம்" என்றும் இன்னுமிவ்வாறு பலவிதமா யிகழந்து தருக்க வரம்புமீறிப் பேசுவதழகோ! நாமின்ன மதஸ்தரென்றுரையாடாதிருக்கவும் எம்மை யொரு மதஸ்தராக்கி அம்மதத்தவரை யிகழ்ந்து கூறவேண்டியவைகளை யெமதுமேல் கூறினாரே! இப்படிப்பேச இவருக் கெந்தத் தருக்கநூல் இடந் தந்தது? இவருக்கும் தருக்கநூற்கும் எவ்வளவுதூரம்! தருக்க நூலேற்பட்ட தியாருக்கு? இப்படி வரம்பிகந்து பேசும் வாதலக்ஷணந் தெரியாதவர் பொருட்டல்லவா? வாதலக்ஷணந்தெரியாது ஒன்றிருக்க வொன்று தடுமாறிப்பேசுவோர்க்காகத் தருக்கநூல் ஏற்பட்டும் அதை லக்ஷியஞ்செய்யாது தம்புத்தி போனமட்டில் பேசும் இவருடனே வாதஞ் செய்வதிற் பயனில்லையேனும் பொதுஜன நன்மையின் பொருட்டுப் பேசக்கடமைப்பட்டோமென்க. நாம் கேட்ட கேள்விக்கு இவர் சொன்ன சமாதானம் சமாதானமாகாமல் ஆக்ஷேபத்தைப் பின்னும் பலப்படுத்தி விட்டது.

ஷை சூ. சோமசுந்தர நாயகரென்பார், " புறச்சமயத்தவர்க்கிருளாயகச்சமயத்தொளியாய்ப் புகலளவைக்களவாகிப் பொற்பணிபோலபேதப், பிறப்பிலதா யிருள்வெளிபோற்பேதமுஞ் சொற்பொருள்போற் பேதாபேதமுமின்றிப் பெருநூல்சொன்ன, வறத்தினால்விளைவதாயுடலுயிர்கண்ணருக் க னறிவொளிபோற் பிரிவருமத்துவிதமாகுஞ், சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாஞ்சைவ சித்தாந்தத்திறனிங்குத் தெரிக்கலுற்றாம்" இந்தப்பாட்டைத்தான் கேள்விக்கு உத்தரவாகச்சொன்னதோடு, அதற்குனா தாமேசொல்லாது, " நல்லாசிரியனையடைந்து அவருக்கேவல்செய்து கேட்டுத் தெளிந்தின்புறுவாராக" என்று வழி காட்டிவிட்டார். ஆசிரிய ரின்னாரென்றுஞ் சொன்னா ரில்லை. ஓராசிரியனைக்கேட்டு அதைக்கொண்டு இவருடன் பேசும்போது அது தமக்கு விரோதமானால் அவருக்கேவல்செய்து தெரிந்துகொள்ளவில்லை என்பாராக்கும்! ஏவல்செய்து கேட்டுத் தெரிந்துகொண்டாலும் அவர் நல்லாசிரியரல்லவென்றா லென்னசெய்கிறது! ஓர் சபையில் மத்தியஸ்தர் முன்னிலையில் வாதலட்சணப்படி வாதப்போர்செய்யும்போது அதற்கு இவ்வாறு விடைதருவாரா? தந்தால் அச்சபையாரும் மத்தியஸ்தரும் சபாநாயகரு மிவரைப்பற்றி இன்னது சொல்வார்களென்று இதைப் படிப்போரே அறிந்துகொள்வார்கள். நாம் கேட்ட கேள்விக்குத் தாம்விடை கூறி,

பின் மேற்கோளாகச் செய்யுளைக் காட்டாமல் மொத்தமாய்ச் செய்யுளைக் காட்டிவிட்டதினால் இவ்விஷயத்தில் வாயைத்திறந்தா லென்னஅனர்த்தம் வருமோவென்று பயந்து ஒளிந்ததாய்த் தெரிகிறது. ஷை பாட்டில் பொன் மணிபோல் அபேதமும், இருள்வெளிபோல் பேதமும், சொற்பொருள்போல் பேதாபேதமு மல்லவென்று கூறியிருக்கிறது. அது நியாயந்தான். ஏனென்றால் நாம் கேட்டகேள்வியில் ஷை மூன்றுக்கும் தோஷங்காட்டியிருக்கின்றோம். அந்தத்தோஷத்தை யிவரும் ஒத்துக்கொண்டே ஷை பாட்டைமேற்கோளாகக் கொண்டு, உடலுயிர்போலும், கண்ணொளி சூரியனொளிபோலும் பிரித்தற்கரிதாயும், அநந்நியமாயுமிருக்கிறதென்றார். பதிமுதலியவைகட்குப் பசு முதலியவைகள் பின்னமா, அபின்னமா, பின்னாபின்னமாவென்று கேட்டு, அம்மூன்றுவகையினையும் குற்றங்கூறி மறுத்தனம். அது சரியென்று இவரும் ஒப்பினரென்பதற்கு இவர் கூறியபாட்டே சாக்ஷிபகரும். அதன் மேல் இப்படிப்பட்டகுற்றங்கள் நிகழாதபடி கூறவெழுந்தார்போன்று உடலுயிர், கண்ணொளி சூரியனொளி திருட்டாந்தங்கூறினார். உடல் உயிரும், கண்ணொளி சூரியனொளியும் பின்ன முதலிய மூன்றையும் கடந்து எப்படியிருக்கும்? உலகில் எந்தப்பொருள்களும் பின்னமாகவாவது, அபின்னமாகமாவது, பின்னாபின்னமாகவாவது இருக்கவேண்டும். இம்மூன்றையுங் கடந்த இலக்கணமுள்ள பொருள் கிடையாது. மேற்சொன்ன மூன்றிலும் பின்னாபின்னப்பொருள் அகப்படவேமாட்டாது. பின்னாபின்ன இலக்கணத்திற்கே இடமில்லாதபோது அதனுடன் மூன்றிலக்கணத்தையுங் கடந்து சொல்லவருவது எவ்வளவு ஆராய்ச்சியில்லாமை? அப்படித்தான் சொல்ல வந்தாரே; என்ன சொல்லுகிறாரென்றுபார்த்தால் "பழையகுருடி கதவைத் திறவடி" என்றதுபோலப் பின்னம் அபின்னமாகிய இரண்டு குற்றங்களுக்கே யிலக்காகின்றார். உடலும் உயிரும் இரண்டுபொருளென்று ஒவ்வொரு ஆஸ்திகருமொப்புவர்; உடலும் உயிருமொன்றென்பவர் நாஸ்திகர். பின்னையது இவர்க்குடன்பாடன்று; இவர் வேறென்றுகொள்பவரே. இப்படிக் கொள்பவர் பிரிவரு மத்துவிதமாகுமென்றுங் கூறுகின்றார். இதற்குவமேயம் ஷை பாட்டினுரைகாரர் "கர்த்தாவையும் பிரபஞ்சத்தையும் தன்னிற்பிரித்தற்கரிதாய் அநந்நியமாயிருக்கிற சிறப்பினையுடைத்தாகிய" என்கிறார். அத்துவிதமென்னுஞ்சொல்லுக்கு ஒன்றுமல்லவாம்; இரண்டுமல்லவாம். பிரிவரு மத்துவிதமென்பதில் பிரிவரும் என்பதற்குப் பிரித்தற்கரிது என்கிறார். உடலும் உயிரும் பிரித்தற்கரிதோ? உடலும் உயிரும் வேறாயிருக்க, அதைப் பிரித்தற்கரிதென்று சொல்வதென்னே! உடலுமுயிரும் தன்னிலொன்றுபட்டறியுமென்றுங் கூறுகின்றார். இதனால் இவர்க்கு வந்தலாபமென்னை? இராமனும் லட்சுமணனுமொத்து எந்தக்காரியங்களுஞ் செய்கிறார்களென்னில் இராமனும் இலட்சுமணனும் ஒருவராவரா? அத்துவிதமென்னுஞ் சொல்லுக்குப் பொருள் ஒன்றுமல்ல; இரண்டுமல்லவென்றால் பின்னையெத்தனை? உடலும் உயிரும் ஒன்றுமல்ல, இரண்டுமல்லவென்றால் பின்னை யெத்தனையோ? உடலும் உயிரும் என்பது இரண்டுபொருள். அதை யொன்றல்லவென்று கூறுவது நியாயமேயன்றி இரண்டுமல்லவென்று கூறுதல் எப்படி நியாயமாகும்? இரண்டுமல்லாவிடில் மூன்று நான்கு ஐந்து முதலிய வெண்களிலொன்றனைக் கூறலாமா? உவமானமிவ்வளவு இலக்கணத்தைக் கொண்டிருக்கும்போது உவமேயமும் இப்படித்தானேயிருக்கும். உடலும் உயிரும்

தன்னிலொன்றுபட்டு அறியும் அறிவைப் பிரிக்கவொண்ணாதுஎனவும் வியாக்கியானத்தி லிருக்கிறது. அறிவு உயிரினது குணம்; உடலினது குணமன்று. அறிவைப் பிரிக்கவொண்ணாது என்பதில் எதைவிட்டுப் பிரிக்கவொண்ணாது? உடலைவிட்டா? உயிரைவிட்டா? உடலைவிட்டுப் பிரிந்துபோவது யார்க்குங் கண்கூடு; உயிர்க்கு அறிவு குணமாகலின் பிரிந்துபோகாது. வேறு என்ன விசேஷமிருக்கிறதோ அறிந்திலம். இதுபோகக் கண்ணொளி சூரியனொளித் திருஷ்டாந்தத்தையும் சற்றுப் பரியாலோசிப்பாம். ஷை பாட்டின் வியாக்கியானத்தில் "கண்ணொளியும் ஆதித்தப்பிரகாசமும் தன்னிலொன்றுபட்டு நிற்கும்" என்று கூறியிருக்கின்றது. ஸ்ரீ. சோமசுந்தரநாயகரே இப்போது இதற்குத்தரவாதி. சூரியனுக்குப் பிரகாசமிருப்பது உண்மைதான். அவ்வாறு கண்ணுக்கும் பிரகாசமிருக்கிறதா? கண்ணுக்குப் பிரகாசமிருக்கிற துண்மையானால் இருளில் பொருள்களை யறியவேண்டுமே. உலகில் பிரகாசமுள்ள பொருள்க ளித்தனைவகையென விரலால் எண்ணிவிடலாம். சூரியன், சில நக்ஷத்திரங்கள், அக்கினி, சில மச்சங்கள், அக்கினி பாஷாணம், சோதிவிருக்ஷமுதலிய சில பொருள்தான் பிரகாசமுள்ள பொருள்கள். கண் அப்பிரகாசப் பொருள்களி லொன்றும். இங்ஙனமாகக் கண்ணைப் பிரகாசப் பொருள்களி லொன்றாகவைத்து, கண்ணொளியென்றெழுதியது ஒப்புக்கொள்ளத் தக்கதன்று. "கண்ணுக்குச் சொற்பமாய்ப் பிரகாசமுண்டு, அத்துடன் சூரியப் பிரகாசத்யையுங்கொண்டு விஷயங்களை யறிகின்ற"தென்னின்,கண்ணுக்குப் பிரகாசம் சொற்பமா யிருக்கின்ற தென்பதற்கு அனுபவம் யாது? உலகத்திலிருக்கும் பல வஸ்துக்களில் சிலவற்றிற்கு அதிகப்பிரகாசமும் சிலவற்றிற்குச் சொற்பப் பிரகாசமும் இருப்பதுண்மையே. எங்ஙனமென்னின் சூரியனுக்கு அதிகப் பிரகாசமும் அக்கினி பாஷாணமுள்ள மீன்முதலியவைகளுக்குச் சொற்பப் பிரகாசமு மிருக்கின்றன. சொற்பப்பிரகாச மிருக்கின்றதென்பதற்குச் சாக்ஷி, சூரியன் அக்கினி முதலியவைக ளில்லா இருட்காலத்தில் அவைகள் பிரகாசிக்கின்றன. ஜோதிவிருக்ஷமும் முற்று மிருண்டகாலத்தில் ஜோதியாய் விளங்குகின்றது. அதில் இருடகாலத்தில் புத்தகங்களை வைத்துக்கொண்டு பிள்ளைகள் படிப்பதுமுண்டு. அவ்வாறு இருள் நிறைந்தகாலத்தில் கண்ணினிடத்துப் பிரகாசம் காணப்படுகின்றதா? இல்லையே. அன்றி ஒளிநூல்களிலே வல்லசாஸ்திரிகளும் கண்ணுக்கு ஒளியிருப்பதாய் ஒப்புக்கொள்ளுகின்றாரில்லையே. கண்ணினது ஒளியும் சூரியனது ஒளியும் ஒன்றுபட்டுநிற்கும் தன்மையதென்றும் அது பிரிக்கவொண்ணாதென்றும் வியாக்கியானக்காரர் கூறுகின்றார். கண்ணுக்கு ஒளியே இல்லாமையால் சூரியனொளியோடு கண்ணொளியொன்றுபடுமென்பதும், அது பிரிக்கவொண்ணாதென்பதும் வாய்வார்த்தையேயாம். கண்ணுக்கொளியிருப்பதாகவே வைத்துக்கொள்வோம். அதனை லிவர்க்குவந்த ஆதாயமென்ன? இருவொளியும் ஒன்றோடொன்று மோதும். ஒருகாற்றோடு மற்றொருகாற்று மோதுவதுபோலாம். இந்த வுவமானத்தினால் இருபொருள்களும் கண்டப்பொரு ளாகின்றன. பூரணமான பதியின்கண் வேறொரு பொரு ளெவ்வாறிருக்குமென்று கேட்டால் கண்ணொளியும் சூரியனொளியுமென்கிறார். உவமானப்படி பார்க்கின் பதியுங் கண்டப்பொருள்; மற்றப் பொருளுங் கண்டப்பொருள். இப்படியானால் கேட்டகேள்விக்கு என்ன சமாதானங்கொடுத்ததாயிற்று? சூரியனது அகண்டவொளியில் கண்ணொளி

கலந்ததென்னின் ஒளியுள்ளபொருள் சூரியன்மாத்திரமன்று; அனேகபொருள்களிருக்கின்றன. அவ்வவற்றினின்றும் புறப்படுமொளியானது ஒன்றோடொன்று மோதுமேயன்றி யொன்றிலொன்றடங்காது. வயிற்றில் ஆகாரமடங்குவதுபோல் அடங்குமெனின் அதனால் அடங்க இடங்கொடுத்தபொருளும், அடங்கியபொருளும் ஒன்றாகா; வேறு வேறுதான். கலத்தலினால் பூரணஞ் சித்திக்குமெனின் வெள்ளைமண்ணும் கறுப்புமண்ணும் கலந்தவிடத்து ஒருமண்ணிருந்த விடத்தில் மற்றொருமண் ணிராது. இந்த வுவமானப்படி பரிபூரணமான பதியின்கண் பசு இருத்தலும் உலகிருத்தலும் கூடா. கூடுமென்னில் வயிற்றிலாகார மிருத்தல்போலும், வெள்ளைமண் கறுப்புமண் கலத்தல்போலு மாகும். கண்ணொளி சூரியனொளி திருட்டாந்தத்தால் பதியும் பசுவும் வேறு வேறு கண்டப்பொருளென்றும், பதி பூரணமாகாதென்றும் நியாயமுகத்தா னேற்படுகின்றன. கண்ணுக்கொளியென்பது கிடையாதென்று முன்னரே கூறியுள்ளேமாகலின் அது ஆபாச திருட்டாந்தமெனவறிக. அது ஆபாச திருட்டாந்தமாகலின் பொருத்தமில்லாமற் போயிற்றென்பதாம். "பதி பசு ஆகிய இரண்டுபொருள்களில் ஆதாரமெது? ஆதேயமெது? ஆதார ஆதேயங்களுக்குத் திருட்டாந்தமொன்று கூறவேண்டும்." எனக்கேட்ட வினாவுக்கு இவர் விடைகூறாது நழுவவிட்டார்.

3-வது இலக்கமிட்டு "மாயைக்கு உலகம் பின்னமா? அபின்னமா? பின்னாபின்னமா? மாயையினிடத்து உலகுண்டாதல் மாதாவினிடத்துப் பிள்ளையுண்டாதல்போலா? வித்தினின்றும் மரமுண்டாதல்போலா? பால் தயிராவதுபோலா? மண் கடமாவதுபோலா? கயிற்றினிடத்து அரவுண்டாவதுபோலா? இவைகளல்லாவிடில் வேறெதுபோல்? மாயையின்கண் உலகம் பொருளா? குணமா? தொழிலா?" என்று கேட்ட கேள்விக்கும் பதில் வாய் திறக்கவில்லை. மற்றொரு வாதியை யேதோ கேட்கிறாரேயன்றி, இவர் தம்மதப்படி யேதும் விடையளித்தாரில்லை.

4-வது இலக்கமிட்டு ஆன்மாவிஷயத்தில் பல கேள்விகள்கேட்டோம். இந்தக்கேள்வியினாலே எமது மதத்துக்கே நேத்திரபங்கந் தேடிக்கொண்டதாகச் சொல்லுகின்றார். எமதுமத மின்னதென்றும் எமதுமத சித்தாந்த மின்னதென்றும் எமதுமதத்தில் ஆன்மாவினது இலக்கண மிப்படிப்பட்டதென்றும் நாம் கூறவில்லையே! அங்ஙனமாக அவ்வாறு கூறவேண்டிய அவசியமென்ன? "பேசப்போனாயோ, சாகப்போனாயோ" என்கிற பழமொழியை இவர் கேட்டேனுமிராரோ! வாயினால் பேசுவதினும் கையினால் எழுதுவதில் மிகுசாக்கிரதையா யிருக்கவேண்டுமென்று இவர் புத்தியிற் படவில்லையே! யாராவது கேள்விகேட்கும்போது அவரைத் தம்மனம்போல் ஒருமதஸ்தராகவைத்து அவரைத் திட்டாத திட்டுகளெல்லாம் திட்டிப் பேசாதபேச்சுகளெல்லாம்பேசி அவமதிப்பதில் இவர் முதற்றரப் பரீக்ஷைகொடுத்தவர். இந்தப் பரீக்ஷைக்குத் தக்க பரிசும் பெற்றவரெனக் கேள்வி. மத்தியஸ்தர் சரியென் றங்கீகரிக்கும்படி பேசவேண்டுமென்கிற நியம மிவர்க் கின்றுமில்லை, அன்றுமில்லை, என்றுமில்லை.

௸ 4-வது இலக்கத்தில் கேட்ட கேள்விகளுக்கு இவர் சரியாய் உத்தரவு சொன்னாரில்லை. "ஆன்மா வியாபகமெனின் சரீரத்துக்குள் மாத்திரம்

வியாபகமா? சரீரத்துக்கு வெளியிலும் வியாபகமா? சரீரத்துக்குள் வியாபகமெனின் அவ்வியாபகத்தினளவு எவ்வளவு? ஒரே அளவா? பலஅளவா? ஒரேஅளவெனின் எறும்பு சரீரத்துக்கும் யானைசரீரத்துக்கும் ஒரே அளவாயிருப்பதெங்ஙனங் கூடும்? பல அளவெனின் ஆன்மா விரிதல் சுருங்குதல்களான இலக்கணம் பெற்றிருக்கவேண்டுமே" என்று சரீரத்தை முன்னிலையாகவைத்துக் கேட்டகேள்விக்கு ஒரு சிறிதும் விடைகூறினாரில்லை. ஆனால் வேறுவிதமாய் அடியில் வருமாறு கூறினார். "ஆன்மா சிற்றறிவும் சிறுதொழிலும் உடையதெனவும் அது மாயையைநோக்க வியாபகமும் சிவவியாபகத்தில் வியாத்தியுமாகத் தக்கதெனவும்" என்பதாம். இவர் விடை, இராமேசுவரத்துக்கு வழி யெப்படியென்றால் வடக்குத்திசையைக் காண்பிப்பதுபோலிருக்கிறது. நாம் 'சரீரத்துக்கு வெளியிலும் வியாபகமெனின் இச்சாஞானக்கிரியைகளோடு கூடிய ஆன்மா, சரீரத்துக்கு வெளியிலுமிருந்து அறிதல்மயமா யிருக்கவேண்டும்' என்றதற்கு இவர், 'அதன் அறிவு தொழில்கள் வியாப்பியமாகிய ஆணவத்தாற் கட்டுண்டிருப்பனவெனவும் கூறுவதுண்மை' என்றார். மேல் "ஞானமயமான ஆன்மாவை அஞ்ஞானமெப்படி மறைக்கும்? ஒளியை யிருள்மறைக்குமா? சூரியனை யிருள்மறையாதே" என்றோம். அதற்கவர் "ஆன்மா ஞானவடிவமென்றது அதனது சிற்றறிவை. அச்சிற்றறிவுதானும் அறிவித்தாலன்றித் தானே யறியாது. இச்சிற்றறிவின் அநாதியே மலம் அல்லது அஞ்ஞான மறைத்தது சகஜம். இது என்போலுமெனின், கண்ணொளியைப் பூதவிருள் மறைத்ததுபோலாம்" என்று பகர்ந்தனர். ஆன்மா சரீரத்துக்கு வெளியிலேன் அறியவில்லையென்றால் ஆணவத்தால் கட்டுண்டிருப்பதே காரணமென்றார். இதனால் உள்ளேயிருக்கிற ஆன்மாவைக் கட்டவில்லைபோலும். அங்ஙனமாயின் உள்ளேயிருக்கிற ஆன்மா ஆணவத்தாற் கட்டுப்படாமையால் மோக்ஷத்துக்கு முயற்சிசெய்யவேண்டிய அவசியமில்லை. அநுபவ மெப்படி யிருக்கிறதென்னில் உள் ஆன்மாதான் மோக்ஷத்துக்கு வழிதேடுகிறதா யிருக்கிறது. ஞானமயனான ஆன்மாவை அஞ்ஞான மெப்படி மறைக்குமென்றதற்கு 'ஆன்மா ஞானவடிவமென்றது அதனது சிற்றறிவை'என்றதென்னை? மறைத்தகாரணஞ் சொல்வதைவிட்டு அதனது சிற்றறிவை என்பானேன்? ஆன்மாவுக்குப் பேரறிவென்ப தொன்றுண்டோ? அதனை ஆணவமறையாதோ? சிற்றறிவு பேரறிவு என்னு மிரண்டறிவும் ஆன்மாவுக்குச் சொந்தமா? ஒன்றுசொந்தமா? ஒன்றுசொந்தமானால் இரண்டாம்அறிவு கற்பிதமா? ஆணவம் கற்பிதத்தை மறைத்ததா? யதார்த்தத்தை மறைத்ததா? சிற்றறிவானாலுஞ்சரி, பேரறிவானாலுஞ்சரி, அறியாமை யெப்படி அறிவை மறைக்கும்? மேலே "கண்ணொளியைப் பூதவிருள் மறைத்ததுபோலாம்" என்கிறார். கண்ணுக்கு ஒளியுள்ளதென்பதை இந்தச்சன்மத்தில் மறக்கமாட்டார். குருட்டுப்பாடம் மூளையில் நன்றாயேறிவிட்டது. எத்தனைப் பிரத்தியக்ஷாநுபவங்களை யெடுத்துக்காட்டினாலும் தான்பிடித்த முயலுக்கு மூன்றேகாலென்ப தொப்பப் பிடித்தபிடி விடமாட்டார். விடமாட்டாரேனும் கண்ணுக்கு ஒளி யில்லையென்பதை யிவர்க்கு நாமிச்சமயத்தில் உறுதிச்சொல்லவேண்டியது நமதுகடமை. கண் ஒளியுள்ளதாயின் அதை மறைக்க இருளா லாகாது. விளக்கு எவ்வளவு சிறியதாயினும் அதை இருள்போய் மறைக்குமென்பதை யொருவரு மொப்பமாட்டார். கண்ணுக்கொளியுண்டென

வும் அதை யிருள்மறைக்குமெனவும் சொல்வது பொருத்தமில்லாமை யால் இந்தத் திருட்டாந்தம் பயனற்ற திருட்டாந்தமாயிற்று. ஆகவே ஞானமயமான ஆன்மாவை ஆணவ மறைக்குமென்று சொல்வது யுக்தி யனுபவ விரோதம். கண்ணொளியைப் பூதவிருள் மறைக்குமென்றும் அவ் விருள் சூரியனை மறையாதென்றும் உவமானங்கூறி, அஞ்ஞான இருள் ஆன்மவொளியினை மறைக்குமென்றும் சிவவொளியை மறைக்காதென்றும் எழுதினர். ஒளியை யிருள்மறைக்குமென்பது அனுபவவிரோதமாதலா லும் கண்ணுக்கொளியில்லாமையாலும் இருள் அதை மறையாமையாலும் ஆன்மவொளியினை அஞ்ஞானமறைக்கவில்லையென்றே சொல்லவேண்டிய தாகிறது.

ஆன்மாக்கள் வியாபகமா யிருத்தலால் பலஆன்மாக்கள் ஒரு இடத்தி லெவ்வாறிருக்குமென்று நாம் கேட்டதற்கு இவர் விடையளிக்கும் விநோ தம் இது:

"ஒரு சந்திரனை யேககாலத்திலுள்ளார் யாவரது கண்களும் பார்த்த தாகக் கொள்வோம். அப்படிப் பார்க்குங்கால் யாவரது கண்ணொளிகளு மிடைவெளியி லொன்றோடொன்று கலந்து வியாபித்தலும் அத்தனையும் அந்தச் சந்திரனை முற்றும் பரிசித்து இன்புறுதலுங் கூடுமாகையால் எமது வியாபகம் சாமஞ்சமேயாயிற்று." கண்ணொளி கண்ணொளியென்று விடா மல் கெட்டியாய்ப் பிடித்திருக்கிறவனாயில் இவர் வாதங்களெல்லாம் ஆபாச த்தின்மே லாபாசமாகத்தா னிருக்கும். சந்திரனுக்கு மொளியிருக்கிறதென்று சொல்லுகிறார். அதற்கு இயற்கையில் ஒளிகிடையாது. சூரியனது ஒளி யைப்பெற்றுத்தான் ஒளிசெய்கின்றது. ஷை சூரியனது ஒளி சந்திரனில் பட்டு அங்கிருந்து எங்கும் பரவிப் பலருடைய கண்களுக்குள்ளும் செல்லு கின்றது. அந்த ஒளியைப்பெற்ற கண்கள் பலவஸ்துக்களையும் பார்ப்பது போல் சந்திரனையும் பார்க்கின்றன. மொத்தமாய் ஒளியொன்றேயாம். அந்த ஒளிதான் எங்கும் பரவியிருக்கின்றது. ஒரேகாற்று எங்கும் வீசுவதுபோல ஒரேயொளி யெங்கும் பரவியிருக்கின்றது. ஒளியினது அணுவைத் தனித்தனி நோக்குழி யொரு அணு இருந்த இடத்தில் மற்றொரு அணு இல்லை. ஒளி கலந்து வியாபித்தல் என்பது சமுத்திரத்தில் ஜலரூபமான பலஅணுக்கள் ஒன்றோடொன்று கலந்து வியாபித்திருத்தல்போலாம். இதனால் ஒருபொரு ளிருக்குமிடத்தில் மற்றொருபொரு ளிராதென இவர் காண்பித்த வுவமானத் தினாலேயே விளங்கி யொரு ஆன்மா இருந்தவிடத்தில் மற்றொரு ஆன்மா இராதென ஏற்படுகின்றது. பல ஆன்மா ஒருஇடத்திலிராதென்பதற்கு "ஒரு இடத்தி லிரண்டுபொருளிருத்தல் கூடாது" என்றோம். அதற்கு "அது உருவப்பொருள்களிடத்தன்றி அருவப்பொருள்களிடத்திற் சிறவாது." என் றார். இது வெகு விந்தை! உருவப்பொருளில் சிறவாதபோது கண்ணொளி திருஷ்டாந்த மேன் எடுத்துக்கூறவேண்டும்? இவ்வாறு எழுதியதால் முன் கூறிய கண்ணொளி வியாபித்தல் திருட்டாந்தமும், கண்ணொளி சூரியனொளி திருட்டாந்தமும் ஆபாசமென இவரேயொத்துக்கொள்ளுகின்றவராகின்றார். உயிர் உடல் திருஷ்டாந்தத்திலும் உடல்: உருவதிருஷ்டாந்தமாதலால் உண் மையில் அதுவுந் திருஷ்டாந்தமாகாதென விளங்குகின்றது. "சிறவாது என்று கூறினதுகொண்டு திருஷ்டாந்தமே தள்ளுபடி யல்ல" வென்பாரானால் சிற

வாத திருஷ்டாந்தமென் றிவரே கூறிவிட்டமையால் அது தகர்ந்துபோய் விட்டமை காண்க.

இனிச் சிறக்கும் அருவப்பொருள் திருட்டாந்தந்தான் யாது? அது இன்னதெனக் கூறவில்லையே. உருவப்பொருள் திருட்டாந்தந்தான் இவர் கூறியவாறு சிறவாதுபோயிற்றே; இனித் தம் கக்ஷியைப் பலமாக்கிக்கொள்ள அருவப்பொருள் திருட்டாந்தத்தையாவது சொன்னாரா? இல்லையே! பின்னையெப்படி அருவத்தில் ஒருபொருளில் மற்றொருபொரு ளிருக்குமென்று கொள்வது? நாம் கூறுவ தியாதெனின் உருவத்தில் ஒரு பொருளில் மற்றொருபொருள் எப்படி யிராதோ அப்படியே அருவத்திலும் ஒருபொருளில் மற்றொருபொரு ளிருக்கவேமாட்டாது. இராமையினாலேதான் திருட்டாந்தம் யாதுங்கூறாது வாய்வார்த்தையாய்க் கூறித் தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறார். இப்படிக்கெல்லாம் ஆபாசமாய்ப் பேசிவிட்டு நமக்கு வியாபக இலக்கணந் தெரியாதென்றும் அதனால் கண்டகண்டவாறு பிரசங்கித்துக் கழிந்தோமென்றும் கூறினார். இவருக்குத் தெரிந்தமாதிரி வியாபக இலக்கணம் நமக்குத் தெரியாமற்போனது குறைவுதான். இதன்மேல் நமது தெளிவை விவேகிகள் யூகித்தறிவது சுலபம் என்றார். இவருடைய தெளிவுக்குமுன் நமதுதெளிவு குறைவுபட்ட சங்கதிக்கு வேறு விவேகிகள் வேண்டாம்; இந்தவிவேகியே யூகித்தறிந்து கொள்ளட்டும்.

இவர் நம்மைக்கேட்குங் கேள்வியில் உலகம் உருவமுடையதென்றும் ஆதலால் தொழிலல்லவென்றுங் கூறியிருக்கின்றார். இதைச் சற்று ஊன்றிப்பார்ப்போம். உலகம் என்பதன் பொருள் பஞ்சபூதத்தின் கூடுதலையே. பஞ்சபூதத்துக்கும் தனித்தனியே பெயரிருக்கின்றது. பஞ்சபூதத்தின் கூடுதலுக்கு உலகமென்றுபேர். பஞ்சபூதம் தனித்தனியே யிருந்தால் அதற்கு உலகமென்னும் பேரில்லை. மனிதனுடைய அவயவங்களெல்லாம் தனித்தனியே வேறு வேறு இடத்தில் இருந்தால் அதாவது ஒன்று சிதம்பரத்திலும் ஒன்று சீகாழியிலும் ஒன்று கடலூரிலும் இவ்வாறு பலவிடங்களிலிருந்தால் மனிதனென்று சொல்லப்படாது. பஞ்சபூதமு மொன்றாய்க்கூடினால் அப்போது உலகமென்று சொல்லப்படுகின்றது. அவயவங்களெல்லாமொன்றாய்க்கூடினால் அதற்கு மனிதனென்று சொல்லப்படுகின்றது. கூடுதலாகிய தொழிலே பொருளாகவும் பெயர்ச்சொல்லாகவும் சொல்லப்படுவதனுபவம். மண்ணாயிருக்குங்கால் கடமுளதெனக்கூறார் எவரும். மண்ணினிடத்து வளைதலாதித் தொழிலேற்பட்டால் கடமுளதெனக் கூறுவர். கடமுருவமென் றிவரும் மற்றவரு மங்கீகரிப்பர். உருவென் றங்கீகரிக்குங் கடம் மண்ணினிடத்து வளைதலாதித் தொழிலேயன்றி வேறன்று. நூல் தனித்தனியே யிருக்கும்போது ஆடையென்னும் பேரில்லை. நூல் குறுக்கு நெடுக்காக மாறும்போது ஆடையென்னும் பேர் பெறுகின்றது. மாறுதல் தொழிலன்றோ? அந்தத்தொழில் நிகழாவிடத்து ஆடையென்பதேது? இவ்வாறெதைநோக்கினும் தொழிலுக்கே பொருட்பெயர் வந்திருக்கிறது. அன்றி அத்தொழிலே யுருவமாகவுங் கொள்ளப்படுகின்றது. தொழிலைத் தவிரப் பொருளும் பெயருமில்லை. இது தத்துவசோதனையால் நிச்சயிக்கப்படுகின்றது. ஸ்தூலவிசாரணைபுரிவோர்க் கிஃதுதெரியாதாயினும் சூட்சும

விசாரணை செய்வோர் சரியென்றே அங்கீகரிப்பர். ஸ்தூலபுத்தியுள்ள இவர்க் கஃது விளங்காவிடில் யாம் யாது செய்வோம்!

இவர், வேதாந்திகளைச் சில கேள்விகள் கேட்கிறார் என்று முன்பு உரைத்தோம். அந்தக்கேள்விக்கு இவரபிப்பிராயப்படி அவர்கள் பதில்சொல்லவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் அவர்கள் பொய்வாதிகளென்றும் பிரமம் ஒன்றேயுண்டென்றும் மற்றவைகள் பொய்யென்றுசொல்லுகிறவர்களென்றும் பலவிடங்களிலும் இவரே சொல்வதினாலேதான். பதிக்குப் பசுவும் உலகமும் பின்னமா, அபின்னமா, பின்னாபின்னமா வென்னும் கேள்விக்கு உத்தரம் பதியொன்றே யுள்ளதென்று சொல்லுகிறவர்கள் சொல்லவேண்டியதா? பதியினிடத்தில் பசுவும் உலகமும் இருக்கின்றனவென்று சொல்லுகிறவர்கள் சொல்லவேண்டியதா? ஒருமரத்தில் கிளியிருக்கிறதென்று ஒருவனும், மரமொன்றேயுள்ளது, கிளி யில்லையென்று ஒருவனும் சொல்லுகிறானென்று வைத்துக்கொள்வோம். மரத்துக்குக் கிளி பின்னமா, அபின்னமா, பின்னாபின்னமாவென்று கேள்விகேட்க வேண்டுமானால் கிளியுள்ளதென்கிறவனைக் கேட்கலாமா? கிளியில்லையென்பவனைக்கேட்கலாமா? கிளி யில்லையென்பவனைக் கேட்கப்படாதென்றும், கிளியுள்ளதென்று சொல்பவனையே கேட்கவேண்டுமென்றும் பாமரர்கூடச் சொல்லுவார்கள். இதன்படியே பதியினிடத்தில் பசுவும் உலகமு முள்ளனவென்று சொல்பவர்களையே கேட்கவேண்டும். அவர்கள் உத்தரவுஞ் சொல்லவேண்டியதுதான். பசுவும் உலகமும் இல்லையென்கிறவர்களை ஷை கேள்வி கேட்கவும்படாது; அவர்களுத்தரவு சொல்லவேண்டிய அவசியமுமில்லை. அவர்களை அந்தக் கேள்வி கேட்பது எப்படி யிருக்கிறதென்றால் குதிரைக்குக் கொம்பு பின்னமா? அபின்னமா? பின்னாபின்னமா? வென்று கேட்பதுபோலிருக்கிறது. இவர் ஆன்மாவிடத்துக் கேட்கும் கேள்வியு மிவ்விதந் தெரியாமையையே காண்பிக்கின்றது. நாம் வேதாந்திகளுடைய சித்தாந்தத்தில் பசு உலக மிவைகள் சத்தென்றாவது அசத்தென்றாவது அல்லது வேறென்றாவது நாம் சொல்லவரவில்லை. இவர் பொய்வாதிகளென்று சொல்வதைக்கொண்டே இவர் மீது குற்றஞ் சுமத்தினோம்.

---

## இருளும் வெளியும் பேதமாதல் யாங்ஙனம்?

சோ. நாயகர்காட்டிய 'புறச்சமயத்தவர்க்கிருளாய்' என்னும் செய்யுளில் பொற்பணி அபேதமும், இருள்வெளிபேதமும், சொற்பொருள் பேதாபேதமும் எனக் கூறியிருக்கின்றது. பொன்பணி அபேதமென்பது சரிதான். இருளும் வெளியும் பேதமாதல் யாங்ஙனம் அமையும்? இருளென்பது பொருளல்ல; ஒளியினது குறைவாகும். வெளியென்பது ஆகாயம்; அது ஒரு பொருள்தான். ஆகாயம் என்னும் பொருளும் இருளென்னும் ஒளியின் குறைவும் எங்ஙனம் வேறாம்? ஆகாயத்தின் கண், இருள் வந்து போதலின் வேறெனப் பகர்வாமென்னின் அஃது பொருந்திலது.

பஞ்சபூதங்களில் ஆகாயம் முதற்பூதம். அதினின்றும் வாயு உற்பத்தி; அதினின்றும் தேயு உற்பத்தி; அதினின்றும் அப்பு உற்பத்தி; அதினின்றும் பிருதிவியுற்பத்தி. இவை யொன்றற்கொன்று காரண காரியங்களாம்.

அவைகளில் பிருதிவி காரியம்; அப்பு காரணம். அப்பு காரியம்; தேயு காரணம். தேயு காரியம்; வாயு காரணம்; வாயு காரியம்; ஆகாயம் காரணம். காரணத்துக்கும் காரியத்துக்கும் என்றும் அபின்னமேயாம். முன்னுரைத்தவாறு ஆகாயத்தினின்றும் வாயு உற்பத்தி. இதில் ஆகாயம் காரணம்; வாயு காரியம். ஆகாயத்திற்கும் வாயுவுக்கும் முதற்காரண காரிய சம்பந்தமிருப்பதால் அபின்னமே. எப்படிப் பஞ்சும் நூலும் காரணமுங் காரியமுமோ, எப்படி அபின்னமோ, அப்படியே ஆகாயமும் வாயுவுமாம். அதன் பேரில் வாயுவினின்றுந் தேயு உற்பத்தி. வாயு காரணம்; தேயு காரியம். வாயுவுக்குந் தேயுவுக்கும் முதற்காரணகாரிய சம்பந்தமிருப்பதால் அபின்னமே. எப்படி நூலும் ஆடையும் காரணகாரியமோ எப்படி அபின்னமோ அப்படியே வாயுவுந் தேயுவுமாம். பஞ்சினது காரியம் நூல்; நூலினது காரியம் ஆடை. பஞ்சினுக்கு அபின்னம் நூல்; நூலினுக்கு அபின்னம் ஆடை. ஆடை, நூலினுக்குமாத்திரம் அபின்னமன்று; பஞ்சினுக்கும் அபின்னம்மாம். அங்ஙனமே ஆகாயத்தினது காரியம் வாயு; வாயுவினது காரியம் தேயு. ஆகாயத்தினுக்கு அபின்னம் வாயு; வாயுவுக்கு அபின்னம் தேயு. தேயுவுக்கு மாத்திரம் அபின்னமன்று; ஆகாயத்துக்கும் அபின்னமாம்.

இனித்தேயுவினது குணம் ஒளி; ஒளியினது குறைவே இருள். ஒளியைவிட இருள் வேறன்று. ஒளியைவிட இருள்வேறு என்று கூறின் ஒளியென்னுங் குணத்தைத் தேயுப்பெற்றிருப்பதுபோல ஒளியில்லாத இருளென்னுங்குணத்தைப் பெற்றிருக்க வொரு பொருள் வேண்டும். அப்படிப்பட்ட பொருளொன்றிருப்பதாய்த் தெரியவில்லை. இதைத் திருட்டாந்தவாயிலாகப் பார்ப்போம். பகல் வர்த்தியை யிரவில் கொளுத்திவைக்குங்கால் அது எரிய எரிய அதற்குமுன் அங்கிருந்த இருள் காணப்படாது போய் ஒளி மிகுதியாகின்றது. பின் அது அவிய அவிய ஒளி தறைவு பட்டு ஒளியினது குறைவான இருள் மேற்படுகின்றது. நீண்டகழியைத் தறிக்கத் தறிக்கக் குறைவுபடுகின்றது. நீட்சிக்கும் குறைவுக்கும் இடமானபொருள் ஒன்றேயொழிய இரண்டன்று. அவ்வாறே ஒளிக்கும் இருளுக்கும் இடம் பொருளிரண்டல்ல; ஒன்றேயாம். ஒளிஎன்னுங் குணத்தை யெது குணியாய்ப் பெற்றிருக்கின்றதோ, அதுவே இருளென்னும் அதன் குறைவையுங் குணியாய்ப் பெற்றிருக்கின்றது. அந்தக் குணி தேயுவாம். இரண்டுங் குண(ஒன்று சேஷமானால்) மானால் ஒன்றிருந்தபோது மற்றென் றிருக்கவில்லையேயெனின் அவ்விரண்டும்நேர்விரோதமுள்ளனவாகலின் ஒன்றிருந்தபோதொன்றிரா. நீட்சிக் குறுகலான இருகுணமு மொன்றிருந்தபோதொன்றிருக்கின்றதா? இல்லையே. அப்படியிருந்தும் ஒருகழிக்கு நீட்சிக் குறுகல்கள் குணமன்றோ? அங்ஙனமே தேயுவுக்கு ஒளியும் இருளும் சேஷங்களாம்.

தேயுவானது முன்கூறியபடி ஆகாயத்தினது காரியத்தினுக்குங் காரியமாம்; ஆடை, பஞ்சினது காரியத்தினுக்குங் காரியம்போல. எப்படி ஆடை பஞ்சினுக்கு அபின்னமோ, அப்படியே தேயு, ஆகாயத்தினுக்கு அபின்னமேயாம். எப்படி ஆடையின் நீட்சிக்குறுகல்களுக்குப் பஞ்சு அபின்னமோ, அப்படியே தேயுவின் ஒளி அதன் குறைவான இருள்களுக்கு ஆகாயம் அபின்னமேயாம். குறுகலான கழி யிருப்பதுபோல் ஒளியின் குறைவான தேயு இருக்கிறதாவென்று சங்கைபண்ணக்கூடும். உஷ்ணத்தோடுகூடிய

வெந்நீரில் ஒளி காணப்படவில்லை. காணப்படாதேனுந் தேயு இருப்ப தாய் ஒத்துக்கொள்வோம். அதன்கண் ஒளியிருக்கின்றதா ? இருள்நிறைந்த நீரறையில் கொதிக்கும் நீரைக்கொண்டுபோய் வைத்தால் அங்கிருந்த இருள் ஓடிப்போகின்றதா? இல்லையே. இதனல் தேயுவினிடத்தில் ஒளியும் அதன் குறைவான இருளு மிருப்பனவாய் ஏற்படுகின்றது. ஆகாயத்தில் ஒளியாவ திருக்கக் காண்கின்ருேம்; இருளாவதிருக்கக் காண்கின்ருேம்.ஆடையினிடத் தில் நீட்சியாதல் குறுகலாதலிருக்கக் காண்கின்றதுபோலாம். ஆகாயத்தில் என்று தேயு உளதாமோ அன்று ஒளியாதல் இருளாதல் இல்லாதிராது. அங்ங னமே என்று பஞ்சின்கண் ஆடையுளதாமோ அன்று நீட்சியாதல் குறுகலா தல் இல்லாதிராது.

இதுவரையில் எழுதிவந்த நியாயங்களால் வெளியின்கண் இருள் பின்ன மென்று கூறுதல் ஒவ்வாது; அபின்னமென்றே கூறுதல் தகுதியாமென்க.

## சொற்பொருள் பேதாபேதமா?

சோமசுந்தரநாயகர் எழுதியவிஷயத்தில் உமாபதி சிவாசாரியார் எழுதிய பாட்டைப் பிரமாணமாகக் காட்டினரன்ருே? அப்பாட்டில் "சொற்பொருள் போல் பேதாபேதமும்" என்றிருக்கின்றது. அதை, தாம் அங்கீகரித்தே நமக்கெழுதி விடுத்திருக்கின்றமையான் அதற்கு அவரே யுத்தரவாதியாகின் ருர். ஆதலால் அதுவிஷயமாக நமக்குத் தோன்றும் குற்றங்களை விவகரிப் பாம்.

ஒரு பொருளுக்கு மற்ருெருபொருள் பேதமாகவேனும் அபேதமாக வேனும் இருத்தல்வேண்டும். பேதா பேதமென்று ஒருபோதுஞ் சொல்ல இயையாது.பேதமென்பதும் அபேதமென்பதும் எதிர்மறைக்குணங்கள்.எதிர் மறைக்குணங்கள் ஒரு குணிப்பொருளினிடத் திருக்குமென்ப தசங்கதம். சொல்லின்கண் பொருள் பேதமென்ருவது அபேதமென்ருவ துரைக்கவேண் டும். இரண்டுஞ் சேர்த்து ஒரு பொருளினிடத் துரைப்பது, சூரியனிடத்து ஒளியும் இருளும் ஒன்றுபட் டிருக்குமென்பதற் கொப்பாம். ஒரு பொருளி னிடத்து மற்ருெரு பொருள், ஒருகாலத்துப் பேதமாகவும் மற்ருெருகால த்து அபேதமாகவும் இருக்குமென்றுரைத்தல் பொருந்தாதோவென்னின், பொருந்தாது. யாங்ஙனமெனின் காட்டுதும். எது பேதமோ அது என்றும் பேதந்தான்; எது அபேதமோ அது என்றும் அபேதந்தான். மரத்தின்கண் பறவையென்னுமிடத்து அதுஎன்றும் பேதந்தான். அது ஓர்போதும் அபேத மாகாது. மரத்தின்கண் கிளையென்னுமிடத்து அது என்றும் அபேதந்தான்; பேதமாகாது. அங்ஙனமே சொல்லின்கண் பொருள் பேதமாயின் பேதமா யே யிருத்தல்வேண்டும். அபேதமாயின் அபேதமாயே யிருத்தல் வேண்டும். அதைவிட்டுப் பேதம் அபேதம் இரண்டையும் ஒன்றுகூட்டிப் பேதா பேத மென்று பேசுதல் பொருந்தாது.

இனிப் பேதம் அபேதமாகிய இரண்டனுள் எது உண்மையென ஆய்தல் செய்வாம். சொல்லின்கண் பொருளிருக்குமென்கை நமது மனோகற்பிதமே யன்றி வாஸ்தவமன்று. சொல்லானது ஒலிரூபம். ஒலிக்கெல்லாம் பொரு ளுண்டென்னின் சமுத்திரவொலிக்கும் காற்ருெலிக்கும் பொருளிருத்தல்

வேண்டும். அவ்வாறில்லை யென்பதை நாம் அநுபவமாய்க் கண்டறிகின்றோம்.
நாம் பேசுஞ் சொற்களிலாவது பொருளிருக்கின்றதாவென்னின் பொருளிரு
க்கின்றதாக நாம் கற்பித்துக் கொள்ளுகிறோமே யன்றி உண்மையில் சொல்
லின்கண் பொருளின்றென்பதே திண்ணம். சொல்லின்கண் பொருளிருப்
பது உண்மையாயின் ஒருசொல் ஒருபொருளையே யுடைத்தாயிருக்கவேண்
டும். அவ்வாறில்லை யென்பதற்கு நீகண்டே சாக்ஷிபகரும். ஒருசொல்லுக்குப்
பலபொரு ளிருக்கின்றன. ஒருசொல்லுக்குச் சந்தர்ப்பம்நோக்கிப் பலவாறு
பொருள்செய்கின்றோம். "படி" என்னுஞ் சொல்லுக்கு "வாசி" என்றும்,
"அளத்தல்கருவி" என்றும், "பூமி" என்றும், "குதிரை" என்றும் பலபொ
ருள்களிருக்கின்றன. படி என்னுஞ் சொல்லுக்குப் பொருள் ஒன்றாகவே
யிருக்குமானால் மற்றொருபொருளுக்குஅது இடங்கொடாது.கொடுக்கின்றமை
யின் இன்னசொல்லுக்கு இன்னதுதான் பொருளென்று கூறுதற்கிடமில்லை.
ஒருசொல்லுக்கு ஒருபொருள் உரைசெய்யும்போது மற்றப்பொருள் வேறு
பட்டுப் போகின்றது. மற்றொரு உரைசெய்யும்போது முன்னிருந்த பொருள்
பிரிந்துபோகின்றது. எந்தெந்தச் சமயத்தில் எந்தெந்தப்பொருள் செய்கின்
றோமோ, அந்தந்தச்சமயத்தில் அந்தந்தப்பொருளாய்க் காட்டுகின்றது. உண்
மையில் எந்தப்பொருளும் தனக்குரியதல்ல. அன்றி நாம் தமிழில் ஒருசொல்
லுக்கு ஒருபொருள் கூறுவோமானால் இதரபாஷைக்காரர் அதேசொல்லுக்கு
வேறுபொருள் கூறுகின்றனர். நாம் காது என்னுஞ் சொல்லுக்குச் "செவி"
என்று பொருள்கொண்டால், தெலுங்கர் ஷை சொல்லுக்கு "அல்ல" எனப்
பொருள் கொள்கின்றனர். காது என்னுஞ் சொல்விஷயமாக வடதிசையி
லிருந்து தென்திசைக்கு வந்த ஒருதெலுங்கனுக்கும், தென்திசையிலிருந்து
வடதிசைக்குப்போன ஒருதமிழனுக்கும் நேர்ந்த ஓர்சிறுகதை யாவர்க்கும்
தெரியும். எந்தச்சொல்லுக்கும் எந்தப்பொருளும் உரியதன்றாயினும் உரி
யதுபோல் தோன்றுகின்றது. இந்தத் தோற்றத்தை ஆழ்ந்த விசாரணையில்லா
மருட்சியுடையோர் உண்மையென நம்பி, சொல்லுக்கும்பொருளுக்கும் அபே
தஞ் சாதிக்கின்றனர்.

ஸ்படிகமானது தான் சுத்த வெண்ணிறமாயிருந்தும், ஷை வெண்ணிறம்
தனக்கு அபேதமாயிருந்தும் தன்னை வந்தடுத்த கறுப்புமுதலிய நிறமுள்ள
பொருள்களின் நிறத்தைத் தான் அபேதப்படுத்திக்கொண்டு,ஷை கறுப்புமுத
லிய நிறங்களே தனக்குரியதாகவும் அபேதமாகவுங் காட்டுகின்றது. அவ்வா
றே சொல்லின்கண் பொருள் அபேதமாய்க் காட்டுகின்றது. ஸ்படிகமானது
கறுப்புமுதலிய நிறத்தை யபேதமாய்க் காட்டினும் உண்மையில் எப்படிப்
பேதமோ, அப்படியே சொல்லானது பொருளை அபேதமாய்க் காட்டினும்
பேதம் பேதமேயாம். ஸ்படிகத்துக்கு இயற்கைக்குணம் வெண்மையே;
அங்ஙனமே சொல்லுக்கு இயற்கைக் குணம் ஒலியாம். மற்ற யாவும்
செயற்கையான பேதகுணங்களாம். இங்ஙனமாக, சொல்லும்பொருளும்பே
தாபேதமென்று உமாபதி சிவன்சொன்னதும், ஸ்வயபுத்தியின்றி அதைச்
சத்தியமென இந்தச் சூளைவாசி நம்பி மோசம்போனதும், தாம் மோசம்போ
னதுமன்றி நமக்கு அச்செய்யுளையெடுத்து மேற்கோளாகக் காட்டியதும், அது
தமது சித்தாந்தந்தானெனச்சொல்லியதும், அதோடுநில்லாது 'அதன்பொரு
ளை நல்லாசிரியரை யடைந்து அவருக்கேவல் செய்து கேட்டுத் தெளிந்தின்
புறுவாராக' என்று நமக்குக் கட்டளையிட்டதும் வியப்பினும் வியப்பே!

## ஆன்மா எல்லாமாதல்.

"இவர் ஆன்மா எல்லாப்பொருளுமாகிய தென்னுங்கால், அவ்வெல்லாப் பொருளும் ஆன்மாவைப்போல அறிவாயிருத்தல் வேண்டும். இவர் கூறு மான்மாவை அறிவென்பது சொல்லேயன்றி அதற்குப் பொருளில்லை'' என்கிருர். இவர் வேதாந்தத்தை மறுக்க வருகின்றமையால் அவ்வேதாந்தத்தைக் கொண்டே இவர் ஆசங்கைக்கு உத்தரங் கூறுவாம். இவர் 'ஆன்மா எல்லாப் பொருளுமாகிய தென்னுங்கால்' என்பதில் 'ஆன்மா' என்னுஞ் சொல்லின் பொருள் யாது? ஆன்மா என்னுஞ்சொல் பெரும்பாலும் பிரமத்துக்கும், சிறுபாலுஞ் சீவனுக்கும் வேதமுதலிய கலைகளிற் பிரதிபாதிக்கப்படுகின்றது. இவர் எதில் உபயோகித்து மேற்படி ஆக்ஷேபஞ் செய்கின்ருர்? பிரமப்பொருளுக்குபயோகித்து ஆக்ஷேபிக்கின்ருரென்னின் அது பொருந்தாது; பிரமம் எல்லாப்பொருளு மாகின்றதென்பது சுருதிமுதலிய வித்தைகளின் சம்மதமாதலாலென்க.

### யசுர்வேதம் வராகோபநிஷத்.

சிவனே சகலமும், சிவனைக்காட்டிலும் வேறொன்றுமில்லை.

### மநுஸ்மிருதி பிருதுவாக்கியம்.

எல்லாம் பிரமசொரூபமென் றறிந்திருக்கையால்.

### வாயுசங்கிதை பரசிவப்பிரபாவம்.

நிற்பனநடப்பனயாவுமோர்ந்திடில்
பொற்புறுசடையவனுருவம்போலுமால் (க)

### திருவாசகம்.

வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி யூனாகி யுயிராகி.

### திருஞானசம்பந்த சுவாமிகள்.

தீயவனீரவன் பூமியவன் றிருநாரையூர்தன்னில்

### திருநாவுக்கரசு சுவாமிகள்.

எல்லாவுலகமுமானாய் நீயே.

### சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

ஊனாயுயிரானாயுடலானாயுலகானாய்
வானாய்நிலனானாய்கடலானாய்மலையானாய்.

### திருமந்திரம்.

தானே கடல் மலை யாதியுமாய் நிற்கும்.

இப்பிரமாணங்களினாலேயெல்லாம் பிரமம் எல்லாமாய் விளங்குகை சித்தாந்தமாகின்றமையின் இவருடைய ஆக்ஷேபம் வேதநெறி நில்லாருடைய ஆக்ஷேபமாமென்க. இதன்மேல் பிரமம் எல்லாமாயிருக்குமென்னின் எல்லாப்பொருளுஞ் சடமாயிருப்பதால் அது ஒவ்வாதென்றும் பிரமம் அறிவாயிருப்பதால் எல்லாப்பொருளும் அறிவா யிருக்கவேண்டுமென்றும் சொல்லவந்து, 'அவ்வெல்லாப்பொருளும் ஆன்மாவைப்போல அறிவாயிருத்தல் வேண்டும்' என்ருரன்ருே? அதன்பொருள் விளங்காமையாற்ருன் இப்படிப்ப

ட்டசுருதிவிரோத ஆக்ஷேபங்கள் தோன்றுதற் கிடனுகின்றது. அறிவு சொரூபமான பிரமமென்னும் ஆன்மா, எல்லாமாயிற்றென்பதில் ஆன்மா காரணம், எல்லாம் அதாவது உலகு காரியம். காரணம் அறிவாயிருப்பதால் காரியமும் அறிவாயிருக்கவேண்டுமென்பது பிரதிவாதியாருடைய கருத்து. இதுவிஷயமாக இவர்க்கும் இவர் நண்பர்க்கும் இப்பிரமவித்தையிற்றுனே விரிவாய்ச் சமாதானம் வந்திருக்கின்றமையின் இவ்விடத்திற் சுருக்கி வரைவாம். அறிவு வடிவான மனத்திலிருந்து அறியாமை வடிவான சொப்பனவுலகு தோன்றுவதே போதுமான சமாதானமாம். மற்றவைகளையெல்லாம் பழைய பிரமவித்தையிற் காண்க. அறிவு வடிவான சிவன், அறியாமை வடிவான பன்றியுருவெடுத்துப் பன்றிக்குட்டிகட்குப் பால்கொடுத்த கதை திருவிளையாடற் புராணத்தில் இவர் வாசித்திருக்கலாமன்று? அதில் சித்வடிவான சிவன் காரணம்; சடவடிவான வூனுடற்பன்றி காரியம். காரியமும் சடமுமான பன்றி யுடலில் காரணமான அறிவுத்தன்மையைக் காட்டுவாரா? சித்தானது சடவடிவாய் ஆகமாட்டாதெனக் கொண்டு, "அப்படியாகிறதானுல் பிரமத்தை அறிவுவடிவெனச் சொல்லப்படாது, சொல்லப்படாதாகவே, சடவடிவாகத்தான் சொல்லவேண்டு" மென்கிற அபிப்பிராயங்கொண்டு, 'இவர் கூறும் ஆன்மாவை அறிவென்பது சொல்லேயன்றி அதற்குப் பொருளில்லை' என்கிறுரன்றே? அங்ஙனமாயின், சிவன் ஊன் குருதி என்பு முதலிய வசுத்தப்பொருணிறைந்த சடவடிவப் பன்றியுருவானதால், இவர் கூறிய நியாயப்படி அச்சிவன் ஞானவடிவினனென்பது சொல்லேயன்றிப் பொருளில்லையென்றுகின்றது. சிவன் ஞானவடிவினனன்றிச் சடமாகிறபோது, சிவன், உலகஜடப்பொருளில் ஒன்றும்.

## ஜீவன்வேறு, பிரமமான ஆன்மாவேறு.

இவர் வெருகதியைக் கண்டுவிட்டதுபோல "இவரறியாமை துக்கங்களோடுகூடி யிரவும்பகலும் விஷயவாசனைகளின் மொத்துண்டு வருந்தி யுழல்கின்றுர். இவரதறிவு சுழுத்தியில் இருந்தவிடந் தெரியாமலிருக்கின்றது. கருவி கரணங்களைக் கூடிச் சாக்கிரத்தில் வந்தபோது நான் அறிவு என்று தலைநீட்டுகின்றது. அறிவே யெல்லாமாவதும், வியாபகமாவது முறுதியாயின் இவ்வசம்பாவிதங்களுக்குக் கதியென்னை"? என்கிறுர். இவர் எடுப்ப தொன்று, முடிப்பதொன்று. இவர் ஜீவன்படும் பாட்டையெல்லாஞ் சொல்லிக் கடைசியில் கொண்டுபோய் ஆன்மா அதாவது பிரமத்தோடு முட்டுப்படுத்தி யிடர்ப்படுத்துகின்றுர். இவர்க்கு அத்வைதத்தைத் தூஷிக்கவேண்டுமென்கிற ஆசை மிகுதியாகவுண்டு. ஆனுல் தூஷிப்பதற்கு உண்மையான விஷயம் அகப்படவில்லை. என்செய்வார் பாவம்! அதனுல் ஒன்றைக்கொண்டுபோய் இன்னென்றில் முட்டவிட்டுக் குற்றங்கூறித் தூஷிக்கின்றுர். ஜீவலக்ஷணம் வேறு,பிரமப்பொருளுக்குப் பிறிதொருபெயரான ஆன்மலக்ஷணம் வேறெண விவரறியார். அத்வைதமதத்தில் தோஷங்கூறவேண்டி ஜீவனையெடுத்து அதன் இலக்கணத்தை முன்புகூறி, அந்த ஜீவனை அப்படியே வைத்து, பின்பு அந்தஜீவன் பிரமவிலக்கணம் பெற்றவனுகச் சொல்லிக் குற்றங் கூறுகின்றுர்.ஜீவனுக்கும் ஈசுவரனுக்குமே மலையுங்கொசுவும்போல வெகுபேதமிருக்க, அவ்விரண்டிற்கும் அதீதமாய்த் தாக்கற்று விளங்கும் ஆன்மா அதாவது பிரமவிலக்கணத்தோடு ஜீவவிலக்கணத்தை யொன்றுபடுத்திக் கூறு

வது நியாயமாமோ! இப்படியிவர்கூறுவதால் வேதவேதாந்த நூல்களுக்கு ஏதுங் குறைவில்லை. அதன்பொருளை அறியாமல் தூஷிக்கும் இவர்க்கே குறை யென்பதாம்.

'இவர் அறியாமை துக்கங்களோடு கூடி யிரவும் பகலும் விஷயவாசனை களின் மொத்துண்டு வருந்தி யுழல்கின்றார்' என்கிறாரன்றோ? இஃதுண்மை தான். இதிற் றோஷம் ஒன்றுமில்லை. வருந்தியுழல்வது ஜீவனேயாம். 'இவர தறிவு சுழுத்தியில் இருந்தவிடந் தெரியாமல் இருக்கிறது' என்கிறாரன்றோ? இஃதுமுண்மைதான். ஜீவனுக்குக் கரணக்கூட்டுறவில்லாமையால் விஷயங் களை அறிய வகையில்லை. இதுபோகக் 'கருவி கரணங்களைக்கூடிச் சாக்கிரத் தில்வந்தபோது நான் அறிவுஎன்று தலை நீட்டுகின்றது' என்றார். இதிலுங் குற்றமில்லை. எல்லோருடைய அநுபவமும் வேதமுதலிய நூற்பிரமாணமும் இதுவேயாம். இதை யிவரும் படித்துக் காண்பிக்கின்றனரேயன்றி நூதனமாய் ஏதுங்கூறினாரில்லை. யாவருக்குந் தெரிந்த பாடத்தைத் தமக்குந் தெரியு மென்று படித்தார். ஜீவன் சாக்கிராவஸ்தையில் வரும்போது கரணங்க ளின் கூட்டுறவால் விஷயங்களை யறிகின்றது. அறிகின்றபோது அறிவுதலை நீட்டித்தானே யாகவேண்டும். இதுவரையில் ஜீவனைப் பற்றிக் கூறினார். இனி யொன்றைப் பிறிதொன்றாக மாறுபடுத்திக் குற்றங் கூறுகின்றார். அது பிரமலக்ஷணத்தை ஜீவலக்ஷணமாகக் கூறிக் குற்றங் கூறுவதாம். அது 'அறி வேயெல்லாமாவதும் வியாபகமாவதும் உறுதியாயின்,இவ்வசம்பாவிதங்களுக் குக் கதியென்ன?' என்பதாம். எல்லாமாவதும் வியாபகமாவதும் பிரமமே யன்றி ஜீவனல்ல. ஆதலால் இவர் சொல்லுகிறபடி ஷை அசம்பாவிதங்கட் குப் பிரமம் உடன்படாது. அசம்பாவிதங்கட் குடன்படுவது ஏகதேசமான ஜீவனேயாம். ஜீவனறிவுக்கும் ஈசனறிவுக்கும் சாக்ஷியாய் விளங்கும் பிரம அறிவைக் கொண்டுபோய், ஈசன் அறிவுக்கும் கீழ்ப்பட்டு விளங்கும் ஜீவ அறிவோடு ஒற்றுமைப்படுத்திக் கூறுவது தெரியாமையாயின் விளக்க மிகுதி யாமென்க. பிரமத்துக்கும் ஜீவனுக்கும் ஆன்மா வென்கிற பேர் பொதுவா யிருப்பதால் அது இவரை விபரீதப்படுத்தி அலைக்கழித்து நடுத்தெருவிவிழு த்து விடுகின்றது. அறியாமை, மொத்துண்டு வருந்தல், சுழுத்தியில் இரு ந்த விடந்தெரியா திருத்தல்,கருவி கரணங்களோடு கூடிச் சாக்கிரத்தில் வரு தல், அறிவெனத் தலைநீட்டல் இவையெல்லாம் ஜீவனதிலக்கணம். எல்லா மாவதும் வியாபகமாவதும் பிரமத்தினிலக்கணம். இங்ஙனமாக, அவ்விரண் டனையும் ஒரு இலக்கணத்துக் குட்படுத்தி முட்டச்செய்வதும், ஒன்றைப் பிறிதொன்றாக மாறுபடுத்திச் சொல்வதும் கற்றவரிலக்கணமன்று; மற்றவரி லக்கணமாம். கிறிஸ்தவர் முதலியவர் ஆன்ம சத்தத்தை ஜீவனுக்குபயோ கிப்பவர்; வேதப்பிரமாணவாதிகளோ பெரும்பாலும் பிரமத்துக்கும் சிறுபா லும் ஜீவனுக்கும் உபயோகிப்பவர். பின்னவர் சொல்வது வேதசம்மதமாயிருப் பதால் அப்படியே அத்வைதிகளுபயோகிக்கின்றார்கள். இப்படி யுபயோகிப் பவர்களைக் குற்றங் கூறுவதால் இவர் அவைதிகரென்பதற்கு ஏதும் ஆக்ஷேப மில்லை. இன்னாருக்குக் கண்ணுண்டு, இன்னாருக்குக் கண்ணில்லை யென அறி யக் குருடனாலாகாது. அது போல "அத்வைதிகள் இன்னவிடத்தில் ஆன்ம பதத்தைப் பிரமத்துக் குபயோகிக்கின்றார்கள், இந்தவிடத்தில் ஜீவனுக்குப யோகிக்கின்றார்கள்" என இவருக்கு அறியவகையில்லை. ஏனெனில் இவரு க்கு வேதசாஸ்திரக் கண்ணில்லை. தமது கண்ணில்லாமையை யுணராது தமது

கண்ணில்லாமையையே ஏதுவாகக்கொண்டு, கண்ணுள்ள பிறரைக் குருடராக்கப் பார்க்கின்றார்.

## பிரமம் பிரமபட்டாபிஷேகத்தைக் கட்டியாளும்.

நிற்க, "தேகம், இந்திரியம், பிராணன், கரணம் இவைகளைக்கூடாமல் தனி நின்று, தான் அறிவு வடிவாயிருத்தலைக்காட்டிப் பதிஸ்தானத்துக்குரிய பிரஹ்மபட்டாபிஷேகத்தைக் கட்டியாளட்டும் பார்ப்போம்" என்கிறார். அத்வைதிகள் ஆன்மசத்தத்தைப் பிரயோகிக்கும் இடத்தைத் தெரிந்துகொள்ளுகிறவரையில் இவர் எழுத்து நீரிலெழுத்தாகு மென்க. ஆன்மாவை ஜீவனெனக்கொள்ளின் அது கரணங்களோடு கூடினாலல்லது விஷயங்களை யறிதலாகாதென்பது நூற்பிரமாணமும் யாவருடைய அநுபவமுமாம். இவர் கூறும் அறிவைப் பிரமமெனக்கொள்ளின் அது சுட்டுதலற்ற அகண்டஞான மே வடிவாகப்பெற்றிருக்கின்றமையினானும் சுட்டறிவுக்கெட்டா ததீதப்பட்டிருக்கின்றமையினானும் அது சுருதிப்பிரமாணமாயிருப்பதனானும் சுட்டறிவுக் கெட்டாதென்பதாம். இது ஜீவபோத முன்னிட்டெழுந்த கேள்வியாமென்க. கரணங்களொழிந்து ஜீவனொடுங்கிநிற்கும் சுழுத்தியவத்தையில் சுகமாய்த்தூங்கினேனென்கிற அநுபவமிருப்பதாலும் அதைத்தவிர்க்க எவரானுமாகாமையினானும் சுகத்தையறிவது அறிவாயிருக்கவேண்டுமாகலானும் இவர் கேட்டபடி 'தேகம், இந்திரியம், பிராணன், கரணம் இவைகளைக்கூடாமல் தனிநின்று தான் அறிவு வடிவாயிருத்தலை' அநுபவமாய்க்காட்டி விட்டோமென்க. இம்மாதிரிக்கேள்வி கேட்பவர் ஆஸ்திகராகார்; நாஸ்திகரே யாவர். இவர் பலவகையிலும் நாஸ்திகராவதால் இவ்வொரு விஷயத்தால் நாஸ்திகராவது இவர்க்கு அவ்வளவு இழிவல்ல.

### வாயுசங்கிதை ஞானநிலைமை.

ஒன்றும்அறியார் இவ்வகையேயுரைப்பர் புந்திமுதலொடுங்க, இன்று துயின்றேன் எழுந்துநன்காய்த்துயின்றேனென்ன இசைத்தமையால். (உஎ)

என்று கூறியபடி கரணங்களில்லாவிடத்தும் ஓர்விதமாய் அறிவுளதெனப் பெற்றாமென்க.

'பிரமபட்டாபிஷேகத்தைக் கட்டி ஆளட்டும் பார்ப்போம்' என்கிறாரன்றோ? அதையும் பார்ப்போம். ஜீவன்ஆளுகிறதோ? பிரமம் ஆளுகிறதோ? தெரியவில்லை. ஜீவன் ஆளுகிறதென்னின், பிரமசந்நிதானத்தில் ஜீவன் ஓர் பொருளாய்நின்று தலைகாட்டாதாகலின் அவ்வார்த்தை செல்லாது. பிரமம் ஆளுகிறதென்னின், அது இப்போது அதாவது இவர்கூறியபோது ஆளுகிறதல்ல. என்றுமே யியற்கையாய் ஆண்டுகொண்டேதானிருக்கின்றது. சந்திரன் சந்திரபட்டத்தையும், சூரியன் சூரியபட்டத்தையும் பெறுவது ஒருவர் சொன்னபிறகன்று. இயற்கையாகவே பெற்றிருக்கின்றார்கள். ஜீவன் பொருளாயிருந்து பிரமபட்டத்தைப் பெறுமென்ப திவர்மதக்கொள்கை. ஜீவன் அல்லது ஜீவான்மா என்பதொன்று பிரமத்தைப்போலச் சத்துப்பொருளாயிருந்து பிரமபட்டத்தைப் பெறுமென்னின், பிரமம் பரிபூரணப்பொருள் என்னும் சுருதிவாக்கியம் பங்கப்பட்டுப்போம். ஒருராஜனது பட்டத்தை மற்றொருவன் பெற்றானென்றால் அதுகூடும். ஏனெனின் ராஜனும் கண்டப்பொருள்; மற்றொருவனும் கண்டப்பொருள். அவ்வாறு பிரமம் கண்டப்

பொருளாமா? பரிபூரணபிரமத்தின்கண் மற்றொருபொருள் சத்தாய் இருக்கவே யிடனில்லாதபோது பிரமபட்டத்தை ஜீவன்பெறுமென்பது பரிகாசாஸ்பதமாமென்க. இது பாம்புபோய்க் கயிற்றைக்கடித்துக் கொன்றதென்பதற்குச் சரியாயிருக்கின்றது. பிரமத்தைக் கண்டப்படுத்தி, ஜீவன் பிரமபதத்தைப் பெறுமென்பது கண்டமானபதவி முத்தியேயன்றி அகண்டமான பரமுத்தியன்று. இந்தப்பதவிமுத்தி கைலாயாதிகளிலுண்டு. பரமுத்தி அங்ஙனமன்று; ஜீவன் தனது போலிவடிவத்தையிழந்து, பரவடிவாய் விளங்குவதாம். இந்தமுத்தி இச்சரீரத்திலேயேயுள்ளது. பிரபலசுருதி சம்மதமான இப்படிப்பட்ட முத்தியைப்பெறும் அத்வைதிகளைநோக்கி, 'பதிஸ்தானத்துக்குரிய பிரமபட்டாபிஷேகத்தைக் கட்டியாளட்டும் பார்ப்போம்' என்று பதவிமுத்திக்குரிய கேள்விகேட்பது ஞானநூல்விசாரணைக் குறைவேயாம். பிரமத்துக்கும் பூரணத்வங்கூறி, அத்துடனே ஜீவான்மகோடிகளுக்கும் தனித்தனிப் பூரணத்வமும் சத்துத்தன்மையுங்கூறி, ஜீவான்மாக்களுக்கு வாய்மொழியால் பிரமபட்டம் வந்துவிட்டதாகப் (வெறும்வாயைமென்று களிப்பதுபோல) பொய்ம்மகிழ்ச்சிபெற்றுப் பொய்ம்மொழிபுகல்பவர் அத்வைதிகளன்று; இவர் வகுப்பினரேயாம். 'ஆளட்டும்பார்ப்போம்' என்றது ஜீவபோதத்தின் தடிப்பும், அகங்காரத்தின் மிகுதியுமாமென்க. அத்வைதிகள் அவ்வாறு சொல்லவேமாட்டார்கள் ; சொல்லவுமில்லை. அப்படிச்சொல்பவர் இவர் வகுப்பினரேயாகலின் ஷை குற்றத்திற்கு இவரே யாட்பட்டனரென்க. இவர் பிரபல சுருதிநூற்பொருளைச் செவ்வனே யுணராமையின் இவ்வாறு தாறுமாறாய்ப் பேசி விழலராகின்றார்.

## தேகத்திற் சிறைபட்டிருப்பது ஜீவனே.

இனிவரும் ஆசங்கைகளாவன—:"இவரது ஆன்மா, அல்லது பிரமம்
"தேகத்திற் சிறைபட்டிருப்பதொன்று. இவரது மதம் ஆன்மா வியாபகப்
"பொருளென்று கூறுகின்றது. அங்ஙனமாயின், அது சாக்கிராதியவஸ்தை
"களை யெய்தி அறிவு ஏறியுங்குறைந்தும் இயங்குமாறென்னை? சரீரத்துனுள்
"அது வியாபித்ததெனின், கண்ணொன்றினைப் பார்க்கிறபோது அதில் வியா
"பித்த ஆன்மா செவியில் வியாபித்து ஒன்றினைக்கேளாததென்னை? இப்படி
"யே யேனைஇந்திரிய வியாபாரங்களிடத்துங் காண்க. சாக்கிரத்தில் நுதலி
"னும், சொப்பனத்தில் கண்டத்தினும், சுழுத்தியில் நாபியினும், துரிய துரி
"யாதீதங்களில் வேறிரண் டிடங்களினும் தங்கி அறிவு ஏறியுங் குறைந்தும்
"நின்று சீவிக்கும். ஆன்மாவைச் சரீரத்தின் உள் வியாபகமுடையதென்
"னும் வாதம் எங்ஙனே மணம் பெறும்? உள்வியாபகத்துக்கே யோக்கியதை
"கெட்டிருக்கும் அவ்வான்மா வெளி வியாபகமுடையதென்னும் வாதம்(குரு
"வுக்குக் குதிரைமுட்டை வாங்கிக்கொடுத்த) அவிவேக பூரணகுருவின் சீட
"ர்களுக்கு மாத்திரமே பயன்படத் தக்கதென்க." என்பனவேயாம்.

இவர்,ஆன்மாவைச் சுருதி ப்ரமாணப்படி பிரமமென்றுகூறும் பக்ஷத்தில் அது வியாபகம் வியாபகமேயாம். ஜீவான்மாவென்னும் பக்ஷத்தில் அங்ஙனம் வேதாந்தநூற்கள் கூறவில்லை. ஜீவான்மாவை வியாபகமென்று கூறுவது பதினான்கு வித்தைகட்கும் விரோதமான விவரதுநூலேயாம். ஆன்மாவான பிரமம் தேகத்திற் சிறைபட்டிருப்பதென்று கூறுவது சுத்தபொய்; ஜீவனே சிறைபட்டிருக்கின்றது. இவரது வார்த்தைகளெல்லாம் உளறுத

லாக விருக்கின்றமையான் இவர்க்கு வேதாந்த நூற்பயிற்சி அற்பமுமில்லையெனத் தெரிகின்றது. ஆன்ம சிவப் பிரமத்துக்கு வேறாகப் பூரண ஆன்மாக்கள் பல, சத்துப்பொருளாகச் சொல்பவர் இவரேயாம். இங்ஙனமாக ஜீவான்மாவுக்கு வியாபகங்கூறாத வேதாந்திகளைப்போய் இவ்விதகேள்வி கேட்பதும், பிரமம் சாக்கிராவஸ்தையை யெய்துதல், அறிவு ஏறியும் குறைந்தும் இயங்குதல், சரீரத்துனுள் வியாபித்தல், ஒரு இந்திரியத்தில் வியாபிக்கும்போது மற்றஇந்திரியங்களில் வியாபியாமை முதலிய குற்றங்கள்கூறி ஆசங்கிப்பதும் தெரியாமையேயாம். ஏனென்னில் அத்வைத சித்தாந்தத்தில் பிரமம் அவ்வாறு செய்வதாய்ச்சொல்ல வில்லை; ஜீவனது தொழிலென்றே கூறுகின்றதென்க. ஷை தொழில்பிரமத்தின் றொழிலென விவர் எங்கேகண்டார்? எங்கேகேட்டார்? இவ்வாறுகூறும் வேதாந்தநூற்களை நாம் கனவினுங்கண்டறியோம். நாம் கனவினுங்கண்டறியாத நூற்களை யிவர் சாக்கிரத்திற் கண்டது வியப்பினும் வியப்பேயாம்! பிரமத்துக்கு ஆன்மா வென்றுங் கூறப்படுமென வேதாதிகலைகளில் கூறியிருப்பது இவருக்குச் சரியாய் வந்து தொலைத்தது. இவர்பேரில் குற்றமில்லை. ஆன்மா வென்னுஞ்சொல்லின்பேரிலேயே குற்றமிருக்கின்றது. அது பொல்லாதசொல். அது இவரைமாத்திரமன்று, இவர் பக்ஷத்தாரெல்லோரையும் நடுத்தெருவில் இழுத்து விட்டது. வேதாதிகளில் ஆன்மபதத்தைப் பெரும்பாலும் பிரமம் அல்லது சிவனுக்கும், சிறுபாலும் ஜீவனுக்குங்கூற, இவர் பக்ஷத்தார் முற்றுஞ் சீவனுக்கே யுபயோகப்படுத்திக் கொண்டார்கள். கொண்டால்கொள்ளட்டும். இந்தக்கொள்கையை யிவர்கள் மட்டிலும் வைத்துக்கொள்ளாமல் அதைச்சுருதிப் பிரமாணப்படி பிரமத்துக்குப் பிரயோகிக்கும் அத்வைதிகளை எதிர்த்துப் போர்புரிய வருகின்றார்களே. அது தான் அறியாமை! தாங்கள் ஆன்மபதத்தை ஜீவனுக்கே முற்று முபயோகிப்பதுபோலப் பிறரு முபயோகிக்க வேண்டுமெனவும், அவ்வாறுபயோகிக்காவிடில் அது குற்றமெனவுங் கூறுவது குற்றமென அவர்கட்குப் புலப்படுவதில்லை. தன்றலைசுற்ற வுலகெலாஞ் சுற்றக்காண்பது போல, தம்மதத்தில் ஆன்மபதத்தை ஜீவனுக்குப் பிரயோகஞ் செய்கிறபடி பிறரும் பிரயோகிக்க வேண்டுமென்று விரும்புகின்றனர். வேதத்தின் உண்மையின்னதென்றும், அவ்வுண்மைப்படி வேதாந்திகள் ஆன்மபதத்தைப் பெரும்பாலும் பிரமத்துக்குப் பிரயோகிக்கின்றார்களென்றும் அறியாமையினால், "எல்லசட்டிலக்க ஏகலக்க" என்றபடி பிரமத்தையும் ஜீவனையும் ஒன்று படுத்திக் குழப்புகின்றார். அதனாலேதான் ஜீவன் தேகத்திற் சிறைபட்டிருக்கின்றானென்பதற்குப் பதில் பிரமஞ் சிறைபட்டிருக்கிறதென்று பேசுகின்றார்.

பிரமம் எங்கும் நிறைந்த பரிபூரண சத்துப்பொருள்; ஜீவன் நிறைவற்ற அபூரண ஏகதேச சத்துப்போலி அநிர்வசனப்பொருள். இவ்வளவு வித்தியாசமிருக்க எப்படி யிரண்டும் ஒரு லக்ஷணப்பொருளாகும்? வேதத்தில் பிரமமான ஆன்மாவுக்கு வியாபகங்கூறுகின்றதேயன்றி, அதற்குவேறான ஜீவன் அல்லது ஜீவான்மாவுக்குக் கூறவில்லை. இவர் பக்ஷத்தவரோ பிரமத்துக்கு வியாபகத்வங்கூறுவதனோடு ஜீவான்மாவுக்குங் கூறுகின்றார்கள். கூறுகின்றமையின் இவர் ஆக்ஷேபித்த ஆக்ஷேபங்களெல்லாம், அத்வைதிகள் இவர் பக்ஷத்தாரை ஆக்ஷேபிக்கவேண்டியவை. அங்ஙனமாக இவர் பக்ஷத்தார் ஜீவான்மாவுக்கு வியாபகஞ்சொல்லாது போலவும் அத்வைதிகள் சொல்வது போலவும் கூறுவது, விஷயம் அறியாப் பாமர ஜனங்களை யேமாற்றவேபோலும்!

இது நிற்க, பிரமம் சத்தென்றும் தேகமுதலியன அசத்தென்றும் சொல்லும் அத்வைதிகள், பிரமம் தேகத்திற் சிறைபட்டிருக்குமெனச் சொல்வார்களா? சொல்வார் சொன்னாலுங் கேட்பார்க்கு மதியில்லையா? இது சூரியன் நீரினுள் விழுந்து தத்தளிக்கின்றான் எனக்கூறும் விவரம் அறியாப் பாலர் கூற்றுக்கொப்பாம்; அன்றி ஆகாயம் கடத்திற் சிறைபட்டிருக்கின்றதென்று கூறுங் கூற்றுக்கு மொப்பாமென்க. குடத்துக்குள் நீர் சிறைபட்டிருக்குமென்னின் அது பொருந்தும். ஏனென்னின் குடமும் சத்துப்பொருள், நீருஞ் சத்துப்பொரு ளானமையானென்க. அதுபோலக் கானல், நீரின்கண் சிறைபட்டிருக்குமெனச் சொல்லலாமா? கானல் உண்மைப்பொருள், நீர் தோற்றப்பொருள். உண்மைப்பொருள் தோற்றப் பொருளில் சிறைபட்டிருக்குமெனக் கூறுவது ஒருபோது மொவ்வாதென்க. (இவரோ அதே பத்திரிகையில் மற்றொரு இடத்தில், "ஆன்மா அல்லது பிரமம் வியாபகமுடையதெனின் அதற்கிரண்டாவது பொருளில்லாதபோது அது வேறு எதில் வியாபிப்பது" என்கிறார். பிரமம் வியாபித்த விஷயத்தைப்பற்றி "ஓர் இந்து" என்பவர், இவர்க்குப் பலவகையாக விரித்துக்கூறி யிருப்பதால் அதுபற்றி யாம் இவ்விடத்தில் ஏதும் புகன்றோமில்லை.) அத்வைதிகள் பிரமத்தை வியாபகமென்று சொல்வதால் அதற்கிரண்டாவதுபொருளிருக்கக்கூடாதென இவரே அப்பத்திரிகையில் சொல்லிவிட்டு,பின்னும் அப்பத்திரிகையிற்றானே 'பிரமம் தேகத்திற் சிறைபட்டிருப்பதொன்று' எனக்கூறுவது எவ்வளவு மருட்சியைக் காட்டுகின்றது பாருங்கள்! இவர்சொல்வதுபோலப் பிரமம் ஒன்றே வியாபகமுடையதென்பதும் வாஸ்தவமே; ஆதலால் அதற்கிரண்டாவது பொருளிருக்கக்கூடாதென்பதும் வாஸ்தவமே; இரண்டாவது பொருளில்லாமையால் பிரமம் தேகத்திற் சிறைபட்டிருக்கு மென்பது அத்வைதிகளுடைய சித்தாந்த மல்லவென யாம் கூறுவதும் வாஸ்தவமேயாம். தேகத்திற் சிறைப்படுவது முதலிய தொழில்களுக் குட்படுவது ஏகதேசமான ஜீவனேயாதலாலும், ஜீவனும் தேககரணங்களும் சத்துப்போலி அநிர்வசனப் பொருளானதாலும், ஷை ஜீவதேககரணங்கள் ஒருஜாதி இலக்கணப்பொருளானதாலும் ஒன்று சிறைப்படுதலும், ஒன்று சிறைப்படுதற்கு இடமாயிருத்தலும் கூடும். பிரமத்துக்குத் தேகாதிகள் எதிர்மறையான பகைப்பொருளாயிருத்தலாலும், பிரமத்தை நோக்க அவைகள் (இவருக்குரிய பிரமாணமான சிவஞானபோதத்தில் "யாவையுஞ் சூனியம் சத்தெதிராகலின்" எனக் கூறியபடி) அசத்தாய் அதாவது பொய்யாய்ப்போதலாலும் பிரமம் தேகத்திற் சிறைப்படுதல் முதலிய தொழில்கள் கூறுவது ஒருபோதும் அடாதென்க. சூரியன் நீரிற் பிரதிபலித்தலைக் கண்ட இளம்பிள்ளைகள், உண்மையாகவே "சூரியன் நீரில்விழுந்து தத்தளிக்கின்றான்" எனக் கூறுவதுபோல இவருங் கூறுகின்றார்.

இதுவரையில் பேசிவந்ததில் பிரமத்துக்கு ஆன்மாவென்கிறபெயர் சுருதி முதலிய கலைகளில் சொல்லப்பட்டிருக்கிறதென்றும் ஆதலால் (அஸ்தமேகையென்று சொல்வதுபோல) ஆன்மாவே பிரமமென்றும் அவ்வான்மா வியாபகமென்றும் ஜீவான்மா வியாபகமல்லவென்றும் ஏகதேசமென்றும் தேகத்திற் சிறைபட்டிருப்பது ஜீவான்மாவென்றும் பிரமமான ஆன்மா சிறைபட்டிருக்கவில்லையென்றும் ஏற்பட்டமையால் இவருடைய வாதம்

தூர்வாதமாய்ப் போயிற்றென்க. இனி, ஜீவான்மா வியாபகமென்று கூறுகிறவர்கள், இவரும் இவர் நண்பருமே யாதலாலும், அது சுருதி யுக்தி யநுபவங்கட்கு மாறுயிருத்தலாலும் ஷை ஆக்ஷேபங்கட்குச் சமாதானம் அளிக்கவேண்டுபவர் இவரேயாமென்க. இவர்பக்ஷத்தாரே ஜீவான்மாவினை வியாபகமெனக் கூறுகின்றார்களென்பதற்குப் பிரமாணம் வருமாறு:—

சிவஞானபோதம் நான்காவதுசூத்திரம்

சிவஞானசுவாமிகளுரையில்

"ஆன்மாவென்னுஞ்சொற்குப் பொருள் வியாபகமென்பதூஉம், சித்தசித்தென்பதூஉமாம்."

ஷை சூத்திரம் உ-வது அதிகாணம்

முதல் வெண்பாவின் உரையில்

"உயிர்கள் மூன்றவத்தைகளும் படுதற்கு மூலகாரணமாய் நித்தமாய் வியாபகமாய் வியாபக வுயிர் அணுத்தன்மைப் படுமாறுசெய்தலின்."

சிவஞானசித்தியார் நான்காவது சூத்திரம்.

" அசித்தருவியாபகம்போல் வியாபகம் அருவமின்றாய், வசித்திடவரும் வியாபியெனும் வழக்குடையனுகி, நசித்திடா ஞானச்செய்தி யநாதியே மறைத்துநிற்கும், பசுத்துவமுடையனுகிப் பசுவெனநிற்கு மான்மா" (உ0)

இந்தவசனத்திலும் செய்யுளிலும் ஜீவான்மா வியாபகம் என்று கூறியிருப்பதால் இவர் மதத்தையே யிவர் ஆக்ஷேபஞ்செய்துகொண்டவராஞரென்க.

## ஜீவான்மா வியாபகமென்பது குற்றம்.

"இனி யாம் கூறும் ஆன்மவியாபகம் முத்தித்தசையில் அது சிவன் திருவடியில் அமைவதொன்று" என்று கூறிப் பின்னும் வலியவந்து அகப்பட்டுக்கொண்டார். இதனுல் முத்தித்தசையில் மாத்திரம் ஆன்மா வியாபகம் என்றுசொல்வதாய் ஏற்படுகின்றது. முத்தித்தசையில் வியாபகம் என்றதனுல் மற்றத்தசையில் அதாவது பந்ததசையில் அவ்வியாபகம் அதாவது சிவஞானபோதம் நான்காவது சூத்திரம் இரண்டாவது அதிகரணம் முதல்வெண்பாவின் உரையில் "வியாபகவுயிர் அணுத்தன்மைப் படுமாறு செய்தலின் ஆணவமென்னும் பெயர்த்தாய்" எனச் சிவஞானசுவாமிகள் கூறியவாறு அணுவாகின்றது. ஷை சிவஞானபோதம் முதற்சூத்திரம் மூன்றும் அதிகரணம் முதல்வெண்பாவின் சிவஞானசுவாமிகளுரையில் "முதல்வன்போலத் தனித்துநிற்கும் இயல்பில்லாதவாறும், முதல்வன்போல் ஐந்தொழிற்கும் வினைமுதலாம் உரிமையின்றிச் சிவானுபவமொன்றினுக்கே யுரித்தாயவாறும், சமவியாபகமாயினும் முதல்வனை நோக்கத் தூலவறிவாகலான், விளக்கொளியுட் கண்ணொளிபோல முதல்வனின் வியாப்பியமாயன்றி நில்லாதவாறும் முதலாயின" என்று கூறியிருக்கின்றமையின் வியாபகமென்பது பூரணமென்றே அருத்தமாகின்றது.

இப்படிப்பட்ட ஆன்மா ஒன்று? பத்தா? நூறு? ஆயிரமா? லக்ஷமா? கோடியா? பலகோடியா? வென்னின் இத்தனையெனச் சொல்லற்கு எந்தக்

கணிதமும் இடந்தராது; அளவு கடந்திருப்பதாலென்க. இவர் மதப்படி இவ்வளவும் தனித்தனிச் சத்துப்பொருள்கள். இத்துடனே சிவனும் சத்துப் பொருள். பலகோடி ஆன்மாக்களும் சிவனும் தனித்தனிப் பூரணப் பொருளும் சத்துப்பொருளுமாம். இவ்வளவும் ஒரு இடத்தில் எப்படியிருக்குமோ அதன் உண்மை நமக்கு விளங்கவில்லை. எந்தத் தத்துவசாஸ்திரியார் இதைப் பொருத்திக் காண்பிப்பாரோ அறியோம். இது கட்டுக்கதை யல்ல;யதார்த்த மாய்ப் பொருள்களுடைய இருப்பென்பதே அவருடைய கொள்கை.

பரிபூரண ஆன்மா அணுத்தன்மை யடைந்ததென்று இவர்மதங் கூறுவதனால் முன்பு பூரணமாயிருந்தே பின்பு அணுத்தன்மை யடைந்ததென ஏற்படுகின்றது. பூரண ஆன்மா அணுவாகிப் பின்னும் பூரணமாகின்றமையின் முன்னும் பின்னும் பூரணமும் இடையில் அணுவுமாம். எங்கும் பரிபூரணமாய்த் தனித்தனிப் பல பொருள்க ளிருந்தன வென்றும், பின் அவைகள் தனித்தனியே அணுக்களாயினவென்றும் அதன்பின் பழையபடியே பூரணமாயினவென்றும் கூறுவது பதார்த்தசோதனை செய்தறியாத் தோஷமாம். எங்கும் நிறைவாய் ஒரு பொருளிருக்குமாயின் ஆணவமென்னும் மற்றொரு பொருள் இருக்கத்தான் இடமேது? இடமேயில்லாதபோது, அது போய்ப் பரிபூரணப்பொருளை யணுவாக்கியதென்பது பொருத்தமில்லாக் கட்டுக்கதையாம். இக்கதை "ஊ! ஊ!" என்றுமாத்திரங் கேட்கும் விவரம் அறியா இளங்குழந்தைகள் கேட்கத் தக்கதேயாம். ஆணவமோ அஞ்ஞானரூபம். ஆன்மாவோ அஞ்ஞானமன்று; ஞானரூபம். ஞானரூபமான ஆன்மாவை அஞ்ஞானரூபமான ஆணவம்போய் மறைத்ததென்பது என்னவிந்தை! பிரகாசமான சூரியனை அப்பிரகாசமான இருள்போய் மறைக்குமா? சூரியன் முன் இருள் இருக்கவேமாட்டாதென்னின் அதுபோய் மறைத்ததென்றெங்ஙனங் கூறலாம்? இதுபோல ஞானவடிவமான ஆன்மாமுன் அஞ்ஞானவடிவமான ஆணவம் இருக்கவேமாட்டாதென்னின் அது ஆன்மாவை மறைத்ததென் றெங்ஙனங் கூறலாம்?ஆன்மாமுன் ஆணவம் இருக்கவேமாட்டாதென்பதற்கு இரண்டு நியாய மிருக்கின்றன. ஆன்மா பரிபூரணமாகலின் ஆணவம் இருக்கமாட்டாதென்பதொன்று;மற்றொன்று ஆன்மா ஞானப்பிரகாசமுள்ளதாகலின் அதன்முன் அஞ்ஞானமான ஆணவமிராதென்பது. இவர்மதப்படி இரண்டு நியாயங்களால் ஆன்மாவை ஆணவம் மறைத்ததென்பது போலியாய்ப் போயிற்றென்க.

## வியாபகமான ஆன்மா அணுவாகாது.

இன்னும் மற்றொரு ஆக்ஷேபமாவது:வியாபகமான ஆன்மா அணுவாயிற்றென்னின் வியாபகங் கெட்டு அணுவாயிற்றா?கெடாது அணுவாயிற்றா?கெட்டு ஆயிற்றென்னின் வியாபகமே யில்லாமற் போகின்றது. கெடாது ஆயிற்றென்னின் வியாபகம் வியாபகமாகவே யிருந்தால் அணுவாவதேது?வியாபகம் அணுவாவதிற் பின்னுமொருகுற்றம் நிகழ்கின்றது.போர்போல் அதிகவிடத்தைக் கொண்டிருக்கும் பஞ்சை யந்திரத்தில் அழுத்திச் சிறியகட்டாய்க் கட்டுவதுபோல வியாபகமான ஆன்மா குறுகி அணுவாயிற்றென்னின்,எங்கும் நிறைந்து பூரணமாயிருக்கும் ஆன்மா அணுவாகுமென்பது சுருதி யுக்தி அநுபவங்கட்கு மாறாயிருப்பதுபற்றி, நம்பமுடியாதாயினும் வெகு பிரயாசைப்பட்டு நம்புதல்

வேண்டும். இதைக்கேட்பவர் மிக அதிசயப்படுவார்க ளென்பதி லையமில்லை. பஞ்சு, போர்போலிருக்கும்போது இடைவெளி யாங்காங்குள்ளதால் அதைச் சிறிதாய்ச் சுருங்கச் செய்வதற் கிடனாகின்றது. நீக்கமின்றி நிறைந்திருக்குமாயின் சுருங்கச்செய்ய ஆகாது. ஒருமலையைச் சிறிய கல்லாகச் செய்ய வேண்டுமானால் முடியுமா? ஒருவாறு நீக்கமின்றி நிறைந்திருப்பதால் முடியாது. அங்ஙனமே ஆன்மா இடைவெளிவிட்டில்லாமல் எங்கும் பூரணமாயிருப்பதால் அது அணுவாகின்றதென்பது கொள்ளத்தக்கதன்று. போர்போலிருக்கும் பஞ்சை யந்திரத்தினால் சுருக்கிடின் முன்னிருந்த மற்றைய விடங்களில் பஞ்சு என்பதின்றி வெறுவெளியாயிருக்கும். அவ்வாறு வியாபகமான ஆன்மா அணுவாகுங்கால் மற்றவிடங்களிலெல்லாம் ஆன்மா இல்லையெனச் சொல்வதற்கிடனாகின்றது. இடனாகுங்கால் ஆன்மா வியாபகமென்னுஞ்சொல் அவலச்சொல்லாய் அவர் மதத்துக்கே கெடுதியை யுண்டாக்கும். ஆன்மா ஆணவத்தால் அணுத்தன்மைபெற்று, பிறப்பிறப்புகளிற் சுழன்று, முத்தியடைந்து பழையபடியே பூரணமாய்ப் போகவேண்டியதல்லவா? அப்படிப் போகும்போது அணுவாயுள்ள ஜீவன் பூரணமாய்ப் போதல் கூடுமோ? யந்திரத்தில் அழுத்திய பஞ்சுக்கட்டுப் பெயர்த்தும் போர்போலாகுமாயின், கட்டாயிருக்கும்போது எப்படிச் சிறிதிடத்தில் நிறைந்திருந்ததோ, அப்படியே போர்போலிருக்கும்போதும் போர் அவ்வளவு இடத்தில் நிறைந்திருக்குமா? நிறைந்திராதன்றோ? அப்படியே அணு இடத்தில் அடங்கிய ஆன்மா மறுபடியும் முத்தித்தசையில் வியாபகமாங்கால் எங்கும் பூரணமாய் நிறைந்திருக்குமா? அணுவான ஆன்மா முத்தித் தசையில் பூரணமாகின்றதென்று கூறுவதில் அணுத்தன்மை கெட்டுப் பூரணமாகின்றதா? கெடாது பூரணமாகின்றதா? கெட்டு ஆகின்றதெனின் அப்போது அணுவே இல்லாமற் போகின்றது. கெடாது ஆகின்றதெனின் அணு அணுவாகவேயிருந்தால் பூரணமாதலெங்ஙனமாம்? இவைபோல இன்னும் பல ஆக்ஷேபங்க ளிருக்கின்றமையின் ஜீவான்மா ஒருபோது வியாபகமாயிருந்ததென்பதும் பிறகு அணுவாயிற்றென்பதும் அதன்பின் பழையபடியே வியாபகமாயிற்றென்பதும் பயனற்ற வெற்றுரையாய்ப் போயிற்றென்க.

## பூரணசிவத்தில் பூரணஆன்மா அமைவ தெங்ஙனம்?

பின்னர் ‘யாம்கூறும் ஆன்மவியாபகம் முத்தித்தசையில் அது சிவன் திருவடியில் அமைவதொன்று’ என்பதில் பின்னும் ஒரு ஆக்ஷேப முண்டாகின்றது. அதையுங் கூர்ந் தாலோசிப்போம். சிவனையும் ஜீவான்மாவையும் தனித்தனிப் பூரணமாகச் சொல்லிவிட்டு, பின் ஆன்மாவைச் சிவன் திருவடியில் அமைவதொன்று எனச் சொல்லுவது எங்ஙனம் அமையும்? ஒன்றிலொன்றமைவது கண்டப்பொருளுக்குக் கூடுமேயன்றி, பரிபூரணப்பொருளுக்குக் கூடுமோ? ஒரு பரிபூரண வியாபகப்பொருளில் பிறிதொரு அபரிபூரண அவ்வியாபக ஏகதேச அணுப்பொருளே யிருந்து அமைவது கூடாதென்னின் ஒரு பரிபூரணவியாபகப் பொருளில் மற்றொரு பரிபூரணவியாபகப் பொருள் இருந்து அமையுமென்று கூறுவது எங்ஙனம் பொருந்தும்? மற்றொரு பரிபூரண வியாபகப்பொருளே அமைதல் கூடாதாக, பரிபூரண வியாபக பல்லாயிரங்கோடி ஜீவான்மாக்கள் அமையுமென்கை அவசித்தாந்தமெனக் கூறுவிடில் வேறு யாதுகதி?

ஒரு படி நிறைய நீர்வார்த்து அதில் மறுபடியும் வீசம்படி நீர்வார்த்தால் கொள்ளுமா? கொள்ளாதன்றோ? அங்ஙனமாக ஒருபடிநீரில் மறுபடியும் ஒரு படி நீர்வார்த்து, அந்தப்படியிலேயே அமைக்கப்பார்ப்பது பொருந்துமா? இங்ஙனமே வியாபகபிரமத்தினிடத்தில் அணு ஜீவான்மாவே யிருத்தல் அமையாதாகப்பூரண ஜீவான்மாக்களை யமைக்கப்பார்ப்பது கூடுமோ?

## சிவன்றிருவடியில் ஆன்மா பின்னமாக அமையுமா? அபின்னமாக அமையுமா?

ஆன்மா சிவன்றிருவடியில் அமைவது என்பதில் பின்னமாக அமையுமா? அபின்னமாக அமையுமா? பொருள் இடம் காலங்கள் பின்னம்; சினை குணந் தொழில்கள் அபின்னம். பொருள் இடம் காலத்தில் அமைத்துப் பின்னமாகச் சொல்லின், சிவனுங்கண்டப்பொருளாய்ப் போம்; ஜீவான்மாவுங் கண்டப்பொருளாய்ப் போம். சினைகுணம்தொழில்களில் அனேகு அபின்னமாகச் சொல்லின் ஆன்மா படும் தாபத்திரயாதி துக்கங்கள் யாவும் சிவன் படுகிறதாகவே சொல்லவேண்டும். இவ்விரண்டு வகையிலும் ஆக்ஷேபமிருப்பதால் அவ்வாக்ஷேபத்தைத் தீர்த்துக்கொண்டு, தமது துவித சித்தாந்தத்தைத் தாபித்துக்கொள்ளவேண்டுவது பூர்வபக்ஷியார் கடமையேயாமென்க.

## சமாதானம்முன்னே வந்திருக்கிறது.

‘‘ஆன்மா அல்லது பிரமம் வியாபகமுடையதெனின் அதற்கிரண்டாவது
‘‘பொருளில்லாதபோது அது வேறு எதில் வியாபிப்பது? எல்லாந் தானு
‘‘யிடுதலாலே வியாபகமாகையால், எதில் எது வியாபித்தது என்றது அடா
‘‘தெனின், அப்போது வியாப்தி, வியாப்பியம் என்னுஞ் சொற்களும் அவற்
‘‘றின் பொருள்களும் என்னுவது? அன்றியும், எல்லாந்தானுயிடுதலே வியா
‘‘பகமெனின், எல்லாம் என்றது பாசபசுக்களேயாம். தான் என்றது பதி
‘‘யாம். இப்படி ஏனோ அப்பதி, பாசபசுக்களாக விரிந்தது? அல்லது வியா
‘‘பித்தது? பாசமாகவும் பசுவாகவும் வியாபித்த பதி ஏனோ இன்னும் (பாச
‘‘பசுக்களுக்கு வேறாய) பலபொருள்களாக வியாபித்தல் கூடாது? அங்ஙனம்
‘‘பதி வியாபியாமையால், அவ்வாறு வியாபிக்கத்தக்கவாற்றலதற்கில்லை
‘‘யென்பது சித்தமாம். அதவா வியாபிக்குமெனக் கொள்ளின், அவ்வாறு
‘‘வியாபிக்கு மெவ்வளவு வியாபகமும் அதனது வியாபகத்தின் அகண்டமா
‘‘காமல் கண்டமேயாய் முடியும், அதனால் அது சர்வவியாபகப் பொருளாதல்
‘‘யாண்டும் பூர்த்திகட்டாது. இதனால், தானே எல்லாமாயதென்னும் வாத
‘‘த்தை யொழித்துத் தான் என்னும் பதி எல்லாம் என்னும் பசுபாசங்களில்
‘‘வியாபித்தலை யொப்புவதே பதியினது வியாபக தர்மமாம். பசுபாசங்களை
‘‘யியக்குதற்கே பதி அவற்றில் வியாபித்தமையால், அதுவே பூரணமாம்.
‘‘பசுபாசங்களைத் தவிர வேறு பொருள்களில்லாமையால், பதிக்கு அவற்றின்
‘‘மேலிட்ட வியாபகத்வங் கேட்கப்படவில்லை. பதியைப்போலப் பசுபாசங்
‘‘களும் நித்தியமாகையால் இவற்றிற்கு அன்னியமாக வேறு பொருள்களின்
‘‘பிரஸ்தாபம் சாஸ்திரங்களி லுண்டாகவில்லை. இவ்வாறு தெளிந்திடாத
‘‘விவர் பதியினது வியாபகத்தை விசாரித்துச் சைவசித்தாந்தத்தை மறுக்கப்
‘‘புகுந்தது ஆச்சரிய மாய தென்க,’’ என்கிறார்.

இந்த ஆக்ஷேபங்களெல்லாம் மூடஆக்ஷேபங்களென்றும், இது வேதாந்த விசாரணை செய்யாதார் கூற்றென்றும், பிரமம் எல்லாமாய் வியாபித்தது பொருளாக அல்லவென்றும், தோற்றல் மாத்திரமாகவென்றும் இன்னும் இவ்வாறு பலவகையாக "ஓர் இந்து" என்பவரும், "அத்வைத சித்தாந்தி" என்பவரும், இன்னும் பலரும் "சங்கராசாரியாரவதார மகிமை" "மாயாவாதசைவ சண்டமாருதம்," "அத்வைத தூஷண பரிகாரம்" "வேதாந்த சங்கை நிவாரணம்" முதலிய விஷயங்களில் சமாதானங் கூறியிருப்பது மாத்திரமேயல்லாமல், அது விஷயமாக இவருடைய மதத்தில் நேர்ந்த அனேக தோஷங்களையும் எடுத்துக்காட்டியிருக்கின்றமையாலும், இப்பத்திரிகை வாசிப்போர் அவைகளை வாசித்திருக்கின்றமையாலும் அதுபற்றி மீண்டும் மீண்டும் இவ்விடத்தில் பேசுவ தநாவசியமென்று விட்டனம். அதிலும் அத்வைததூஷண பரிகாரத்தில் மிகு அதிகமாய்ப் பேசியிருக்கின்றமையின் அதில் பின்னும் [illegible]மாய்க் காணலாம்.

## பிரமம் எல்லாமாய் வியாபித்தல்.

அத்வைதிகள் பிரமம் எல்லாமாய் வியாபித்தல், அல்லது எல்லாமாதல் என்று சொன்னதைக் குற்றங்கூறிவிட்டு, பின் தாமே "பதி, எல்லாம் என்னும் பசுபாசங்களில் வியாபித்தலை யொப்புவதே பதியினது வியாபகதர்மமாம்' என்றுகூறி, அப்படி வியாபித்ததற்குக் காரணம் 'பசுபாசங்களை யியக்குதற்கே பதி யவற்றில் வியாபித்தமையால், அதுவே பூரணம்' என்கிறார். இவர் மதத்தில் எல்லாம் என்றதற்குப் 'பசுபாசங்கள்' என்றதால் பிறர் மதத்தில் அதாவது அத்வைத மதத்தில் அதைவிட வேறுண்டெனச் சொல்லுகின்றது போலும்! 'பசுபாசங்களில் வியாபித்தலை ஒப்புவதே பதியினது வியாபகதர்மம்' என்றதனுல் அதற்கப்புறம் வியாபித்தலை ஒப்புவது பதியினது வியாபகதர்மம் அல்லவாக்கும்! அதிலும் பசுபாசங்களைவிட வேறு பொருளிருந்து அதில் வியாபித்தலை யொப்பாதிருத்தல் பின்னும் பதியினது வியாபகதர்மம் அல்லவாக்கும்! இவரது சாஸ்திர விசாரணையும் இவரது மதத்தின் நியாயமும் வெகு நன்றாயிருக்கின்றன. இவரது துவித மதத்தைக் கொண்டு அத்வைதத்தை வெல்லவேண்டுமென்கிற ஆசை மிகுதியாயிருக்கின்றது. ஆசை யிருந்து யாதுபயன்? இவரது மதத்துக்கு நியாயபலமில்லையே! சுருதி பலமு மில்லையே! நியாயமற்ற போலிமதத்தைக்கொண்டு, நியாயம் நிறைந்த வேதாந்தமதத்தை வெல்லப்பார்ப்பது கையில்லாதவன் எதிரிகளை வாளாயுதத்தால் வெட்டி ஜெயிக்க எண்ணங் கொண்டதுபோலாமென்க.

பதி: பசு பாசங்களில் வியாபித்ததாய் இவரும் ஒப்புக்கொள்ளுகின்றார்; அத்வைதிகளும் ஒப்புக்கொள்ளுகின்றார்கள். இவர் பொருளாக வொப்புக்கொள்ளுகின்றார்; அவர்கள் தோற்றமாக வொப்புக்கொள்ளுகின்றார்கள். தோற்றமாக வொப்புக்கொள்வது சுருதி யுக்தி அநுபவங்கட்கொத்திருக்கின்றது. இப்படியிருந்தும் அத்வைதத்தை யாக்ஷேபிக்க வருகின்றார். எவ்விதமா யாக்ஷேபிக்கின்றா ரென்றாலோ அத்வைதிகள் பொருளாய் வியாபகஞ் சொல்வதுபோல வைத்து ஆக்ஷேபிக்கின்றார். அத்வைதிகள் பொருளாய் வியாபகஞ்சொல்லாமையால் இவருடைய ஆக்ஷேபம் அவர்களைப் போய்த் தாக்காது; பொருளாய்ச் சொல்லும் இவரையே தாக்கும். இதனுல்

இவரது மதத்தையே யிவர் ஆக்ஷேபிக்கின்றதா யாகின்றது. அத்வைதிகளை நோக்கி 'ஏனோ பசுபாசங்களாக விரிந்தது? அல்லது வியாபித்தது?' என்கிறார். இவர் சுத்த பைத்தியக்காரர். இதை யெழுதும்போது அவருடைய புத்தி அவர் சுவாதீனத்தி லிருந்திராது. புத்தி தடுமாறியிருக்கும். அதனாலே தான் தமது சித்தாந்தத்தை அத்வைதிகளுடைய சித்தாந்தமாகவும், அத்வைதிகளுடைய சித்தாந்தத்தைத் தமது சித்தாந்தமாகவும் பிரமித்துப் பேசுகின்றார். அதற்குத்தரம் "அத்வைதிகள் விரிந்ததாய் அல்லது வியாபித்ததாய் ஒப்புவதில்லை" என்கிறோம். அதாவது பொருளாய் விரிபவுமில்லை, வியாபிக்கவுமில்லை யென்பது அதன்பொருள். கயிறு அரவாய் விரிந்தது, அல்லது வியாபித்தது என்னின் பொருளாய் விரிந்தது, அல்லது வியாபித்தது என்று சொல்லலாமா? பொருளாய் விரிந்தது; அல்லது வியாபித்தது எனச் சொல்லாதிருக்கவும் அவ்வாறு சொன்னதாய்க் கொண்டு கேள்விகேட்கலாமா? மேலே இவர்பக்கத்துக்குச் சாதகம்போல் கருதி, 'பசுபாசங்களை யியக்குதற்கே பதி அவற்றில் வியாபித்தமையால்' என்று சொல்லுகின்றார். அதையே திருப்பி இவர்க்கு நாம் பதில் சொல்லுகின்றோம். 'பாசமாகவும் பசுவாகவும் வியாபித்த பதி ஏனோ இன்னும் (பசுபாசங்களுக்கு வேறாய) பல பொருள்களாக வியாபித்தல் கூடாது?' என்று ஒன்று வினவுகின்றார். இவ்வினா விவேகமற்ற வினாவும் வேதாந்த வழக்கறியார் வினாவுமாம். ஏனெனில் அத்வைதிகள் வியாபித்தலை விவர்த்தமாகவென்று கூறுவதை யறியாமையானென்க. கயிறு அரவாக ஆவதைக்கண்டு ஏன் அரவைவிட அதிகமாய் அதாவது பூனையாகவும் யானையாகவும், கிளிஞ்சல் வெள்ளியாய் ஆவதைக் கண்டு ஏன் வெள்ளியைவிட அதிகமாக அதாவது பொன்னாகவும் இரும்பாகவும் ஈயமாகவும், கட்டை கள்ளனாய் ஆவதைக்கண்டு ஏன் அதைவிட அதிகமாய் அதாவது ராஜனாகவும் மந்திரியாகவும்ஆகவில்லையென வாதிப்பவர் உண்டுகொலோ! அத்வைதிகள் பிரமத்தைத்தவிர மற்றப்பொருள்களைத் தோற்றமாய்ச் சொல்வதா யிவரே சொல்லி, பின்னும் பொருளாய்ச் சொல்வதாய்வைத்து ஆக்ஷேபிக்கின்றார். இப்படிப்பட்ட பைத்தியக்காரரோடு நாம் என்ன தலையையுடைத்துக்கொண்டாலும் பயனென்னை? பிறவிச்செவிடனான வூமைக்கு நாம் எவ்வளவு உரக்கக்கூவிச் சொன்னாலும் தொண்டை போகுமேயொழிய மற்றொரு பயனுமுண்டாகமாட்டாது. அங்ஙனமே யிவர்க்கு அத்வைதசித்தாந்திகள் எவ்வளவு எடுத்துச்சொன்னாலும் தொண்டை போகுமேயன்றிப் பயன் ஒன்று முண்டாகாது. பொருளாக வியாபித்ததாகவே வைத்துப்பார்ப்போம். இதிலென்ன தோஷம்? இதில் அவர் செய்யும் ஆசங்கையாவது: 'ஏனோ இன்னும் பல பொருள்களாக வியாபித்தல் கூடாது' என்பது. அவரையே திருப்பி அந்தக்கேள்வியை நாம் கேட்கிறோம். இதற்கு அவர் சொல்லும்பதில் இது: 'பசுபாசங்களைத்தவிர வேறு பொருள்களில்லாமையால், பதிக்கு அவற்றின்மேலிட்ட வியாபகத்வங் கேட்கப்படவில்லை. பதியைப்போலப் பசுபாசங்களும் நித்திய மாகையால் இவற்றிற்கு அன்னியமாக வேறு பொருள்களின் பிரஸ்தாபம் சாஸ்திரங்களி லுண்டாகவில்லை' என்பதாம். இதில் பசுபாசங்களை அநிர்வசனமாய் ஒப்புக்கொள்வதைவிட மற்றவைகளெல்லாம் அத்வைதிகளுக்கு உடம்பாடேயாம். பசுபாசங்கள் நித்தியமென்பது வேதசாஸ்திர விரோதம்.

### சூதசங்கிதை நித்தியவஸ்து விசாரம்.

சுத்தமாய் நிரஞ்சனமாய் அவிகாரமாய் ஒளிர்சிற்சொரூபமேயாய், உத்தமமாய்ச் சருவசான்ருய் விளங்கு பரமசிவமொன்றே யென்றும், எத்தகையோரும் புகழும் நித்தியவத்து உயர் மறையும் இவ்வாருேதும், ஒத்தசடம் அநித்திமயல்லாது சித்துக்கு அநித்தியம் வந்துறுதலின்றே. (உ)

உருத்திரன் றிருமால் பிரமன் மற்றிவரும் உரைப்பர் இவ்வாறு உளந்துணிந்து, திருத்தகுமுனிவீராதலால் முக்கட்செழுமறைக்கொழுந்தினையன்றி, யருத்தியுற்ருயினித்தியவத்து வேறில்லை யழலிடை சிவப்பப்,பொருத்தியமழுவை நாவிடை வைத்துப் புகலுவன் யான்இவ்வாறென்றும். (டுரு)

இந்த அத்தியாயத்தை முற்றும் வாசிக்க. இவ்வாறு அனேக பிரமாணங்கள் இருக்கின்றமையால் பசுபாசங்கள் நித்தியமென்பது சாஸ்திரவிரோதமேயாம். சிவனைப்போலப் பசுபாசங்கள் நித்தியம் என்பதற்கு இவரினத்தாரியற்றிய நூல்களேயன்றி, வேதமுதலியபதினன்கு பிரமாணங்களிலும் அவைகளுக்கு அவிரோத நூல்களிலும் பிரமாணமே கிடையாது. பசுபாசங்களைவிட வேறு பொருள்கள் சாஸ்திரங்களில் கேட்கப்பட வில்லையென்பதை யத்வைதிகளும் அங்கீகரிக்கின்றமையால் அதுவரையில் பிரமம் வியாபித்ததென்பதும், அவைகளுக்குமேல் ஏதும் பொருளில்லாமையால் வியாபிக்க விடமில்லையென்பது முண்மையேயாம்.

## பிரமம் பசுபாசங்களில் எப்படி வியாபித்தது?

இனிப் பசுபாசங்கள் சத்தாயிருக்க அவற்றில் பிரமம் வியாபித்ததா? அசத்தாயிருக்க வியாபித்ததா? இக்கேள்விக்கு அவரது வாக்கியங்களை வைத்தே ஆராய்வாம். 'பதி: எல்லாம் என்னும் பசுபாசங்களில் வியாபித்தலையொப்புவதே பதியினது வியாபகதர்மமாம்' என அவர் கூறுகின்றனர். பதி, பசுபாசங்களில் வியாபித்த தென்பது: நீர், குடத்தில் வியாபித்ததுபோலா? நெய், எள்ளில் வியாபித்ததுபோலா? பழத்திற் சுவை வியாபித்ததுபோலா? பூவில் வாசனை வியாபித்ததுபோலா? மணி, ஓசையில் வியாபித்ததுபோலா? கட்டையில் நெருப்பு வியாபித்ததுபோலா? சதுர்ப்பூதத்தில் ஆகாயம் வியாபித்ததுபோலா? குடத்தில் மண் வியாபித்ததுபோலா? பாலில் நெய் வியாபித்ததுபோலா? கண்ணொளியில் சூரியனொளி வியாபித்ததுபோலா? சூரியன், ஒளியில் வியாபித்ததுபோலா? கடல், நீரில் வியாபித்ததுபோலா? படிகம் பலவர்ணங்களில் வியாபித்ததுபோலா? இவ்வுபமானங்களெல்லாம் பொருந்தாவிடில் வேறு என்னவுபமானம் பொருந்தும்? இனி ஷை உபமானங்களெல்லாவற்றையும் ஒவ்வொன்ருய் ஆராய்வாம்.

## நீர், குடத்தில் வியாபித்த வுபமானம்.

நீர், குடத்தில் வியாபிப்பதுபோலென்னின் நீரானது குடத்திற்குள் இருக்கின்றதே யன்றிக் குடமிருக்கிற விடத்தில் அதாவது குடத்திற்குப் பொருளாயிருக்கின்ற வோடுள்ள விடத்திலின்று. குடத்துக்குப் பொருளான வோடுள்ளவிடத்தில் நீரும், நீரிருக்கின்றவிடத்தில் ஓடும் இல்லையாகி, இரண்டுங் கண்டப்பொருளாகின்றன. அதுபோலப் பதியிருக்கிறவிடத்திற் பசு

பாசங்களும், பசுபாசங்கள் இருக்கிறவிடத்திற் பதியும் இல்லையென்றாகி, இரண்டும் கண்டப்பொருள்களாகின்றன. இது பதி பூரணப்பொருளென்று கூறும் சுருதிக்கு விரோதப்படுகின்றமையின், நீர்: குடத்தில் வியாபித்த வுபமானம் பொருந்தாதென்பதாம்.

## நெய், எள்ளில் வியாபித்த வுபமானம்.

இனி நெய்; எள்ளில் வியாபித்ததுபோ லென்னும் உபமானத்தைப் பற்றிச் சிந்திப்போம். எள்ளை யெடுத்துப் பிழிந்தால் பாதி திப்பியும் பாதி நெய்யு மாகின்றன. ஆகின்றபோது இரண்டும் பூரணப்பொரு ளன்று. இதுபோல உபமேயத்திற் பாதியிடத்தில் பதியும் பாதியிடத்தில் பசுபாசங்களும் இருக்கின்றனவாகி, பதி அபரிபூரணப் பொருளென்று கூறுதற் கிடனாகின்றது. இந்த வுபமானத்தில் எள்ளென்னும் சொல்லுக்குப் பொருள் திப்பியும் நெய்யுமாம். திப்பியும் நெய்யுமன்றி யெள்ளென்னும் சொற்குப் பொருளில்லை. எள்ளென்னும் சொல்லுக்கே பொருளில்லாதபோது அதில் நெய் வியாபித்ததென்பது எங்ஙனம் அமையும்? இதில் எள் ஸ்தானத்தில் பசுபாசங்களும், நெய் ஸ்தானத்தில் பதியுமாகின்றன. உபமானத்தில் எள்ளென்னும் சொற்பொருளில் நெய் அடங்கிவிட்டது. அங்ஙனமே பசுபாசமென்னுஞ் சொற்பொருளில் பதி யடங்கிவிடவேண்டும். [illegible] திப்பியில் நெய் வியாபித்தமைபோலப் பசுபாசங்களில் பதி வியாபித்ததெனச் சொல்லி, திப்பி ஸ்தானத்தில் பசுபாசங்களையும் நெய் ஸ்தானத்திற் பதியையுஞ் சொல்லின், நெய்: திப்பியில் வியாபித்தது பூரணமாயன்று; திப்பியில்லாதவிடத்திலேயே வியாபித்ததாயாகின்றது. ஒருபலம் எள்ளையெடுத்துப் பிழிந்தால் அரைபலம் திப்பியும் அரைபலம் நெய்யும் ஆவதாய் வைத்துக்கொள்வோம். அப்போது பாதியிடத்தில் நெய்யும் பாதியிடத்தில் திப்பியும் இருக்கின்றனவாகத் தானே கொள்ளவேண்டும். கொள்ளும்போது நெய்க்குப் பூரண வியாபகம் சொல்லக்கூடுமோ? திப்பி யில்லாத விடத்திற்றானே நெய்க்கு வியாபகஞ் சொல்லவேண்டும். இதைப்போல வுபமேயத்தை நோக்குழிப் பசுபாசங்களில்லா விடத்திற்றானே பதிக்கு வியாபகஞ் சொல்லவேண்டும். அப்படிச் சொல்லும்போது பதி பசு பாசங்கள் மூன்றும் அபரிபூரண, கண்ட, அவ்வியாபகப் பொருளாய்ப்போம். போம்போது பதிஃ பரிபூரணப்பொருளென்னுஞ் சுருதியாதிகளுக்கு விரோதமாம். சாஸ்திரங்களில் எள்ளி லெண்ணெய் உபமானஞ் சொல்லுகிறதே யென்னின் அது ஏகதேச வுபமானமாம். சம்பூரண வுபமானமாயின் பிரமம் பரிபூரணமென்று சொல்வதும், பிரமத்தில் பசுபாசங்கள் இருத்தல், கயிற்றில் அரவு, கட்டையிற் கள்ளன், கிளிஞ்சலில் வெள்ளி, இந்திரசால சத்தியிற்பொருள், மனத்தில் சொப்பனவுலகு முதலியனபோன்ற வுபமானஞ் சொல்வதும் பொய்யாய்ப்போம்; அன்றியுக்தி அநுபவங்கட்கும் பொருந்தாமற்போம். இங்ஙனமே மற்றைய வுபமானங்கட்குங் கொள்க.

## பழத்திற் சுவை வியாபித்த வுபமானம்.

இனிப் பழத்திற் சுவை வியாபித்த வுபமானத்தையும் பார்ப்போம். பழமும் சுவையும் பேதமன்று; அபேதமேயாம். பழத்தினின்றுஞ் சுவையை வேறு பிரித்த லாகாது. அதுபோலப் பசுபாசங்களை விட்டுப் பதியை வேறு பிரித்த லாகாது. பழம் குணி; சுவை குணம். இவ்வாறு உபமேயத்தை நோக்கின் பசுபாசங்கள் குணம், பதிகுணி. குணியைவிட்டுக் குணம் வேறு பிரியாது. அங்ஙனமே பதியைவிட்டுப் பசுபாசங்கள் வேறுபிரியாமல் அபின்னமாகின்றன. ஆகின்றமையால் பசுக்கள் ஜனன மரண சமுசாரத் துன்பங்களை அனுபவிக்கும்போது, ஷை பசுக்களை யபேதமாகவுடைய பதியும் ஜனன மரண சமுசாரத் துன்பங்களை அனுபவிக்கிறதா யாகவேண்டும். பதி சுகமடைய வேண்டின் பசு மோக்ஷம் அடைகிறவரையில் காத்திருக்கவேண்டும். ஏனெனின் பதி குணியாகவின் குணந்துக்கமடையக் குணி துக்கம் அடையா திருத்தல் ஆகாது. அதிலும் எல்லாப்பசுக்களும் முத்தியடைந்த பிறகுதான் பதி சுகப்பட வேண்டும். எல்லாப்பசுக்களுஞ் சேர்ந்தே குணமாகவின் அவைகள்யாவும் மோக்ஷம் அடைந்து சுகப்பட்டாலன்றிப் பதிசுகமடைதல் கூடாது. இன்னும் அனேககோடிபசுக்கள் பந்தத்திலிருந்து துக்கப்படுகின்றமையின் இதுவரையிலும் பதி துக்கத்திலிருந்து விடுபட்டதாய்க் கூறுத லொல்லாது. ஒல்லாதபோது இதுவரையில் சுகம் அடையவில்லையென்றே கூறவேண்டும். முத்தியடைந்த பசுக்கள் சுகமடைந்ததாகவும் கூறவொண்ணுது. ஏனெனின் எல்லாப்பசுக்களும் முத்தியடைகிறவரையில் பதிக்குச் சுகமில்லாமையானென்க. குணி சுகம் அடையாதிருக்க, குணமாத்திரம் சுகமடைத லெங்ஙனங் கூடும்? பசுக்களெல்லாம் முத்தியடைகிறவரையில் பதிக்குத் துக்கமொழியாமையால் இதுவரையிலும் பசுக்களுக்குச் சுகசொரூபமான முத்தியைக் கொடுத்தாரென்பது வெற்றுரையாகின்றது. பதியே துக்கத்தினின்றும் மீள வழியின்றித் துன்புற்று வருந்துகையில் பசுக்களுக்குத் துன்பமொழியப் பதி சுகசொரூபமான முத்தியைக் கொடுத்தாரென்பது வெற்றுரையன்றிச் சத்துரையாமா? நிற்க, பசுக்கள் அஞ்ஞானமுடையன வென்பதி லாக்ஷேபமில்லை; ஆக்ஷேபமில்லாதபோது அப்பசுக்களை அபேதகுணமாகவுடைய குணியான பதிமாத்திரம் ஞானமுடையதென எங்ஙனங் கூறலாம்? கூறவியையாதபோது பதியும் அஞ்ஞானமுடைய பொருளெனவே கூறத்தகு மென்க. குண குணி வேறுபடாமையின் பசுக்கள் செய்யுந் தொழில்களெல்லாம் பதி செய்ததாகவே யொப்புக்கொள்ளவேண்டும். பசுக்கள் செய்யும் அஞ்ஞான காரியமெல்லாம் பதியுஞ் செய்ததாகவே கொள்ளவேண்டும். பசுக்கள் பதியை வணங்கலாம். பதி யாரை வணங்குகின்றது? பசுக்களுக்குப் பதி மோக்ஷத்தைக் கொடுப்பார்; பதிக்கு மோக்ஷம் கொடுப்பவர் எவர்? குண குணிகளில் ஒன்று மோக்ஷத்தைக் கொடுப்பதும் ஒன்று பெறுவதுங் கூடுமா? பதியான குணிக்குப் பசுபாசங்கள் குணமாகவின் பாசத்துக்குரிய சடத்தன்மை பதிக்கும் பசுவுக்கும் இருப்பதாகச் சொல்லவேண்டும். பதியும் பசுவும் சடமாகிறபோது எது ஜடமோ அது அசத்தென்பது இவர் மதத்துக்கு முடன்பாடானமையின் பதியும் பசுவும் பாசமும் அசத்தாம். அசத்தென்பதற்குப் பொருள் பொய்யானமையின் இவர் மதப்படி கடவுளும் ஜீவர்களும் உலகமும் பொய்யாம். பொய்யானபோது இவரும் இவர் மதஸ்தரும் பரம நாஸ்திகரும், முழுச்சூனிய வாதியுமாமென்க. பாசத்தை மாத்திரம் சடமாகவும், பசு பதி

யான இருபொருள்களைச் சித்தாகவுஞ் சொல்ல முடியாது; ஏனெனின் ஷை உபமானப்படி ஷை மூன்றும் அபின்னமாதலாலென்க.

## பூ, வாசனையில் வியாபித்த வுபமானம்.

இனிப் பூவும் வாசனையும்போ லென்ருலோ, அதுவும்தோஷமாகவே முடிகின்றதென்பதைக் காட்டுவாம். பூவின்கணுள்ள வாசனை போகப்போகப் பூவைவிட்டு வெளிவருகின்றது. வெளிப்படுகின்றமையின் பூவும் வாசனையும் வேறுவேறெனத் தெரிகின்றது. இதுபோலப் பதியும் பசுபாசங்களும் வேறுவேறென்றே விளங்குகின்றது. பூவும் வாசனையும் ஒன்றைவிட்டொன்று வேறுபிரிகின்றமையின் அவ்விரண்டும் பின்னசம்பந்தியேயாம். பின்ன சம்பந்தமாகிறபோது பூவிருந்தவிடத்தில் வாசனையும், வாசனையிருந்தவிடத்தில் பூவும் இல்லையென்றே சொல்லவேண்டும். கடலில் நீரும் உப்பும் அபின்னம் போற்ருேன்றினும் உண்மையில் எங்ஙனம் பின்னமோ, அங்ஙனமே பதியும் பசுபாசங்களும் பின்னமேயாம், பின்னமாகிறபோது பதியிருக்கிறவிடத்திற் பசுபாசங்களும், பசுபாசங்கள் இருக்கிறவிடத்தில் பதியும் இல்லையென்ருகி, பதி அபரிபூரணத்துவ தோஷத்தை யடையுமென்க. பூவுக்குப் பின்னமான வாசனையில் பூ வியாபித்ததென்று கூறுதல் கூடாது. அதுபோலப் பதிஃ பசுபாசங்களில் வியாபிக்குமென்று சொல்ல வியையாது. பூவினிடத்திலாயினும் இன்னுங் கஸ்தூரி முதலிய பொருள்களிடத்திலாயினும் வாசனை அபேதமாயுள்ளதென்றும் அவ்வாசனையில் பூ கஸ்தூரி முதலியவைகள் வியாபித்திருக்கின்றன வென்றுங் கூறின், அப்போது பழம் சுவை இவற்றினுபமானத்தால் நேரிடுந் தோஷங்களெல்லாம் வந்து பொருந்தும். ஆதலால் எவ்வகையினும் பூவில் வாசனை வியாபித்த வுபமானம் பொருத்தமுடையதன்றென்பதாம்.

## மணி, ஓசையில் வியாபித்த உபமானம்.

இனி மணியானது ஓசையில் வியாபித்ததுபோலென்று கூறின் இதுவும் குற்றமேயாம். மணி, ஓசைக்குத் துணைக்கருவியா யிருக்கின்றது. அந்தத் துணையுங் காற்றில்லா விடத்தில் பயன்படுத லில்லை. வாயுச்சாம்பியால் காற்றை யிழுத்துவிட்டால் மணியை எவ்வளவு ஆட்டினுலும் ஓசையுண்டாவதில்லை. வாயுச்சாம்பியைக்கொண் டிழுக்காதபோது மணி அடிபடின் மணி யில்லாவிடத்து அதாவது மணிக்கு வெளியில் ஓசைகிளம்ப, அவ்வோசையைக் காற்ருனது தள்ளிக்கொண்டுபோய் எங்கும் பரப்புகின்றது. இதுபோலப் பதிக்கு வெளியில் பசுபாசங்க ளிருக்கின்றன வென்று சொல்ல வேண்டும். சொல்லின், பதி பரிபூரணப் பொருளெனக்கூறும் சுருதிக்கு மாருகும். கிஞ்சித்தும் சந்தின்றி யோர்பாத்திரத்தினிறைய மணியிருக்கின் அதில் ஓசை பிறவாது. ஓசை பிறக்கிறதானுல் தானில்லாவிடம் வேண்டும். அதுபோலப் பதியில்லாவிடத்திற்ருன் பசு பாசங்களிருக்கவேண்டும். பதி பூரணமாயிருக்கிறதானுல் பசுபாசங்கள் இரா. பசுபாசங்களிருக்கு மென்னில் பதி கண்டப்பொருளாகும். மணியினிடத்து ஓசையையுண்டாக்கக் காற்று எப்படி அவசியமோ, அப்படியே பதியினின்றும் பசுபாசங்களை யுண்டாக்கக் காற்றைப்போன்ற தொன்றுவேண்டும். மணியொன்று, ஓசையொன்று, காற்று ஒன்று ஆக முப்பொருள் உபமானத்திலிருக்கின்றன. உபமேயத்தில் பதியொன்று, பசுவும் பாசமும் சேர்ந்து ஒன்று. ஆக இருபொருள்களே யிருக்கின்

றன. காற்றைப்போன்ற தொருபொருளில்லை. காற்றைப்போலப் பதியி னிடத்துள்ள சிற்சத்தியைச் சொல்லலா மென்னின் இது பொருந்தாது. ஏனெனில் உபமானத்தில், காற்றுஃ மணிக்கு வேறுபொருள். உபமேயத் தில் பதிக்குச் சிற்சத்தி வேறு பொருளன்று; வேறற்ற குணம். உபமானத் தில் மணிஃ ஓசையில் வியாபிக்க வில்லை. மணியை விட்டுக் காற்று ஓசையை வேறு ஸ்தானத்திற் செலுத்துகின்றது. செலுத்துகின்றதால் ஒன்று மற் ருென்றில் வியாபித்தற் கிடனில்லை. இதன்படிய்ே பதிக்குப் பசு பாசங்கள் வேருயிருக்கவேண்டும். வேருயிருக்குங்கால், பதி: பசு பாசங்களில் வியாபி த்தற் கிடனில்லை யென்க. பதிஃ பசு பாசங்களுக்குள் வியாபிக்கிற தென்னும் உபமேயத்துக்கு மணியோசை யுபமானஞ் செல்லாது. ஏனெனின், ஓசையா னது மணியினுள் செல்லாமையானென்க. இவ்வுபமானப்படி மணிக்கு வெ ளியில் ஓசையிருப்பதுபோலப் பதிக்கு வெளியில் பசு பாசங்க ளிருக்கின்றன வென்பதாம். இதனுலும் பதி அபரிபூரணத்துவ தோஷத்தை யடையு மென்க.

## கட்டையில் நெருப்பு வியாபித்த வுபமானம்.

கட்டையில் நெருப்புப்போல வென்னின் இதுவும் பொருந்தாது. ஆகா யத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து தேயுவும், தேயுவிலிருந்து அப்புவும், அப்புவிலிருந்து பிருதிவியு முண்டாகின்றன. உண்டாகின்றனவால் அவை காரணகாரிய சம்பந்தத்தைப் பெற்றிருக்கின்றன. அந்தக்கணக்கின்படி நெ ருப்புக் காரணமும் பிருதிவியான விறகு காரியமும் ஆகின்றன. ஆகும்போது பிருதிவியினிடத்தில் நெருப்பிருப்பது காரியத்தின்கண் காரணம் இருப்பதா யாகின்றது. இது நல்ல வுபமானந்தான். இதற்குபமேயம் பிருதிவியான விறகு ஸ்தானத்தில் பசு பாசங்களும், நெருப்பு ஸ்தானத்தில் பதியுமாம். காரியமான குடத்தினிடத்தில் காரணமான மண்ணிருப்பது போல, காரிய மென்று சொல்லப்படும் பிருதிவியான விறகினிடத்தில் காரணமான நெருப் பிருக்கின்ற தென்க. மண்ணினிடத்துக் குடமுண்டாய் மண்ணுக் கபேதமா யிருப்பதுபோல நெருப்பினிடத்துப் பிருதிவியுண்டாய் நெருப்புக் கபேதமா கின்றது. இதன்படியே யுபமேயத்தை யாராயின் பதிகாரணமும் பசு பாசங் கள் காரியமுமாகி, காரணமான மண்ணையன்றிக் காரியமான குடத்துக்கு எங்ஙனம் பொருளின்ருே, எங்ஙனங் காரியந்தோற்றமோ, அங்ஙனமே பதி யையன்றிப் பசு பாசங்கட்குப் பொருளில்லை யென்றும், தோற்ற மாகவும். ஆகின்றன இது அத்வைதிகளுடைய சித்தாந்தமும் இவர் மதகண்டனையுமா மென்க. நையாயிகர் கூறுவது போலச் சதுர்பூதங்கள் தனித்தனி அணுவென ப்பார்த்தாலும் ஒரு அணு உள்ள விடததில் மற்ருெரு அணு இல்லை யென் ருகி, கட்டையிலுள்ள பிருதிவி அணுவும், நெருப்பணுவும் வேறு வேருகிக் கண்டத்தன்மை யடைகின்றன. இது போல வுபமேயத்தை நோக்கின், பசு பாசங்கள் வேறு, பதிவேறு எனவாகி, பதி: பரிபூரணமென்று கூறும் வேத வேதாந்த வாக்கியத்திற்குத் தோஷமுண்டாகின்றது. ஆதலால் இவ்வுபமான மும் பயனற்ற வுபமானமா மென்க.

## சதுர்பூதத்தில் ஆகாயம் வியாபித்த வுபமானம்.

சதுர் பூதத்தில் ஆகாயம் வியாபித்தல்போலென்று சொல்வா மென் னின் இது இவர் மதத்துக்கு முற்றும் விரோதம்; அன்றி அத்வைத மத

த்திற்கு முற்றுஞ் சாதகமாம். ஆகாயம் காரணம்; சதுர் பூதங்கள் காரியம். காரணமான மண்ணையன்றிக் காரியமான குடம் எங்ஙன மின்றோ, அங்ஙனமே காரணமான ஆகாயத்தையன்றிக் காரியமான சதுர்பூதங்கட்குப் பொருளில்லை யென்று கூறவேண்டும். அப்போது ஆகாயம் யதார்த்தம்; சதுர் பூதங்கள் தோற்றம். தோற்றத்தில் யதார்த்தம் வியாபித்திருக்கின்றது. குடத்தில் மண் வியாபித்திருக்கின்றதுபோ லென்னின் மண்ணைப் போலக் குடமென்னும் பொருள் ஒன்று உண்மையாயிருந்து அதில் மண் வியாபிக்கின்ற தென்பதல்ல. தோற்றத்தில் யதார்த்தம் வியாபிக்கின்ற தென்பதே பொருள். இது போல உவமேயத்தைப் பார்ப்போம். ஆகாய ஸ்தானத்தில் பதி; சதுர் பூதஸ்தானத்தில் பசு பாசங்கள். ஆகாயங் காரணமாகவும் சதுர் பூதங்கள் காரியமாகவும் ஆதல்போலப் பதி காரணமாகவும், பசு பாசங்கள் காரியமாகவும் ஆகின்றன. காரணத்தை யன்றிக் காரியத்துக்குப் பொருளில்லாமைபோலப் பதியையன்றிப் பசு பாசங்கட்குப் பொருளில்லை யெனவும் தோற்றமெனவும் சொல்லவேண்டும். பதியுண்மை யெனவும், பசு பாசங்கள் தோற்றமெனவுஞ் சொல்லின் அது அத்வைதமாய் விடுகின்றது. அதில் இவருக் கென்ன லாபம்? இது எதிரியைக் கொல்லப்போய்க் கொல்ல வல்லமையின்றி அவனுக்கே யடிமையாவது போலாகின்றது.

## குடத்தில் மண் வியாபித்த உபமானம்.

இனிக் குடத்தில் மண் வியாபிக்கும் உபமானத்தையும் ஆராய்வாம். மண்ணின்கண் வளைதலாதித் தொழிலுக்கே குடமென்று சொல்லப்படுகின்றது. மண்ணினிடத்து அத்தொழில் உண்டாவதற்குமுன் மண்ணென்கிற பேரும், அத்தொழிலுண்டானபிறகு குடமென்கிற பேரும் பெறுகின்றன. இதற்குபமேயமாவது மண் ஸ்தானத்திற் பதியும் குடஸ்தானத்தில் பசு பாசங்களுமாம். மண்ணின்கண் வளைதலாதித் தொழில்களுக்குக் கற்பிதமாய்க் குடமென்கிற பேர் எப்படித் தரப்பட்டதோ, அப்படியே பதியினிடத்து ஏதோ தொழில் நிகழ்ந்து அந்தத்தொழிலுக்கே பசு பாசங்களென்கிறபேர் கற்பனையாகக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். மண்ணைப்போலக் குடமுண்மைப் பொருளல்லாதது போல, பதியைப்போலப் பசு பாசங்கள் உண்மைப்பொருளல்ல; பின்னைப் பொய்ப்பொருளாம்.

## பாலில் நெய் வியாபித்த வுபமானம்.

இனிப் பாலில் நெய் வியாபித்தது போலென்னும் உபமானமும் பயனற்றுப்போகின்ற தென்பதை விளக்கிக்காட்டுவோம். பாலிலிருந்து நெய் எவ்வளவு பிரிகின்றதோ, அவ்வளவு எடை அல்லது அளவு பால் குறைந்துபோகுமென்பது மறுக்கப்படாத வுண்மை. நெய்யை அப்பாலில் சேர்த்தாலல்லது முன்னிருந்த பாலின் எடை அல்லது அளவு சரிப்படாது. பாலாயிருக்குங்கால் நெய் அதில் அடங்கியிருந்தது. பாலைக்காய்ச்சிக் கடைந்தபோது மோரும் வெண்ணெயும் வேறு படுகின்றன. (வெண்ணெயை யுருக்கினால் நெய்) அவை யடங்கியிருக்கும்போது பாலென்று பேர். அப்பாலி லிருந்து மோரும் வெண்ணெயும் பிரிகின்றமையால் பிரிவதற்கு முன் கூடியே யிருந்திருக்க வேண்டும். கூடியிருந்த காலத்தில் ஒன்றிருந்த விடத்தில் மற்றொன்றிராது. எது பிரிதலுடையதோ அது பேதமாகவேயிருந்து கூடியிருக்க வேண்டும். பேதமாகக்கூடியிருக்கின் அவற்றில் ஒன்று மற்றொன்றில் வியா

பித்திருக்குமெனக் கூறவியையாது. பாலும் அதன் வெண்மையும் அபேத
மாகலின் அது ஒன்றைவிட்டு மற்றொன்று பிரியாது. பாலில் நெய் பேத
சம்பந்தமாகலின் வேறுபட்டுப் பிரிகின்றது. மோரும் நெய்யுங் கூடியிருக்
குங்கால் அதற்குப் பாலென்று பேர். பாலென்னும் பொருளில் நெய்யும் மோ
ருங் கூடியிருந்து பிரிகின்றன. பிரிகின்றமையின் ஷை இரண்டும் வேறு வேறு
தனித்தனிப்பொருள்; பூரணப்பொரு ளன்று. பாலில் நெய் வியாபக மென்
னின் முற்றும் வியாபகமன்று; மோர் இருக்கும் இடந்தவிர மற்றவிடத்தில்
வியாபகமாம். இங்ஙனமே பதி: பசுபாசங்களில் முற்றும் வியாபகமன்று; பசு
பாசங்களிருக்கிற விடந்தவிர மற்றையவிடங்களில் வியாபகமாம். பசுப்பொரு
ளையே யிவர் பரிபூரணமென்று சொல்வதால் பதியிருக்க விடமில்லாமற் போகி
ன்றது. போகிறபோது பசுப்பொருள் மாத்திரமுண்டென்று சொல்லுகின்றவ
ராகின்றார்; அதோடு பதி இல்லையென்றுஞ் சொல்லுகின்றவராகின்றார். ஆகி
றபோது இவர் கடவு ளில்லையென்னும் நாஸ்திக வாதியாகவேண்டும். பதிக்
கும் பசுபாசங்களுக்கும் அபரிபூரணஞ்சொல்லுகின்றவர் பாலில் நெய் வியாபி
த்த திருட்டாந்தஞ் சொல்லலாம். ஏனென்னின் பாலும் நெய்யும் வேறு
வேறு இடத்தில் கண்டப்பொருளா யிருக்கின்றமையா னென்க. இவர் பதிக்
கும் பூரணத்வம், பசுவுக்கும் பூரணத்வஞ்சொல்லுகின்றமையின் பால் நெய்
திருட்டாந்தம் இவர்க்குதவாது.

## கண்ணொளியில் சூரியனொளி வியாபித்த உபமானம்.

இவ்வளவு உபமானங்க ளெல்லாம் பயனற்றுப்போயினவே; இனிக் கண்
ணொளியில் சூரியனொளி வியாபித்ததுபோலப் பசு பாசங்களில் பதி வியாபித்
ததென்று சொல்லலாமே யென்னின், இவ்வுபமானமும் தோஷமாய் முடிகி
றது. ஏனெனின் கண்ணுக்கு ஒளி யுண்டென்று சொல்லுகின்றமையா
னென்க. ஒளியில் ஒளி வியாபித்தலே யொவ்வாதாக ஒளியில்லாமையில்
ஒளி வியாபித்த லெங்ஙனங் கூடும்? சூரியன் ஒளிப்பொரு ளென்பதற்குச்
சூரியோதயமுதல் அஸ்தமிக்கிறவரையிலுள்ள நிலைமையே சாக்ஷிபகரும்.
கண் ஒளிப்பொரு ளல்ல வென்பதற்குச் சாக்ஷி சூரியோதயம் சந்திரோ
தயம் தீபம் முதலியன இல்லாக்காலத்து ஒருபொருளுந் தெரியாமல் கண்
இருளடைந் திருத்தலேயாம். இனிக் கண்ணுக்கு ஒளியுண்டென்று ஸ்தா
பிக்க வெழுந்து, சிவஞான சுவாமியார்: சிவஞானபோதம் 10 வது சூத்
திரம் முதலதிகரணம் முதல் வெண்பா உரையில் "மின்மினித் துணை
யாயினும் தானே விளங்கும் இயல்பில்லாத கண்ணுக் கொளிக்குண முண்
டென்பதற்குப் பிரமாண மெனனையெனின், அறியாது கடாயினாய்; ஆகா
யத்தின் கண்ணதாய சத்தகுணம் வியஞ்சகத் தானன்றித் தினைத்துணையானும்
தானென விளங்குமாறின்மையின் அதுபற்றி யெதிரொலிவடிவாய வோசை
யை ஆகாயத்தின் குணமன்று, வியஞ்சகப் பொருளின் குணமாமென்பார்
யாருமில்லை. அதுபோலக் கண்ணின்கண்ணதாகிய வொளியும் வியஞ்சகமுள்
வழி விளங்கி, அல்லுழி விளங்காமை மாத்திரையே பிறிதில்லை யாகலான்,
அதனைக் கண்ணின் குணம் அன்றென்றல் அறிவிலார் கூற்றேயா மெனவும்,
அக்கண்ணொளியாவது தன்னை விளக்குதற்குரிய வியஞ்சகப் பொரு ளேக
தேசமாயின் அனேக தேசமாய் விளங்கியும், வியாபகமாய் விளங்கியும் நிற்ப
தோ ரியல்பிற்றெனவும் உணர்க." எனக்கூறிக் கண்ணுக்கு இயற்கையில்
ஒளியுளதெனவும், உளதாயினும் துணை யில்வழி விளங்காதெனவும், துணை

யில்வழி விளங்காமை பற்றிக் கண்ணுக்கு ஒளியின்றெனக் கூறுதல் அடாதெனவும் பேசி, கண்ணின் ஒளியை விளக்குதற்கு விளக்கொளி துணையாமென்று விளக்கினர்.

ஆகாயத்திற்குச் சத்தகுணம் இயற்கையென்பது நூற்பிரமாணம். இயற்கையேனும் வாயுமுதலிய துணையில்வழிச் சத்தகுண முண்டாதலில்லை. அங்ஙனம் கண்ணுக்கொளி இயற்கையா யுண்டென்பதற்குப் பிரமாணம் ஏதுமில்லை. விளக்கு சூரியன் முதலிய இயற்கை யொளிப்பொருள்களுள்வழிக் கண்ணுக் கொளியிருத்தலைக் காண்கின்றோம். அவையில்லாவழிக் காண்கிலேம். வாயுவாதித் துணையினால் ஆகாயத்தின்கண் சத்தகுணமுண்டாம். அவை யில்லாவிடத்துச் சத்தகுணங் காண்கிலேம். காண்கிலமேனும் ஆகாயத்திற்குச் சத்த குணமுண்டென்பது சுருதியாதி நூற்பிரமாணமாதலினானும், வாயுவின்கண் ஆகாயம் நிறைந்திருத்தலினானும், ஆகாயத்தின் காரியம் வாயுவாதலினானும், கடத்திற்குப் பொருளாயிருப்பது எங்ஙனம் மண்ணோ அங்ஙனமே வாயுவாதிகளுக்குப் பொருளாயிருப்பது ஆகாயமாதலினானும், மண்ணைவிட்டுக் குடமிராததுபோல ஆகாயத்தை விட்டு வாயு இராமையானும், காரணத்தின்றன்மை காரியத்திற் குண்டென்னும் நியாயம் பற்றி நேரே காணப்படாவிடினும் வாயுவினிடம் இருப்பதுகொண்டு ஆகாயத்தினிடஞ் சத்தமுண்டென் றனுமானிக்க விடமுண்டாதலானும், ஆகாயத்திற்கு வாயு அபின்னமாகலினானும் ஆகாயம் சத்தகுணமுடையதென அங்கீகரிக்கின்றோம். அங்ஙனம் எவ்விதத்தினும் கண்ணுக்கும் விளக்கு முதலிய பொருட்குஞ் சம்பந்தமின்றே. இல்லாதபோது கண்ணுக் கொளியுண்டென் றெவ்வாறு அங்கீகரிக்கலாகும்?

முதலாவது:—கண்ணுக் கொளியுண்டென்பதற்குப் பிரமாணமில்லை.

இரண்டாவது:—சத்தத்தையுண்டாக்கத் துணையாயிருக்கும் வாயுவாதிகளில் ஆகாயம் நிறைந்திருக்கின்றது. இவ்வாறு விளக்கொளியில் கண்ணொளி நிறைந்திருக்கிறதென்று கூறுதல் கூடாது. ஏனெனில் கண்ணுக்கு ஒளியில்லை; இருக்கிறதானாலும் ஒன்றில் ஒன்று நிறைந்திருக்கு மென்பது கூடாது.

மூன்றாவது:—வாயுவுக்குப் பொருளாயிருப்பது ஆகாயம்போல விளக்கொளிக்குப் பொருளாயிருப்பது கண்ணன்று.

நான்காவது:—ஆகாயத்தைவிட்டு வாயு வில்லை. அன்றி ஆகாயத்திற்கும் வாயுவுக்கும் அபேதம். அவ்வாறு விளக்கைவிட்டுக் கண்ணில்லாமற் போகவில்லை; அன்றி விளக்குக்கும் கண்ணுக்கும் பேதம்.

ஐந்தாவது:—காரணத்தின்றன்மை காரியத்தில் இருக்கவேண்டுமென்கிற நியாயம் பற்றிக் காரியமான வாயுவின்கண் சத்தகுண மிருக்குங்கால் காரணமான ஆகாயத்தின்கண்ணுஞ் சத்தகுண மிருக்கவேண்டும். அதுபற்றி ஆகாயஞ் சத்தகுண மெனக் கொண்டாம். அங்ஙனமே விளக்கினுக்குக் கண் காரணமன்று. ஆதலால் காரணத்தின்றன்மை காரியத்தி லிருக்க வேண்டுமென்று கூறுவதுபோலக் கண்ணினொளி விளக்கின்க ணுளதெனக் கூறவியையாது.

இனி இயற்கையில் கண்ணுக் கொளியுண்டென்பது பிரத்தியக்ஷத்தானா? அநுமானத்தானா? பிரத்தியக்ஷமல்ல வென்பதற்கு இருட்காலத்தில் கண் இருளடைந்திருப்பதே சாக்ஷியாம். விளக்கு, சூரியன் முதலிய பொருள்க

ளுள்ளபோது ஒளிசெய்கின்றதென்னின் அக்காலத்துக் கண் மாத்திரமா?
எப்பொருள்களுமே யொளிசெய்கின்றன. கண்ஃ ஒளி செய்யவில்லையெனயாம்
கூறவந்தோமில்லை; அதற்கியற்கை யொளியுளதா? இலதாவென்பதுவே யிப்
போது நேர்ந்த ஆக்ஷேபம். கண்ணுக்கொளி யியற்கையா யுண்டென்னுங்
கால் மினிமினி, விளக்கு, ஜோதிவிருக்ஷ முதலியன இருட்காலத்தில் தாமே
விளங்குதல்போலக் கண்ணும் விளக்கமுற வேண்டும். அங்ஙன மின்மை
யின் பிரத்தியக்ஷ மன்று. அனுமான மென்னின் அநுமானத்திற்குப் பிரத்தி
யக்ஷம் யாது? அந்தப்பிரத்தியக்ஷம் கண்ணுக்கு ஒளியில்லாக் காலத்திலன்றோ
நிகழவேண்டும்? ஒளியில்லா இருட்காலத்தில் கண்ணுக் கொளியுண்டென்
றனுமானித்தற்கு ஏதும் பிரத்தியக்ஷ மின்மையின் அநுமானமென்று கூறு
தற்கு மிடனின்றாம்.

இனிக் கண்ணுக் கொளி யில்லை யென்பதற்கு ஆதாரங் கூறுவாம். சூரி
யன் விளக்கு முதலியவைகளுக்கு ஒளி யியற்கையி லுண்டு. சந்திரன் முத
லிய பொருள்களுக்கு இயற்கையில் ஒளியில்லை யென்பது ஒளி நூலார் ஒத்
துக்கொண்ட விஷயம். சந்திரன் ஒளி செய்கின்றானே யெனின் அவ்வொளி
சந்திரனதொளியன்று; சூரியனதொளியேயாம். சூரியனொளி சந்திரன்மேல்
பட அவ்வொளியைப் பெற்றுச் சந்திரன் ஒளிசெய்கின்றான். திருட்டாந்த
மாகச் சூரியனுக் கெதிரில் ஒரு கண்ணாடியை வைத்தால் சூரியனொளி
கண்ணாடியிற்பட்டு அக்கண்ணாடியிலிருந்து ஒளி யெழும்பிச் சூரியனொளி
படாத விடத்தில் பாய்கின்றது. பாய்கின்ற வொளி நேரே கண்ணாடியி
லிருந்து வந்ததாயினும் உண்மையில் கண்ணாடியிலிருந்து வந்ததன்று;
கண்ணாடிக் குரியதுமன்று. சூரியனிடத்திலிருந்து வந்ததும், சூரியனுக்
குரியதுமாம். அங்ஙனமே கண்ணினிடத்து ஒளி காணப்பட்டதாயினும்
உண்மையில் அதனிடத்துள்ளதன்று. கண்ணாடிக்கு ஒளியுண்மையி லுள்ள
தேல் சூரியன் விளக்கு முதலிய வொளிப்பொருள்க ளில்லாக்காலத்துக்
காணப்படல் வேண்டும். அங்ஙனமே கண்ணுக் கொளியுண்டேல் அது
சூரியன் விளக்கு முதலியன வில்லாக் காலத்துத் தோன்றவேண்டும். மின்
மினி நள்ளிருட்காலத்தும் அதற்குரிய அற்பவொளியோடு மினுமினுக்கு
தல் கண்டாம். கண்ணுக் கொளி யியற்கையில் உண்டேல் அற்பமாகவேனும்
சூரியன் முதலிய வொளிப்பொரு ளில்லாக்காலத்துக் காணப்படல்வேண்
டும். அங்ஙன மின்மையின் கண்ணுக் கொளியுண்டென்னும் வாதம் துர்
வாதமென்றறிக.

அதிலும் சூரியனிடத்து நின்றும் ஒளியை நேரே கண் பெறுவதில்லை.
அவ்வொளி இதரப்பொருள்களின்மேல் விழுந்து அதன் பிரதிபலனம் கண்
ணிற்பட, பின்பு கண் பொருள்களை யறிகின்றது. சூரியனிடத்துள்ள வொளி
பூமிபிற்படுவதற்கு எட்டுமினிட்டுச் செல்லும். அதன் பிறகே அதன் பிரதி
பிம்பவொளி கண்ணிற் படுகின்றது. சூரியனொளி வெளிப்பட்ட அதேக்ஷணத்
திலேயே கண்ணுக் கொளியுண்டாகாமல் சற்றுப்போது தாமதித்து அதன்
பிறகும் அதனொளி நேரேபடாமல் அதன் பிரதி பிம்பவொளிபட்டு ஒளிசெய்
வதாயிருக்க, கண் இயற்கை யொளிப்பொருளெனக்கூறுவது நியாயமாமோ?
சூரியனொளி பலபொருள்களின்மேல்பட்டு அதன் பிரதிபலனம் கண்ணில்
படுவதாயினும் அந்தப் பிரபலனவொளியிலும் பேரொளி திடீரெனக் கண்
ணிற்படுவது கூடாது. படின் கண்ணுக்குக் கெடுதி சம்பவிக்கும். ஆதலால்

கண், முன்பு சிற்றொளியைக் கிரகித்துப் பின்பு படிப்படியாய்ப் பேரொளியைக் கிரகிக்கின்றது. இதற்குத் திருட்டாந்தமாக நாம் இருட்டிலிருந்து திடீரெனப் பேரொளியுள்ளவிடத்தில் செல்லின் அப்பேரொளியைப் பார்க்கக் கண் கூசுகின்றது. அதுபற்றியே நம்மவர் இரவில் தூங்கியெழுந்திருக்கும்போது முன்பு சிற்றொளியுள்ள கண்ணாடியைப்பார்க்கிறார்கள். (முனபு கண்ணாடிக் கொளியில்லையென்று கூறிப் பின்பு சிற்றொளியுள்ளதெனக் கூறுவது பொருத்தமாமோவெனின் கண்ணாடிக் கொளியில்லையென்பது உண்மையே. ஆனால் சூரியோதயத்திற்குமுன் கிழக்குத்திக்கில் உண்டாகும் அற்பவொளி கண்ணாடியில் படுகின்றமையால் அந்த அற்பவொளியைப் பெற்று அவ்வற்பமாகவே ஒளிசெய்கின்றது. ஆதலால் அந்த அற்பவொளியும் கண்ணாடிக்குச் சுயமாயின்றென்பதையறிக.) கண்ணுக்கு இயற்கையில் ஒளியுண்டென்பதுண்மையானால் அக்கண் திடீரெனப் பேரொளியைப்பார்க்கக் கூசுவானேன்? படிப்படியாய்க் கிரகிப்பானேன்? கண்ணுக்கு ஒளியுண்டென்று ஸ்தாபிப்பதற்கு ம-ா-ஸ்ரீ சாமக்குளம் வெங்கடரமணதாஸரென்பவர் பூனை கோட்டான்களுக்கு இரவில் ஏன் கண்தெரிகிறதென்று கேட்கிறார். அந்தக்கேள்வி அவரது மதத்திற்கு அநுகூலமா? பிரதிகூலமா? என அவர் கவனிக்கவில்லை. ஒரு ஊருக்குப்போக வுத்தேசித்தவன் அதற்கு வழி யெது என விசாரித்து அவ்வழியே போகவேண்டுமல்லது அதற்குவிரோதமான வழியிற்செல்வது கூடாது. செல்லின் உத்தேசித்த ஊருக்குப் போகமாட்டான். அங்ஙனமே ஷை கேள்வி எதை யுத்தேசித்துக் கேட்க எழுந்தனரோ அதற்குப் பிரதிகூலமாவதோடு தம் கக்ஷிக்குப் பலவீனத்தையு முண்டாக்குகின்றது. யாங்ஙனமெனின் காட்டுதும். பூனை கோட்டான்களுக்கு இருளில் கண்தெரிவதையே ஆதாரமாகக் கொண்டு வாதஞ்செய்யவரின் கண்ணொளியில் சூரியனொளி வியாபித்த வுவமானஞ் சொல்லவேண்டிய அவசியமில்லை. பூனை கோட்டான்கள் சூரியன் முதலிய வுதவியின்றிப் பொருள்களை யறிகின்றமையானென்க. ஒன்றிலொன்று வியாபிப்பதற்கு இருபொருள் ஆவசியகம். இருட்டில் பூனை கோட்டான்கள் பொருள்களை யறியும்போது சூரியன் விளக்குமுதலிய வொளிப்பொருள்களில்லாமையால் பூர்வபக்ஷியார் எடுத்துக்கொண்ட வுபமேயத்துக்கு அது உபமானமாகாது. அன்றிச் சிவஞானசுவாமிகள் பூனை கோட்டான்களது கண்ணைச்சொல்லவில்லை. ஏனெனில் அதில் இருவொளியில்லை. அந்தச் சுவாமிகள் இருட்டில் 'மின்மினித் துணையாயினும் தானே விளங்கு மியல்பில்லாத கண்ணுக்கு' எனச் சிவஞானபோதவுரையில் கூறியிருத்தலால் மனிதன் கண்ணே அவரெடுத்த வுபமானமாமென்க.

கண்ணுக்கு ஒளியுள்ளதென வொப்புக்கொள்ளினும் அதனால் பூர்வபக்ஷியார் மதத்துக்குச் சாதகமொன்றுமில்லை; பாதகமேயாம் என்பதை விளக்குவாம். கண்ணொளியில் சூரியனொளி வியாபித்ததென்ப திவர் பக்ஷம். இதற்கு உவமேயம் சிவன் பசுபாசங்களில் வியாபித்ததென்பது. ஒளி யென்பது குணமேயன்றிக் குணியன்று. பதியும், பசுபாசங்களும் குணமன்று; குணியாகும். உவமேயம் குணிகுணியில் வியாபித்ததென்பது. உவமானமோ குணம் குணத்தில் வியாபித்ததென்பதாம். குணத்தில் குணி வியாபகமாமேயன்றிக் குணத்தில் குணம் வியாபகமாகாது. அதிலும் அததின் குணத்தில் அததின் குணி வியாபகமாமேயன்றி ஒருகுணியின் குணத்தில் மற்றொரு குணியின் குணம் வியாபகமாகாது. சுண்ணமானது தனது குணமான வெண்மையில் தான் வியாபக

மாமேயன்றி, தனக்கன்னியமாயிருக்கும் மற்றொரு குணியான பாலினது வெண்மையில் வியாபகமாகாது. விளக்கினதொளி விளக்கைவிட்டு வேறுபடுகின்றதே யெனின் அதைப்பற்றி விளக்குவாம். விளக்கினதொளி வெளிப்பட வெளிப்பட எண்ணெய் ஆய்விடுகின்றது. ஆய்விடுகின்ற எண்ணெயானது அணுரூப வொளிக்கூட்டமாய் வெளிப்பட்டுப் பரவுகின்றது. இப்படியே மற்றொரு விளக்கின் எண்ணெயானது அணுரூப வொளிக்கூட்டமாய் வெளிப்பட்டுப் பரவுகின்றது. இரண்டு அணுரூப வொளிக்கூட்டங்கள் கலக்கிறபோது பின்னமாய்க் கலக்கின்றனவா? அபின்னமாய்க் கலக்கின்றனவா? என்னின் அந்த வொளிக்கூட்டங்கள் அணுப்பொருள்களாயிருப்பதால் பின்னமாய்க் கலக்கின்றனவென்றே கூறற்பாலனவாம். ஒரு அணு பிறிதொரு அணுவுக்கு மேலாகவாதல் கீழாகவாதல் பக்கமாகவாதல் இருத்தல்வேண்டுமே யன்றி யொன்றிலொன்றடங்கி அபின்னமாய்க் கலக்கின்றதெனக் கூறலொண்ணாது. ஒன்றிலொன் றடங்குகின்றதென்றாலும் ஒன்றற்குள் மற்றொன்று பின்னமாகவே அடங்கியிருக்கும். கூண்டிற்குள் பறவை யடங்கி யிருக்கின்றதென்றாலும் மெழுக்கினுள் பொற்பொடி யடங்கி யிருக்கின்றதென்றாலும் அதுவரையில் ஒன்றிருந்த ஸ்தானத்தில் மற்றொன்றிராமலே யிருக்கின்றதென்பது கண்கூடு. இதனால் அணுரூபவொளிகள் கண்டப்பொருள்களெனக் கண்டாம். ஆதலால் இது உவமேயத்திற்குப் பொருந்தாது. உபமேயம் அகண்டபரிபூரணமான சிவன்: அகண்டபரிபூரணமான பசுபாசங்களில் வியாபிக்குமென்பது. அகண்டபரிபூரணமான ஒருபொருள் பிறிதொரு அகண்டபரிபூரணமான பொருளோடு வியாபிக்குமென்று சொல்லும் உவமேயத்துக்கு அவ்வியாபக ஏகதேச கண்ட அணுப்பொருள்கள் ஒன்றோடொன்று ஒருபக்கத்தில் மாத்திரங் கூடியிருக்கும் உவமானங் கூறுவது பொருந்துமா? பொருந்தாது, பொருந்தாது.

சூரியனிடத்துள்ள வொளி சூரியனைவிட்டு வேறுபட்டு எங்கும் பரவுகின்றது. அதுபோலப் பூர்வபக்ஷியார் கொள்கையின்படி கண்ணிலிருக்கும் ஒளி கண்ணைவிட்டு வேறுபட்டுப் பரவுகின்றதா யாகவேண்டும். இரண்டும் அணுக்கூட்ட வொளிப்பொருள்களானமையின் பின்னமாய் ஒன்றோடொன்று கூடியிருக்கின்றதென்றே சொல்லவேண்டும். ஒருபொருள் பிறிதொரு பொருளோடு கூடின் ஒருபக்கங்கூடி மற்றப்பக்கங் கூடாதிருப்பது கண் கூடாகலின் சூரியனிடமிருந்தெழுந்த வொளியும் கண்ணினிடமிருந்தெழுந்த வொளியும் பின்னமாய் ஒருபக்கங்கூடி மற்றப்பக்கங் கூடாதிருக்குமென்றே சொல்லற்பாலதென்க. இவ்வாறு பதியினிடமிருந்தும் பசுபாசங்களிடமிருந்தும் ஏதோ பொருள்கள் வெளிப்பட்டு ஒன்றோடொன்று பின்னமாக வொருபக்கங் கூடியும் மற்றப்பக்கங் கூடாமலும் இருக்கவேண்டும். அப்படித் தோன்றிய பொருள்கள் யாவோ அறியோம். பதி பசு பாசங்களைவிட வேறு பொருளில்லையென்ற பூர்வபக்ஷியார் அவைகளை யெங்கிருந்து கொண்டுவருவாரோ அறியோம். விளக்குமுதலியவற்றிலிருந்து ஒளி வெளிப்படுவதற்கு எண்ணெய் முதலியன எப்படி ஆவசியகமோ, அப்படியே பதியினிடத்தினின்றும் பசுபாசங்களினிடத்தினின்றும் ஏதோ பொருள்கள் வெளிப்படுவதற்கு எண்ணெய் முதலியன போன்ற பொருள்கள் யாவை? உபமானப் பொருள்களுக்கு எண்ணெய் முதலியன இல்லாவிடில் ஒளியும் வெளிப்படாது; விளக்கு முதலியனவும் இரா. அப்படியே பதிக்கும் பசுபாசங்கட்கும் எண்ணெய் முதலியன

போன்ற பொருள்கள் இல்லாவிடில் அவற்றினின்றும் ஒளிபோன்ற பொருள்களும் வெளிப்படா; பதிபசுபாசங்களுமிரா. இராவாகவே பூர்வபக்ஷியார் மதம் சூனியமதமாய்ப்போம். ப்பாமாயின் இவர் சூனியமதவாதி யாவார்.

இனி அதிகவொளியை யொளியென்றும் குறைந்த வொளியை இருளென்றுங்கொண்டு ஒன்றில் ஒன்று வியாபகஞ்சொல்வாமென்னின் இதற்கு மத்தாப்பு ஒளியையும் விளக்கொளியையும் திருட்டாந்தமாக வைத்துப் பார்ப்போம். மத்தாப்பு ஒளியை நோக்க விளக்கொளி குறைவே. இவ்விரண்டு ஒளியும் பேதமாய்க் கலக்கிறதா? அபேதமாய்க் கலக்கிறதா? குணமான வொளியில் அதிகங் குறைச்ச லிருந்தாலும் குணியான அணுப்பொருளில் அதிகங் குறைச்ச லில்லையே. அதிக வெண்மையுள்ள ஓர் பெரிய காகிதமும் அற்பவெண்மையுள்ள ஓர் சிறிய காகிதமுமானலும் ஒருபொரு ளிருந்தவிடத்தில் மற்றொரு பொரு ளிராதே. குணத்திலும் திரவியத்திலும் அதிகப்பட்ட ஒன்று: அவைகளில் குறைவுபட்ட திரவியத்தின் இடத்தை அபகரித்துக்கொள்ளுமா? கொள்ளாதன்றே? இன்னும் இவைபோலப் பல ஆக்ஷேபங்க ணிகழ்வதால் சத்தான பரிபூரண சிவன்: பசுபாசங்களைச் சத்தெனச்சொல்லி அவைகளில் வியாபிக்குமென்பது ஒருபோதும் ஒவ்வாது. சிவன் சூட்சுமவொளியென்றும் பசு தூலவொளியென்றும் கூறும் வாதமும் இதனல் மறுக்கப்பட்டமை யறிக.

இனிக் கண்ணுக்கொளி யெவ்வகையா யுண்டென்று கேட்கின் அதை விளக்குவாம்.

சூரியன் ஒளியுள்ளபொருள். சூரியனதொளி யெங்கும் பரவி வெய்யலாயிருக்கின்றது. அந்த வெய்யலில் சூரியனுக்கெதிராக வொருகண்ணுடியைப் பிடித்தால் சூரியனதொளி கண்ணுடியின்பேரில் விழுந்து அக்கண்ணுடி யொளிசெய்கின்றது. இயற்கையில் கண்ணுடிக்கொளியில்லை. ஆயினும் அது சொச்சபதார்த்தமா யிருப்பதால் சூரியனதொளியைப்பெற்று ஒளிசெய்கின்றது. கறுப்பு வில்லூதிப்பட்டின்பேரில் சூரியனொளிபட்டும் அவ்வாறு ஒளிசெய்வதில்லை. இதற்குக்காரணம் கண்ணுடியைப்போல வில்லூதிப்பட்டுச் சொச்சபதார்த்தமன்று. இவற்றில் சூரியன் ஒன்று, கண்ணுடியொன்று, கறுப்பு வில்லூதிப்பட்டு ஒன்று ஆகிய முப்பொருளில் சூரியன் இயற்கை யொளிப்பொருள். கண்ணுடி இயற்கையொளியுள்ள பொருளன்றாயினும் சொச்சப்பொருளாயிருப்பதால் சூரியனதொளியை வாங்கி யொளிசெய்கின்ற பொருளாம். கறுப்பு வில்லூதிப்பட்டோ தான் இயற்கை யொளியுள்ள பொருளன்றாயினும் இயற்கை யொளியுள்ளபொருளான சூரியனதொளியையேனும் பெற்று ஒளிசெய்ய வல்லமையற்ற (சொச்சத் தன்மையில்லா) மலினப்பொருளாம். இம்மூன்றில் கண்ணனது கண்ணுடியைப் போன்ற இயற்கை யொளியில்லாச் சொச்சப்பொருளாயிருப்பதால் இயற்கையொளிபெற்ற சூரியன் விளக்கு முதலிய பொருளின் ஒளியைப்பெற்று ஒளிசெய்கின்றது. சூரியன் விளக்கு முதலிய இயற்கை யொளிப்பொரு ளில்லாக்காலத்துக் கண்ணுடி யெங்ஙன மொளிசெய்யவில்லையோ, அங்ஙனமே ஷை இயற்கை யொளிப் பொருளில்லாக் காலத்துக் கண்ணும் ஒளி செய்வதில்லையாம். இதனல் கண்ணுக்கு இயற்கையில் ஒளியில்லையென்றும் சூரியன் விளக்கு முதலிய வியற்கையொளிப்பொருளின் ஒளியைப்பெற்று ஒளிசெய்கின்றதென்

றும் ஏற்பட்டன. ஆதலால் கண்ணுக்கு இயற்கையில் ஒளியுண்டென்று கூறுதல் கூடாது.

ஒளி, கண்ணுக்குச் செயற்கையென ஏற்பட்டமையால் அந்தச் செயற்கையொளி பிரதிபிம்பமென்றும் போலியென்றும் சொல்லப்படுமென்க. பிரதிபிம்பமும், போலியுமான கண்ணொளியில் சூரியன் விளக்கு முதலிய வியற்கையொளி வியாபித்திருக்கின்றதா? இல்லையா? வென்னின் வியாபித்தேயிருக்கின்றது. எங்ஙனமென்னின் நமதுமனம் சந்திரனை இடைவிடாது நினைக்குமாயின் அச்சந்திரன் மனத்திற்குத் தோன்றும். தோன்றும் அச்சந்திரன் மனத்திலிருந்தே தோன்றுகின்றமையால் மனத்தைத் தவிரச் சந்திரனென்பதில்லை. இல்லாதபோது மனம் ஷை சந்திரனில் வியாபித்ததெனச் சொல்லலாம். இன்னொரு திருட்டாந்தங் கூறுவாம். நமது முகம் கண்ணாடியிற் பிரதிபிம்பிக்கிறபோது அந்தப் பிரதிபிம்ப முகத்தில் நமது யதார்த்தமுகம் வியாபித்ததென்று சொன்னால் யாதுகுற்றம்? யதார்த்த முகத்தைத் தவிரப் பிரதிபிம்ப முகத்துக்குப் பொருளில்லாமையாலும் யதார்த்தமுகமே பிரதி பிம்பமுகமா யிருப்பதாலும் யதார்த்தமுகம் பிரதிபிம்ப முகத்தில் வியாபித்ததென்று நிராக்ஷேபமாய்ச் சொல்லலாம். இத்திருட்டாந்தங்களின்படியே இயற்கை யொளியுள்ள சூரியன் விளக்கு முதலியவற்றின் ஒளி: செயற்கையாயும் போலியாயும் பிரதிபிம்பமாயுமுள்ள கண்ணொளியில் வியாபித்ததென்பது யுக்திக்கும் அநுபவத்துக்கும் ஒத்திருக்கின்றது. இந்த அர்த்தத்தை யுணராமல் இவரும் இவர் நண்பரும் மற்றவரும் கண்ணுக்கு இயற்கையாய் ஒளியுண்டெனக்கூறி மலைந்தார்கள். கண்ணொளியில் சூரியனொளி வியாபித்ததென்று பூர்வபக்ஷிகள் கூறுவது சரியானதுதான். ஆனால் அதனுண்மையை யுணர்ந்தார்களில்லை. அத்துவிதிகள் அதனுண்மையை யுணர்ந்தமையால் சூரியன் விளக்கு முதலியவற்றினொளி யதார்த்தமென்றும், கண்ணொளிப் போலியென்றும் கூறி யதார்த்தம்: போலியில் வியாபித்ததெனத் தமது யதார்த்த வாதத்துக்குப் பொருத்தமாய்ச் சொல்லுகின்றார்கள். இதன்படியே யுவமேயத்தைப் பார்க்கின் சூரியனொளி ஸ்தானத்தில் பதியும், கண்ணொளி ஸ்தானத்தில் பசுபாசங்களும் ஒத்துப்போகின்றன. உபமானத்தில் சூரியனொளி யுண்மை; கண்ணொளிப் போலி. அங்ஙனமே உபமேயத்தில் பதி யுண்மை; பசுபாசங்கள் போலியாம். யதார்த்தமான சூரியனொளி: போலியான கண்ணொளியில் வியாபித்தமைபோல, யதார்த்தமான பதி: யதார்த்தப்போலியான பசுபாசங்களில் வியாபிக்கின்றதென்பதாம். இதில் யாதொரு ஆக்ஷேபமு மில்லை. இதனுண்மை யிப்படி யிருக்கவும் உபமானம் உபமேயம் ஒத்துப்போகவும் பிரதிவாதியார் ஒன்றைப் பிறிதொன்றாக மயங்கிக்கூறி, சுருதிக்கும் யுக்திக்கும் அநுபவத்துக்கும் வேறுபட்டுப்பேசி விழலராகின்றார்.

## சூரியன், ஒளியில் வியாபித்த வுபமானம்.

இனிச் சூரியன் ஒளியில் வியாபித்ததுபோலப் பதி: பசுபாசங்களில் வியாபித்ததென்னின் இதுவுந் தோஷமேயாம். இவர் மதத்தில் பதியொரு பொருள், பசு ஒரு பொருள், பாசம் ஒருபொருள். இவை தனித் தனிப் பொருள்கள். உபமானத்தில் சூரியனென்பது ஒரேபொருள். சூரியனிடத்

துள்ள வொளி குணம். அதிலும் சொரூபகுணம். சூரியனையும் சொரூபகுணமானவொளியினையும் இரண்டெனச் சொல்லப்படாது. உபமேயத்தில் வேறானபசுபாசங்களில் பதி வியாபித்ததென்பது. உபமானத்திலோ ஒளி வேறு பொருளாயிருந்து அதிற் சூரியன் வியாபிக்கவில்லை. சூரியனே ஒளி, ஒளியே சூரியன். அங்ஙனம் இவர்மதப்படி பதியே பசு பாசங்களல்ல; பசு பாசங்களே பதியல்ல. "எப்படிச் சூரியனே யொளியோ, ஒளியே சூரியனோ, அப்படியே பதியே பசுபாசங்கள், பசுபாசங்களே பதியெனக் கூறுவா"மென்னின் அங்ஙனமேல் சூரியனது சொரூபகுணமே 'யொளியா யிருப்பதுபோலப் பதியினது சொரூபகுணமே பசுபாசங்களாதல் வேண்டும். ஆயின் பதியைவிட்டுப் பசுக்கள் பிறப்பு இறப்பு நரக துக்கங்களைப் பெறுதல், சிற்றுணர் வடைதல் அடிமையாதல், அஞ்ஞானத்தைப் பெற்றிருத்தல், காமம் குரோதம் உலோபம் மதம் மாற்சரியம் இரீஷை அசூயை டம்பம் தர்ப்பம் அகங்காரம் இவைகளைப்பெறுதல் கூடுமோ? பதி ஞானத்தைப் பெற்றிருக்க, பசு அஞ்ஞானத்தைப் பெற்றிருத்தல் கூடுமா? சூரியன் குணி; ஒளிகுணம். அங்ஙனமே பதி குணியாயும் பசுபாசங்கள் குணமாயும் ஆகவேண்டும். சூரியனைவிட்டு அதற்கபின்னமான வொளி வேறுபட்டு வேறு குணிப்பொருளாயாகக்கூடுமா? உபமானத்திற் கூடாதபோது உபமேயத்தில் பதிக் கபேதகுணமான பசு: பதியை விட்டு வேறாய்க் குணிப் பொருளாகிப் பிறப் பிறப்பாதிகளை யடைவது கூடுமா? சூரியனும் ஒளியும்போலப் பதியும் பசுபாசங்களுமென்று கூறின், அதுஷை பத்திரிகையில் நிலஸ்தானத்தில் பதியையும் வித்துஸ்தானத்தில் பாசத்தையும் இவர் சொல்லியதற்கு விரோதமாகின்றது. ஏனெனில் ஒரு உபமானத்தில் சூரியனும் ஒளியும் அபேதம்; மற்றொரு உபமானத்தில் நிலமும் வித்தும் பேதம். சூரியனும் ஒளியும் போலென்னும் உபமானத்தினால் பதிக்கு மேற்கூறிய பிறப்பு இறப்பு முதலிய தோஷங்களெல்லா முண்டாகின்றன; நிலமும் வித்தும் என்ற மற்றொரு உபமானத்தினால் பதி அபரிபூரணப் பொருளென்கிற தோஷத்தையடைகின்றது. நிற்க, உலகுக்குப் பாசம் முதற்காரணமும், பதி நிமித்தகாரணமும் சொல்வது இவர்மதம். இதற் குபமானம் குடத்துக்கு முதற்காரணம் மண்ணும் நிமித்தகாரணம் குலாலனுமாம். நிமித்தகாரணனான குலாலன்பேதமும் முதற்காரணமான மண் அபேதமுமாம். இதன்படி உலகுக்கு முதற்காரணமான பாச ஸ்தானத்திற்கு ஒளியையும் நிமித்தகாரணனான பதி ஸ்தானத்துக்குச் சூரியனையும் சொல்ல வேண்டியிருக்கின்றது. இப்படிச் சொல்வதிலிரண்டுமபேதமாகின்றன. அபேதமாகிறபோது "உலகுக்குப் பதியை முதற்காரணஞ் சொல்லப்படாது, நிமித்த காரணந்தான் சொல்லவேண்டு"மென்கிற வாதம் அடிபட்டுப்போகிறது. பதிக்குச் சூரியனையும் பசுபாசங்கட்கு ஒளியையுஞ் சொல்வதில் பின்னும் ஒரு தோஷமுண்டாகின்றது. பதி ஞானரூபம்; பாசம் அஞ்ஞானரூபம். இரண்டும் எப்படி யொன்றாகும்? உபமானத்தில் சூரியனும் ஒளியும் ஒன்றுபட்டிருப்பது பிரத்தியக்ஷம். அம்மாதிரி ஞானமும் அஞ்ஞானமும் ஒன்றுபட்டிருக்குமா? சூரியன், ஒளி ஆகிய சொல் இரண்டானாலும் பொருள் ஒன்றுதான். அதுபோலப் பதியும் பாசமும் எனச் சொல் இரண்டானாலும் பொருள் ஒன்றாகவேண்டும். இரண்டும் அபின்னமாகிறபோது பாசமான சடத்தை யபின்னமாகவுடைய பதியும் சடமாகவேண்டும். எது சடமோ அது அசத்தாகவேண்டும். அசத்தென்பது பொய்யானதால் பதி பொய்யாகவேண்டும். பதி

பொய்யாயின் சிவனாகியகடவு ளில்லை யென்றாகின்றது. இல்லையாகிறபோது இவர் அசைவரும் நாஸ்திகருமாவார்.

இனிச் சூரியனும் ஒளியுமொன்றாவதுபோலப் பதியும் பசுவுமொன்றாவதிலும் தோஷமுள்ளது. இரண்டு மொன்றானல் பதியை யடைவதற்குப் பசு: விரதம் தவம் பத்தி ஞானம் இவைகளைச் செய்யவேண்டுவதில்லை. ஒளி: சூரியனையடைதற்கு யாதுமுயற்சி செய்யவேண்டும்? சூரியனைவிட்டு வேறு தனிப் பொருளாயிருந்தால், அதனையடைதற்கு ஒளி முயற்சி செய்யவேண்டுவ தவசியமே. அங்ஙனம் சூரியனும் ஒளியும் வேறன்றே. ஒளி பிரிந்தால் பிறகு சூரியனென்கிற பொருளேது? அதுபோலப் பதியைவிட்டுப் பசு பிரிந்தால் பதியே யில்லாமற்போவரே. குணம் தனித்து நின்று ஒருகாரியமுஞ் செய்யாதென்பது யாவர்க்கும் அனுபவமாம். குணஞ் செய்கிறதானல் குணியுஞ் சேர்ந்தே செய்யவேண்டும். இங்ஙனமே சூரியனும் தனக்கு அபின்னமான வொளியோடு கூடிநின்றே பிரகாசித்தல், போதல், வருதலாதிகள் செய்கின்றான். இது போலவே பதியும் பசுவு மாதல்வேண்டும். பசு: முத்திக்குவேண்டிய பத்தி யோகங்கள் ஞானசெய்யும்போது, பதி: யொன்றுஞ் செய்யாது சும்மா இருக்குமா? அதுவுஞ் சேர்ந்துதானே செய்யவேண்டும். சேர்ந்து செய்கிறபோது யாரை நோக்கிப் பத்தியாதிகள் செய்கிறது? பசுதான் பதியை நோக்கிச் செய்கிறது? பதி யாரை நோக்கிச் செய்கிறது? பசு: பிறப்பு இறப்புகளையும் அவற்றா லுண்டாகும் பெருந்துக்கங்களையும் அனுபவிக்கும்போது பதியும் கூடத்தானே அனுபவிக்கவேண்டும். சூரியனும் ஒளியும்போலப் பதியும் பசுவும் அபேதமானல் பதியினது சர்வஞ்ஞத்துவம் பசுவுக்கு மிருக்கவேண்டுமே. இன்னும் பதியினிடத்துள்ள எண் குணங்கள் முதலியனவும் பசுவினிடத் திருக்கவேண்டுமே. அப்படிப்பட்ட சிறந்தகுணங்கள் பசுக்களாகிய நம்மிட மேதுமில்லையே. அன்றிப் பசுக்களாயிருக்கும் அனுபவம் நம்மிட மிருக்கின்றதேயன்றிப் பதியாயிருக்கும் அனுபவமில்லையே.

## கடல், நீரில் வியாபித்தவுபமானம்.

இனிக் கடல்: நீரின்கண் வியாபித்தலைப்போல, பதி: பசுபாசங்களில் வியாபிக்கின்றதெனச் சொன்னல் குற்றம் யாதெனின் இதுவுங் குற்றம் குற்றமேயாம். நீரையன்றிக் கடலென்னுஞ் சொல்லுக்குப் பொருளில்லவேயில்லை. நீரினது நிலைமைக்கும் அது இருக்குமிடத்திற்குமியையக் கடல் ஏரி குளம் ஆறு கிணறு மடு முதலிய பேர் பெறுகின்றதேயன்றி, மற்றப்படிக் கடல் முதலிய வற்றிற்குப் பொருளின்று. கடல்: நீரில் வியாபித்ததென்னின் கடலுக்குப் பொருளிருந்து வியாபித்ததா? பொருளில்லாதிருந்து வியாபித்ததா? பொருளிருந்து வியாபித்ததென்று கூறவொண்ணாது; நீரையன்றிக் கடலுக்குப் பொருளில்லை யென்பது பிரத்தியக்ஷமாகவினென்க. பொருளில்லாதிருந்து வியாபித்த தென்னின் பொருளேயில்லாத போது அதுவியாபித்ததென்ப தெங்ஙனம் அமையும்? கடலுக்குப் பொருளில்லாதிருந்து நீரில் வியாபித்ததென்று சொல்வதற்கும் மலடிமகனுக்குப் பொருளில்லையென்றுசொல்லிப் பின் அவன்மலடியோடு வியாபித்தானென்று சொல்வதற்கும் என்னபேதம்? பொருளில்லாமை யிரண்டிற்குஞ் சரியானதால், கடல்: நீரில் வியாபித்ததென்பது வெற்றுரையேயாம். இனி யுபமேயத்தைப் பார்ப்போம். கடல் ஸ்தானத்தில் பதி, நீர் ஸ்தானத்தில் பசு பாசங்கள், உபமா

னத்தில் கடலுக்கு எங்ஙனம் பொருளில்லையோ, அங்ஙனமே உபமேயத்தில் பதிக்குப் பொருளில்லை. பதிக்குப்பொருளே யில்லாதபோது அது பசுபாசங்களில் வியாபித்ததென்பது பொருந்துமா? இந்த வுபமானத்தால் பசுபாசங்கள் மாத்திரம் உள்ளனவென்றும், பதியென்பது இல்லையென்றும் ஏற்பட்டன. ஏற்பட்டமையால் இவருடைய வாதம் பதிப்பொருளை யொப்பாத நாஸ்திக வாதமாய் முடிகின்றதென்க.

## படிகம், பலவர்ணங்களில் வியாபித்தவுபமானம்.

படிகமானது சுத்த வெண்மையாயிருந்து அது பலவர்ணங்களில்வியாபித்ததுபோலப் பதியும் பசுபாசங்களில் வியாபிக்கின்றது என்னின் இது இவர் மதத்துக்கு முற்றும் பாதகமாய் முடிவதோடு அத்வைதிகளுக்கு முற்றும் சாதகமாய் விடுகின்றது. படிகம் பலவர்ணங்களில் வியாபித்ததென்பது உண்மையன்று; தோற்றமாம். படிகம் வெண்மையாய்த் தோற்றும்போதும், அடுத்த பலவர்ணங்களாய்த் தோற்றும் போதும், தான், உண்மையில் வெண்மையாகவே யிருக்கின்றது. கண்ணாடியிற் றோற்றியமுகம் எப்படிப் பொய்யோ, உண்மையில் முகம் கண்ணாடியில் எப்படி யில்லையோ, அப்படியே படிகத்தில் தோற்றிய பலவர்ணங்கள் பொய்யாம். அன்றிப் படிகத்தில் பலவர்ணங்கள் இல்லவேயில்லை. ஆதலால் படிகம் பலவர்ணங்களில் வியாபித்ததென்பது பொய்யாம். இதுபோல் பதியின்கண் பசுபாசங்களில்லவேயில்லையென்பதனோடு, பதி, பசுபாசங்களில் வியாபிக்கவே யில்லையென்றுங் கூறவேண்டும். படிகம் ஒரு இடத்திலும் பலவர்ணப்பொருள்கள் ஒரு இடத்திலு மிருக்கின்றமையின் அவ்விரண்டும் பின்னப்பொருள்கள். இதுபோலப் பதி யொரு இடத்திலும் பசுபாசங்கள் ஒரு இடத்திலும் இருக்கின்றனவாகி, பதி அபரிபூரணப்பொருளாகின்றது. நமது ரூபம், ஒரு கண்ணாடியிற் றோன்றுமாயின், அந்தக்கண்ணாடி நமது ரூபத்திற்குள் வியாபித்ததாய்ச் சொல்லப்படுமோ? நாம் கண்ணாடியினுள் செல்லவில்லை. கண்ணாடியும் நம்முள் செல்லவில்லை. அதுபோலப் பலவர்ணப்பொருள்களும் படிகத்தினுள் செல்லவில்லை; படிகமும் பலவர்ணப்பொருள்களினுட் செல்லவில்லை. அங்ஙனமாக வொன்று மற்றொன்றினுள் வியாபித்ததாக எங்ஙனம் சொல்லலாம்? சொல்லக்கூடாதபடியால் பலவர்ணப் பொருள்களினது வர்ணமாத்திரம் படிகத்தில் தோற்றுவதாய்ச் சொல்லப் படுமென்க. இவ்வுவமானப்படியுவமேயத்தைப் பார்க்கின், பதி: பசுபாசங்களில் வியாபித்ததென்று சொல்வது பொய்யாகின்றது. பலவர்ணமான குணங்களினதுபோலி படிகத்தில் தோற்றுவதுபோல, பசுபாசங்களினது ஏதோ வொருவிதகுணப்போலி பதியினிடத்திற் றோற்றவேண்டும். அதனால் பதி: பசுபாசங்களில் வியாபித்ததாகச் சொல்லப்படாது. "படிகத்தில் தோற்றும் பலவர்ணங்கள் தோற்றமன்று, யதார்த்தமென" வொப்புக்கொள்ளினும் படிகமானபொருள்: பலவர்ணங்களான குணத்தில் வியாபித்ததேயன்றிக் குணியில் வியாபிக்கவில்லை. அங்ஙனமே, பதி: பசுபாசங்களில் வியாபித்ததென்று சொல்லும்போது,பசுபாசங்கள் குணமாகவேண்டும். படிகத்தில் தோற்றும் பலவர்ணங்களான குணங்களுக்குப் புஷ்பமுதலிய குணிப்பொருள்கள் இருக்கக்கண்டாம். அதுபோலப் பசுபாசங்கள் குணமாகும்போது அதற்குக் குணிப்பொருள் வேண்டுமே. அது யாது?

இன்னும் இவைபோல் எவ்வளவு உபமானங்கள் சொன்னாலும் பதியைப் போலப் பசுபாசங்களைச் சத்தாகச் சொல்லுகிறவனாயில் இவர்க்கு எவ்வித வுபமானமும் அகப்படமாட்டாது. பதி பசு பாசங்களை யுள்ளதாகவுஞ் சொல்லவேண்டும்; பதி: பசுபாசங்களில் வியாபித்ததாகவுஞ் சொல்லவேண்டும்; பதிக்கும், பசுபாசங்கட்கும் வேற்றுமையுஞ் சொல்லவேண்டும்; அது சுருதி முதலிய பதினான்கு வித்தைகட்குச் சம்மதமாயுமிருக்கவேண்டும்; அத்துடனே யுக்தி அநுபவங்கட்கும் ஒத்திருக்கவேண்டும். இப்படிச் சொல்லுகிறதானால் விவர்த்தவாதமாகத்தான் சொல்லவேண்டும். அதாவது பதி: பாரமார்த்திக சத்தாகவும், பசுபாசங்கள் வியாவகாரிக சத்தாக அல்லது சத்துப் போலியாக அல்லது அநிர்வசனீயமாகவுந்தான் சொல்லவேண்டும். இதைவிட வேறுமார்க்கம் கிடைக்காது. இது விஷயமாக இவருக்கும் சபாபதி நாவலர்க்கும் 'ஓர்நண்பர்' 'ஓர்இந்து' 'அத்வைத சித்தாந்தி' முதலியவர்கள் மிகவிரிவாய்ச் சொல்லியிருக்கின்றார்கள். அவைகளை அந்தந்த விடங்களில் பார்த்து உண்மை யுணர்வாராக.

## சிலந்தி யுபமானத்தைத் தப்பாய்ச்சொல்வது.

நாம்கேட்ட வினாவாவது:—

"சைவபாடியம் நீலகண்ட சிவாசாரியா ரியற்றியது. இப்பாடியத்தை "யிப்போதுள்ள ஞானாமிர்தத்தைச் சார்ந்த சைவசித்தாந்திகள் தங்கள் "பாடியமாக ஒப்புக்கொள்ளுகின்றனரா? ஒப்புக்கொள்ளுகின்றார்களென் "னின் நீலகண்ட சிவாசாரியார் உலகத்துக்குப் பிரமம் அபின்ன நிமித்தோ "பாதான காரணமாகக் கூறுகின்றனரே. அதை மேற்படி சைவசித்தாந்தி "கள் அங்கீகரிக்கின்றனரா?"

இதற்குப் பூர்வபக்ஷியார்கொடுத்த விடையாவது:—

"சிலந்திப்பூச்சியினிடம் நூல் உண்டாகியதுபோல் பிரமத்தினிடத்தில் "உலகமுண்டாகியது என்று வேதங் கூறுகின்றது. நூலுக்கு முதற்காரண "மும் நிமித்த காரணமும் சிலந்தியேயாயினவாறு உலகுக்கு முதற்காரணம், "அல்லது உபாதான காரணமும் நிமித்தகாரணமும பிரமமேயாகியது என்று "சைவபாஷ்யக்காரர் கொண்டிருக்கலாம். சிலந்தியினது தேகம் அதனிடத் "துண்டாகிய நூலுக்கு உபாதானமாயினதன்றி, அத்தேகத்தைத் தாங்கியிரு "ந்த சைதன்யம் உபாதானமாயினதில்லை. அது நிமித்தமாகவே நின்றது. "இதனை யிவ்வாறு பிரித்துணையாடும்போது பிரமம் கேவலம் நிமித்தப்பொரு "ளாகின்றது. இந்தப் பின்ன நிமித்த வாதத்தை நிறுத்துதற்கு அவ்வேதந் "தானே குலாலஸ்தானத்தில் பிரமத்தைக் குடியேற்றுகின்றது. இரண்டும் "ஸாமஞ்சஸமேயாம்." என்பது.

இதில் 'சைவ பாஷியக்காரர் கொண்டிருக்கலாம்' என்றதினால் அது நிச்சயமென்று சொல்ல விவரால் ஆகாதென விளங்குகின்றது. ஆகாத போது அவர்பக்ஷம் இவர்க்கு ஐயம்; இவர்பக்ஷமோ இவர்க்கு நிச்சயமாம். அவர்பக்ஷ ஐயத்தையும் இவர்பக்ஷ நிச்சயத்தையும் ஒன்றுபடுத்துவது கூடாது. ஒருவன் குற்றியைக் கண்டு குற்றியோ மகனோ என்றான்; மற்றொருவன் குற்றி யென்றான். இருவருடைய சொல்லும் யதார்த்தமாமா?

இங்ஙனமாக 'இரண்டும் ஸாமஞ்சஸமேயாம்' என வொப்புச்சொல்வதுகூடாது. இவர்பகுதியார் உலகிற்கு மாயை முதற்காரணமென்றனர்; அவரோ சிவனே முதல்காரணமென்றதனோடு, மாயையை முதற்காரணமென்பாரை மறுக்கவுஞ் செய்கின்றனர். அதுமாத்திரமா? மாயையை முதற்காரணங் கூறுவது சுருதி விரோதமென்றுங் கூறினார். அதுமாத்திரமா? மாயை முதற்காரணமெனச் சிவாகமம் கூறுவது சுருதி விரோதமென்றும் ஆதலால் சுருதிக்கு அவிரோதமாகக் கூறவேண்டுமென்றுங் கூறினார். இவர் பக்ஷத்தை யவர் மறுத்திருக்க, இவர் இரண்டும் ஸாமஞ்சஸமென்று கூறுவதென்னோ! அவர்மாயையைமுதற்காரணஞ் சொல்லும் சித்தாந்தம் குற்றமுள்ளதென மறுக்க, இவர் அவர் மதத்தி னுழையப் பார்ப்ப தென்னகாரணம்? அவர் நிச்சயத்தினால் இவர் மதத்தைக்கண்டிக்க, இவர் அவர்பக்ஷத்தைச் சந்தேகத்தில்வைத்து அவரோடு கூடச் சேரப்பார்க்கின்றார். இரண்டும் ஸாமஞ்சஸமெனச் சொல்லுகின்றாரேயன்றி, அவர் வழிவந்த மதந்தான் தமதுமதமெனக் கூறினாரில்லை. ஆதலால் வெற்றுரையிலும் அவர்வழிவந்த மதந்தான் இவர் மதமென ஏற்படவில்லையென்பதாம்.

ஷை வாக்கியத்தில் வேதங் கூறுகின்றது என்பதைப் பற்றிப் பின்னர் யோசிப்பாம். நாம்வேதத்தைத் தூஷித்து அதுபசுநூல், உலகநூல், மோகநூலெனக் கூறும் வருக்கத்திற் சேர்ந்தோ மல்லோம். வேதவாக்கியம் நமக்குச் சிறந்த பிரமாணமேயாம். இனிச் சிலந்தியினின்று முண்டாய நூலுக்குச் சிலந்தி பின்னமா? அபின்னமா? இவ்வினாவுக்குப் பின்னமென்றே விடை சொல்லவேண்டும். அச்சிலந்தியின் உடலும் அதிலுள்ள சைதன்னியமும் பின்னமா? அபின்னமா? வென்புழிப் பின்னமேயாம். ஆக வுயிர், உடல், நூல் ஆகிய முப்பொருள்களும் பின்னப்பொருள்களாகின்றன. இங்ஙன்மே சிலந்தியினது உயிர் ஸ்தானத்திற் பிரமமும், உடல் ஸ்தானத்தில் மாயையும், நூல் ஸ்தானத்தில் உலகமுமாகி, மூன்றும் பின்னப்பொருள்களாம். ஷை வாக்கியத்தில் மாயையைப்பற்றிப் பேசாவிடினும் அவர் கொள்கை உலகுக்கு மாயை முதற்காரணமென்பதேயாம். ஷை வாக்கியத்தில் சிலந்தியின் உயிரும், உடலும், நூலும் வேறு வேறு பின்ன கண்டப்பொருள்கள்; அன்றிச் சத்துப்பொருள்கள். இவ்வுபமானப்படி யுபமேயத்தைப் பார்க்கின், பிரமம், மாயை, உலகு ஆகிய மூன்றும் வேறு வேறு பின்ன சத்துப் பொருள்களாக வேண்டும். இங்ஙனங் கூறுமிடத்துப் பிரமம் பரிபூரணப் பொருளென்று கூறும் வேதவாக்கியத்துக்குப் பங்கமுண்டாகும்; அன்றி மாயையும் உலகும் அசத்தென்று கூறும் வேதவாக்கியத்துக்கும் பங்கமுண்டாம்.

சிலந்திப் பூச்சியினின்றும் நூலுண்டாயதுபோலப் பிரமத்தினின்றும் உலகுண்டாயதென்பது ஏகதேசவுபமானம். உயிரென்றும் உடலென்றும் பிரிக்காமல் சிலந்தி யென்பதை யொரு பொருளாக்கி, அவ்வொருபொருளினின்றும் நூலுண்டாயதுபோலப் பிரமத்தினின்றும் உலகுண்டாயது என வேதங் கூறிற்று. இது அபின்ன நிமித்தோபாதானங் கூறுவதற் கேகதேசவுபமானமாம். இது முற்றும் உபமானமாயின் அனேக பிழைகளுண்டாகின்றன. சிலந்தி, தானில்லாவிடத்தில் நூலைக்கொண்டு வீடுகட்டிற்று; அன்றித் தன் உடலினின்றும் சிலபாகத்தைப் பிரித்தெடுத்து வேறுபடுத்தி வீடுகட்டிற்று. அதுபோலப் பிரமமும் தானில்லா விடத்திலுள்ள மாயையைக்

கொண்டு உலகைச் சிருட்டிக்க வேண்டும். அன்றி மாயையினின்றும் சில பாகத்தைப் பிரித்தெடுத்து வேறு படுத்தி உலகாக்கவேண்டும். அப்போது பிரமம் அபரிபூரணத்துவ தோஷத்தை யடையும். இவர் கொள்கைப்படி சிலந்தியின் உடலை நூலுக்கு முதற்காரணமும் உயிரான சைதன்னியத்தை நிமித்தகாரணமுமாக்கி, இதைப்போல் மாயையை முதற்காரணமும், சிவனை நிமித்தகாரணமு மாக்கினுல் உயிரும் உடலும் நூலும் வேறு வேறு பின்னப் பொருளாவதுபோலச் சிவனும் மாயையும் உலகும் வேறுவேறு பின்னப் பொருள்களாக வேண்டும். உடலிலிருந்து நூல் எவ்வளவு பாகம் எடுக்கப்படுகின்றதோ அவ்வளவுபாகம் உடலில்குறைகின்றது. அதுபோல உலகத்துக்காக மாயை எவ்வளவு பாகம் எடுக்கப்படுகிறதோ அவ்வளவு பாகம் மாயை குறைந்துபோம். உடல் ஏகதேச கண்டப் பொருளாகலின் அதிலிருந்து சிலபாகம் தானில்லாவிடத்தில் வந்து வீடாகக்கூடும். மாயை அங்ஙனமன்றே. அது வியாபகப் பொருளாயிற்றே, அது இல்லாவிட மிருந்தாலன்ரு அதினின்றுஞ் சிலபாகம் உலகாகப் பிரிந்து வேறுபடும்? உடல், உருவமுளதாகலின் அதினின்றும் பிரிந்து வேறுபட்டவீடும் உருவ முளதாயிற்று. அங்ஙனம் மாயை யுருவமுளதன்றே. உருவமுளதன்ருகலின் அதினின்றுந்தோன்றிய வுலகும் உருவமுள தன்ருகவேண்டும். உலகு உருவமுள தென்பது கண்கூடாயிற்றே. சிலந்தியின் உடல் பொருளென்பதுண்மை. அது காட்சிக்கனுபவம். அவ்வாறு மாயை பொருளாமா? பொருளென்னின சுக்கில யசுர் வேதம் நிராலம்போபநிஷத்தில் "பிரமத்தின் சத்தி பிரகிருதி" எனவும் சிவஞான சித்தியாரில் "விமலனுக்கோர்சத்தியாய்" எனவும் குணமாய்ச் சொல்வானேன்? உபமானம் ஏகதேசமெனச் சொல்லாமல் 'சம்பூரணமாய்ச் சொல்லி, இவர் கொள்கைப்படி நூலுக்கு உடலை முதற்காரணமாகவும் உயிரை நிமித்தகாரணமாகவும் சொல்லுவோமாயின் யுக்தி அநுபவங்கட்கு விரோதமா யிருப்பதோடு, மற்ற வேதசாஸ்திரப் பிரமாணங்கட்கும் விரோதமாகின்றமையால் அது அங்கீகரிக்கத் தக்கதன்று.

## சூதசங்கிதை சத்தாவிசாரம்.

அத்தகு சத்தாவாகியபிரமமம்ம மண் கடாதியானுற்போல்
சுத்தமா முனிவீர் பற்பலவான சொரூபங்களாய்ப்பரிணமிக்கும்
உத்தமப்பிரமம்பவஞ்சமாய்த்தோன்றலொளிதருசுத்திவெண்பொன்னய்
வித்தகமுறத்தோன்றிடுதெலேபோலும் வேதமுமிங்ஙன முரைக்கும். (கூ)

இச்செய்யுளில் மண் ஸ்தானத்தில் சிவனையும், குடஸ்தானத்தில் உலகையும் வைத்துச் சொல்லியிருப்பதால் இவர் சொல்லும் மாதிரி சிலந்திதிருட்டாந்தம் பொருந்தமாகாது. சாந்தோக்கிய வுபநிடதத்திலும் இவ்வாறே விரிவாய்க்கூறுகின்ற தென்பதைப் பிரமகீதை சாந்தோக்கியவுபநிடதத்தில் காணலாம். சிலந்திதிருட்டாந்தத்தில் இவர் சொல்லுகிற படிபார்த்தால் சிலந்தியினுடலும் நூலும் சத்தாகிறதுபோல் மாயையும் உலகும் சத்தாகவேண்டும். மாயை உலகங்கள் சத்தென்பதற்கு வேதம் ஸ்மிருதி புராண இதிகாச ஆகமங்களிலாவது அவைகளுடைய கருத்துக்கு மாறுபடாத வேறு எந்தநூல்களிலாவது இன்னும் தேவார திருவாசக திருமந்திர சிவஞானபோத முதலிய நூல்களிலாவது ஆதாரம் அணுத்துணையு மில்லை. இவர் கூறுகிறபடி சிலந்தியுபமானத்தில் உயிரும் உடலும் நூலும் வேறு வேறு சத்துப் பொருளன்ரு? அவ்வாறு

நூல்களில் வேறு வேறு சத்துப்பொருளெனச் சொல்லவில்லை யென்பதற்குப் பிரமாணங்களாவன:—

சூதசங்கிதை விசேடசிருட்டி,

நிருமல சிவன்றன்மாயையாற்கறுப்போனிருமிக்கப் பட்டனவெல்லாம் மருவுகாரியங் காரணத்திற்குவேருகாமையின்மாயைரூபந்தான், பெருகுமாயையும் மற்றதிட்டானமாகும் பிரமத்தின் வேருனதன்று, குருபரன் அருள்கைக்கொண்டு முக்குறும்புங்கொன்றுயர்ந் தோங்கிய முனிவீர். (௰௨)

தத்துவஞானத்தாற் பரசிவமே சகமாயை சீவன் முன்னுன, கொத்துறு சொருபமாகவே தெரியும் குறித்திடின்வேருென்று மிலைச்ச, கத்து வேருகப் பார்ப்பவன் பந்தக்கடுந்தளை நீங்குருன். (௰௩)

பிரமகீதை கேனுேப நிடதம்.

எப்பொருளும் மாயையினுலெனச்சிலவரியம்புவர்கள்
மெய்ப்பரமன்றனை யொழிய வேருெரு மாயையுமில்லை
ஒப்பரியபரனுெழிய வொருமாயை யுண்டாகில்
அப்பரமன்றன் பெருமைக்கது நேரேயழிவன்றே. (உ௭)

ஷை உபநிடதங்களின் றெதுப்பு.

மாயையென்ருென்றுண்டாகமதிப்பதுமனனமல்ல (அ)

ஷை ஐதரேய உபநிடதம்.

வேதமோதியதே மெய்ப்பொருள் மற்றைப் பொருளெலா மித்தையேவேத
மோதமேவுற்ற பொருளிருவகையாம் அதினிலொன்றென் றுமுண்மையதாய்ப்
போதவாநந்தமாகிய சிவனும் பொருளது மற்றது அப்பொருளில்
ஏதமேவாமல் கற்பிதமாகும் மற்றதனியல்பையும் இசைப்பாம். (௰)

இனிச் சிலந்தி யுபமானத்தால் சைதன்னியும், உடல், நூல் ஆகிய முப்பொருளும் பின்ன சத்தாய்க் கூறுவதுண்மையாயின்,

சூதசங்கிதை பஞ்சப்பிரமவிசார முரைத்த அத்தியாயத்தில்

தந்துவினைச் சிருட்டிசெய்து சிலந்தி மீட்டுங் கவருந்தன்மைபோலு
முந்து தருவாதிகண் மண்டோற்றி மீட்டுந்தனிடையொடுக்கல்போலும்
நந்து மொளிப்பரசிவம் பேருலகமெலாஞ் சிருட்டிசெய்து நலக்க மீட்டும்
வந்து தனதிடத்தொடுங்க வொடுக்கிக் கொள்ளுந்தூய மாதவத்தீர் (௰௭)

எனச்சொல்லி அடுத்த சத்தாவிசார அத்தியாயத்தில்

அத்தகு சத்தாவாகிய பிரமம் அம்ம மண்கடாதியானுற்போல்
சுத்தமாமுனிவீர் பற்பலவான சொருபங்களாய்ப் பரிணமிக்கும்
உத்தமப்பிரமம் பவஞ்சமாய்த் தோன்ற லொளிதரு சுத்திவெண்பொன்னுய்
வித்தகமுறத்தோன்றிடுதலேபோலும் வேதமும் இங்ஙனமுரைக்கும்

என்றும்,

ஷ முத்திநிலையுரைத்த அத்தியாயத்தில்

திரிசியமரம் பவஞ்சந்தேய்ந்து சொப்பனம்போல்தோன்ற (கூஉ)

என்றும்,

ஷ மோசகப்பிரதனதியல்புரைத்த அத்தியாயத்தில்

உலகமுழுதும் சொப்பனம்போ லுறக் கண்டிடுவோனெவனுளும் (கசு)

என்றும்,

பிரமகீதை முண்டகோபநிடதத்தில்

சிலந்தியு மிழ்ந்து விழுங்குவதெப்படி தேகத்தே
மலந்தரு கேசவுரோம மதெப்படி மண்ணிற்கே
பலந்தரு மோடதியெப்படி யப்படி யீசன்பால்
அலர்ந்த தடங்க வெறுங்கனவொக்கு மதாயுங்கால் (ரு)

என்றும்

கூறுமா? சிலந்தி திருட்டாந்தம் இவர் கூறுகிறபடிபிரமாணமானுல் உடலும் நூலும் சத்தாயிருப்பதுபோல மாயையும் உலகும் சத்தாயிருக்கவேண்டுமே. ஷ பிரமாணங்களினுல் அவைகள் சத்தல்ல, அசத்தென்பது வெள்ளிடை மலையாம்.

அன்றிச் சிவனைவிட மாயை வேறல்லவென்றும் சிவன்முதற்காரணமென்றும் உலகு காரியமென்றும் உலகு கனுப்போல் பொய்யென்றும் சிவசொருபமே யுலகென்றும் ஏற்பட்டமையால் இவர் கூறும் வண்ணம் சிலந்தியுபமானங் கூறப்படாது. பின்னை நாம் கூறியவாறே கூறவேண்டுமென்பதாம்.

## நிலம் வித்து அங்குர உபமானம்.

“நிலங்குளிர்ந்தவழி வித்தினின்றும் அங்குரந் தோன்றுதல் கண்டாம். நிலத்தினின்றும் அங்குரமுண்டாயதென்பதும் வித்தினின்றும் அங்குரமுண்டாயது என்பதும் ஸாமஞ்சஸமாயினவாறு உலகத்துக்கு அபின்ன நிமித்தோபாதானவாதங் கூறுவதும், கேவலம் பின்ன நிமித்தவாதங் கூறுவதும் எமக்குடன்பாடேயா மென்க.” என்கிருர். இவர் உபமானம் இவர் கழுத்துக்கே கயிருயிருக்கின்றது. இவர் கொள்கை நிலஸ்தானத்தில் பிரமமும், வித்து ஸ்தானத்தில் மாயையும், அங்குரஸ்தானத்தில் உலகமுமாம். நிலத்துக்கும் வித்துக்கும் அங்குரத்துக்கும் உபமானபாவந் தேடினுர். நிலத்தைக் குளிரச்செய்வதற்கு நீர் இருப்பது போன்று பிரமத்தைக் குளிரச்செய்யவொன்றையுங் காணேமே. இவர் கூறிய உபமானத்தில் நான்குபொருள் அவசியமாகின்றன. உபமேயத்திலோ மூன்று பொருளே இருக்கின்றன. நீர்ஸ்தானத்தில் பிரமத்தின் கண்ணுள்ள சிற்சத்தியைக் கூறுவாமெனின் அங்ஙனமாங்கால் நிலமும் நீரும் பின்னமானமைபோன்று பிரமமும் சிற்சத்தியும் பின்னமாதல்வேண்டும். அங்ஙனம் பின்னமாமா? நிலமும் வித்தும் பின்னமா? அபின்னமா? வென்புழிப் பின்னமென்பது நிதர்சனமாம். அங்ஙனமே பிரமமும் மாயையும் பின்னமா? அபின்னமா? வென்புழிப் பின்னமென்றே

சொல்லவேண்டும். சொல்லுங்கால் பிரமம் அபரிபூரணப்பொருளாகும். இனி வித்துக்கும் அங்குரத்துக்கும் பார்ப்போம். வித்து அங்குரமாங்கால் வித்துக் கெட்டே அங்குரமாதல் கண்கூடு. அங்ஙனம் மாயைகெட்டே உலகாக வேண்டும். அங்குரமாயிருக்கும்போது வித்து இல்லை. அங்ஙனமே உலகாயிருக்கும்போது மாயையில்லை. இப்போது மாயை கெட்டு உலகாயிருக்கின்றதால் இப்போது மாயையென்ப தில்லையென்றே சொல்லவேண்டும். இப்போதுள்ளன பிரமமும் உலகமுமேயாம். ஒரு பொருள் அதாவது மாயையென்னும் பொருள் போகவே போய்விட்டது. பிரதிவாதியார் கக்ஷிப்படி மாயையென்பது சத்தென்றும் நித்தியமென்றுஞ் சொல்லக்கேட்ட செவிக்கு இப்போது அது இல்லாமலே நாசமாய்ப்போய்விட்டது என்று கேட்பது நாராசங் காய்ச்சிவிட்டதுபோலத்தான் இருக்கும். அங்குரமாயபோது வித்து இல்லையெனினும் பிறகு விருக்ஷமாய் வித்தை யீனுகின்றதெனின் அங்ஙனமேல் இப்போதுள்ள வுலகு இனி மாயையை யீனுமென்று சொல்லவேண்டும். இது விந்தையினும் விந்தை! நிற்க; மாயையைப் பிரமத்துக்குப் பரிக்கிரக சத்தியென்று கூறுவ திப்பூர்வபக்ஷியார் கொள்கை. சத்தியென்பது பொருளல்ல; குணமென்பது அச்சொல்லினாலேயே விளங்கும். மனிதனது சத்தியெனின் மனிதனைவிடச் சத்தி யொருபொருளா? அல்லவே; குணந்தானே. அங்ஙனமே நிலத்துக்கு வித்துச் சத்தியான குணமா? அல்லவே; பொருளாயிற்றே. பொருளுபமானத்தைக் கொண்டுபோய்க் குண வுபமேயத்துக்குச் சொல்லலாமா? மாயையைப் பொருளென்று சொல்லுகின்றாரென்னின் அங்ஙனமாயின் மாயையைச் சத்தி யென்பானேன்? இனிப் பொருளாகவே வைத்துப் பார்ப்போம். அப்போது பிரமமும் மாயையும் பின்னமா? அபின்னமா? பின்னமெனின் பிரமம் அபரிபூரணமாகும். அபின்னமெனின் சினை குணந்தொழில்களில் ஒன்றி லமைத்துத்தானே சொல்லவேண்டும். சொல்லின் பிரமமே மாயையாகவேண்டுமே. ஆயின் பிரமத்துக்குள்ள ஞானம், சுகம், நிர்ம்மலத்துவம், நிர்விகாரத்துவம் முதலிய சுத்த குணங்களெல்லாம் போய்; மாயைக்குள்ள சடம், துக்கம், மலம், விகாரம்முதலிய அசுத்தகுணங்களெல்லாமுண்டாமே. பிரமமும் மாயையும் ஒன்றுக்கொன்று எதிர்மறைக் குணங்கள். அங்ஙனமாக இரண்டும் ஒன்றுபடுவதெங்ஙனம் அமையும்? வித்திலிருந்துண்டான அங்குரம் நிலத்தின்மேலே அதாவது நிலமில்லாவிடத்தில் முளைக்கின்றது. அதுபோல மாயையிலிருந் துண்டான வுலகம் பிரமத்தின் மேலே அதாவது பிரமமில்லாவிடத்திலே உண்டாகவேண்டும். நிலமில்லாவிடத்தில் அங்குரமுண்டாகுகையில் நிலமில்லா விடமிருப்பதாய் ஏற்படுகின்றது. அதுபோலப் பிரமமில்லாவிடத்து உலகுண்டாங்கால் பிரமமில்லா விட மிருப்பதாய் ஏற்படுகின்றது. ஏற்படுகிறபோது பிரமம் எங்கும் பரிபூரணமாயிருக்கிறதென்று சொல்லும் சுருதிவாக்கியம் அசத்துவாக்கியமாய்ப் போகின்றது.

## கேவலநிமித்தகாரணவாதம் நீலகண்டர்க்குடம்பாடில்லை.

“ஆதிசைவ சிகாமணியாகிய சகலாகமபண்டிதஸ்வாமிளேயன்றோ சிவஞானபோதத்துக்கு நிமித்தகாரணவாதத்தை யங்கீகரித்துச் சிவஞானசித்தியாரொன்னுமுரைசெய்தருளினர்? இவர் வேறு எந்த ஆதிசைவர்களையோ அவ்வாறு கொள்ளாதவர்கள் என்று கண்டு கூறியது” என்றார். இதனால் அரு

ணந்தி சிவாசாரியர் நிமித்தகாரணத்தை யங்கீகரித்தாரென விளங்குகின்றது. அதுமாத்திரமா முதற்காரணத்தை மறுத்தல் செய்தாரெனவுந் துலங்குகின்றது. நீலகண்ட சிவாசாரியரோதமதுபாஷியத்தில் முதலாவதுஅத்தியாயம் இரண்டாம்பாதம் உ.கூ-வது சூத்திரத்தில்பரசிவன்பிரபஞ்சத்திற்குநிமித்தமுமுபாதானமுமானகாரணமென்றும் ச-வது பாதம் உகூ-வது சூத்திரத்தில் சாந்தோக்கிய உபநிஷத்தை யநுசரித்து மண்குடம்போல வுலகிற்குச் சிவன் உபாதான காரணமென்றுங் கூறியதுமன்றிக் குலாலனைப்போலச் சிவனை நிமித்தகாரணமாத்திரமென்று கூறுவதைக் கண்டித்து மிருக்கின்றார். பின் உ-வது அத்தியாயம் க-வது பாதம் ௰ச-வது சூத்திரத்தில் ஜடஜீவர்களான இருபொருளும் சிவனதுகாரியமென்றுஞ் சொல்லியிருக்கின்றார். ௰கூ-வது சூத்திரத்தில் வஸ்திரத்துக்கு நூல்காரணமாவதுபோல உலகுக்குச் சிவன் காரணமென்றுங் கூறியிருக்கின்றார். உ.உ. கூஎ-வது சூத்திரத்தில் சில சிவாகமநிஷ்டர், ஆகமங்களின் உட்பொருளையறியாது உலகுக்குச் சிவனைக் கேவலம் நிமித்தகாரணஞ் சொல்லுகின்றார்களெனப் பீடிகைபோட்டு, ஆகமங்களுக்கு வேதத்தை யனுசரித்து அபின்ன நிமித்தோபாதானவாதமே கூறவேண்டுமென்று முடித்தனர். அன்றி யின்னும் பலவிடங்களில் கேவலம் நிமித்த காரணவாதத்தை மறுத்திருக்கின்றனர். மேற்காட்டியவைகளினால் மண்ணுக்குக் குடம்போலும் வஸ்திரத்துக்கு நூல்போலும் உலகுக்குச் சிவனை முதல் காரணஞ்சொல்வதாயும், அத்துடனே அபின்ன நிமித்தோபாதானஞ் சொல்வதாயும் ஏற்படுகின்றமையின் இவர் மதசித்தாந்தமும் அவர் மதசித்தாந்தமும் வேறாமென்க. குடத்துக்கு மண்போலும் வஸ்திரத்துக்கு நூல்போலும் உலகுக்குச் சிவனை யுபாதான காரணமாக நீலகண்டர் கூறிட, இவர் சிவனுக்குப் பதில் மாயையை உபாதானகாரணமெனச் சொல்லுகின்றார். இவர் உலகுக்குச் சிவனை நிமித்தகாரணமென்றால் அவர் கேவலம் நிமித்தகாரணஞ் சொல்வதை மறுத்து அபின்னநிமித்தஞ் சொல்லவேண்டுமென்கிறார். ஒரு சித்தாந்தத்துக்கு மற்றொரு சித்தாந்தம் நேர் எதிர்மறையாயிருக்க இரண்டும் ஸாமஞ்சஸம் என வொப்புச் சொல்வது கூடுமா? உலகுக்கு மாயையை யுபாதான காரணமாக கூறுவதால் இவர் மாயாவாதி; உலகுக்குச் சிவனை யுபாதானமாகக் கூறுவதால் நீலகண்டர் சிவவாதி. மாயாவாதியும் சிவவாதியும் ஒப்பாவரா? ஆகார்! ஆகார்!! ஆகாராக இருமதசித்தாந்தமும் ஒருமதசித்தாந்தமெனக் கூறுவது அசத்தியவசனமாமென்க.

நிற்க; சிலந்தி திருட்டாந்தஞ் சுருதியாதிகள்கூறுவதுண்மைதான். ஆனால் அது ஏகதேசதிருட்டாந்தம். உடலையும் உயிரையும் வேறுபிரிக்காமல் ஒன்றுபடுத்தி ஒருபொருளாக்கிச் சிலந்திப்பூச்சியாகவைத்து, நூலுக்குச் சிலந்திப்பூச்சியை உபாதானமும் நிமித்தமுமெனக்கூறி, அங்ஙனமே உலகுக்குச்சிவனை உபாதானமும் நிமித்தமுமென்று நூல்கள் கூறுகின்றனவென முன்னரே கூறினும். சிவன் ஸ்தானத்தில் உயிர் உடலோடுங் கூடிய சிலந்தியை வைத்துக் கூறுவது ஏகதேச திருட்டாந்தமென வறியாது, தமது மதத்துக்குச் சாதகமாக விபரீதப்பொருள் கொண்டு மலைகின்றார். இவர் கொள்வதுபோல் பொருள்கொண்டால் மற்றச் சுருதிகளுக்கும் யுக்திஅனுபவங்கட்கும் விரோதமுண்டாமென முன்னரே நன்கு விளக்கினும். இவர் சிலந்தியினது தேகத்தை யுபாதானமென்றுசொல்லி, உயிராகிய 'சைதன்னியம் உபாதானமாயினதில்லை' எனச் சொல்லிவிட்டமையின் சைதன்னியம் உபாதானமாகாதென்

பது இவர் கொள்கையெனல் திண்ணம். நீலகண்டரோ குடத்துக்கு மண்போல வுலகிற்குச் சிவனை யுபாதானமென்கிறார். இதனால் இவர் சிலந்தியை யுயிர் உடலாகப் பிரித்ததுபோல் அவர் பிரிக்கவில்லையெனத் தீர்மானமாகிறது. சித்து உபாதான மாகாதென்ப திவர் சித்தாந்தம்; ஆகுமென்ப தவர் சித்தாந்தம். உலகிற்குக் கடவுளை அபின்னநிமித்தோபாதான காரணமென்று கூறுகின்ற வர் நீலகண்ட சிவாசாரியர் மாத்திர மன்று, சங்கராசாரியார் வீரசைவபாஷியக்காரர், இராமாநுஜர் முதலி யவர்களுமாம். நீலகண்டம் உ வது அத்தியாயம் க-வது பாதம் ௰௫-வது சூத்திரத்தில் குடத்தைக்கண்டு மண்ணைக்காண்பதுபோல உலகைக்கண்டு சிவனைக் காண்பார்களென்று கூறியிருக்கிறார். இதனால் நீலகண்டர் சிவனுக்கும் உலகிற்கும் முதற்காரணகாரியபாவங் கூறுவதாய் ஏற்படுகின்றது. இவர் அவ்வாறு கூறவில்லை. மாயைக்கும் உலகிற்குங் காரண காரியபாவங் கூறுகின்றார். நூலுக்குச் சிலந்தியினதுடலையே உபாதானகாரணமாகவும் 'சைதன்னியம் உபாதானமாயினதில்லை' யெனவும் இவர்கூறுவதை நீலகண்டர் ஒப்புவாரானால் குடத்துக்கு முதற்காரணம் மண்ணைப்போல, உலகிற்கு முதற்காரணம் சிவனெனச் சொல்லமாட்டார். சிவனுக்கு உலகு காரியமென்பதை நீலகண்டர் பரிணாமமாகக் கொள்ளுகின்றார். அத்வைதிகள் விவர்த்தமாகக் கொள்ளுகின்றனர். மற்றப்படி உலகிற்குச் சிவன் அபின்ன நிமித்தோபாதான மென்ப திருவர்க்குஞ் சரிதான்.

நிற்க; நிலத்தினின்றுந் தோன்றியவிருக்ஷம் என்பதற்கொப்ப, "அருணந்திசிவம் 'உலகவனுருவிற்றோன்றியொடுங்கிடும்' எனச் சிவஞான சித்தியாரில் அருளிச்செய்தது" என்றார். இவ்வித வுபமானங்கூறி நீலகண்டர் பேசியிருந்தால் எடுத்துக் காட்டக்கடவர். சிவஞானபோதத்துக் குரையாகச் சிவஞான சித்தியாரியற்றிய அருணந்திசிவம் ஆதிசைவரா யிருப்பது பற்றி, மற்ற ஆதிசைவர்கள் ஷ சிவஞான சித்தியாரைப் பிரமாணமாகக் கொள்ளவேண்டுமென்ப தென்னவிந்தை! இவர் முன்பு அத்வைதியாயிருந்தவர். இப்போது துவைதியா யிருக்கின்றார். துவைதியாயிருந்தபோ தெழுதியவைகளையெல்லாம் அத்வைதிகள் அனுசரிப்பார்களா? அனுசரியாமைபோல அருணந்திசிவம் இயற்றிய சிவஞான சித்தியார், நீலகண்டர் கொள்கைக்கு மாறுபடுகின்றமையால் நீலகண்டர் கொள்கையை அநுசரிக்கும் மற்ற ஆதி சைவர்களெல்லாம் ஷ சிவஞான சித்தியாரைத் தங்கள் மதசித்தாந்த நூலாகக் கொள்ளவேண்டிய ஆவசியக மில்லையென்க. சைவராயிருந்து வைஷ்ணவ மதத்திற்குச் சென்ற திருமங்கையாழ்வா ரியற்றிய பிரபந்தங்கள் சைவர்க்குடன் பாடாமா? அங்ஙனமே அருணந்திசிவாசாரியர் கூற்றே மற்ற ஆதிசைவரது கூற்று மெனக் கூறுதல் பொருந்தாதென்க.

## சகுணநிர்க்குணவாதம்.

"சைவபாஷ்யக்காரர் பிரமத்தை எப்போதுஞ் சகுணமாகவே கூறுவதன்றி, நிர்க்குணவாதத்தைப் பிரதிஷேதிப்பதென்னையென வோராசங்கையெழுப்பியிருக்கின்றார். வேதத்திற்கூறிய தஹரோபாசனை முதலிய யாவும் உமாஸகாயத்வாதி லிங்கங்களோடு கூடிய பிர்மத்தைக் குறித்ததே யாகையாலும் திராவிடசுருதிகளும் சிவஞானபோதமுதலிய சித்தாந்த நூல்களும் அவ்வாறே கூறுகின்றமையாலும் ஸ்ரீபாஷ்யக்காரரது வாதம் ஸர்வஸம்பிரதிபந்நமாயதென்க." என்றார்.

வேதத்தில் தகரோபாசனை கூறுவதுமுண்மையே. அவ்வேதத்தில் தஹரோபாசனையுங் கடந்து காண்பான், காட்சி, காணும்பொருள் என்னுந் திரிபுடிபோய் ஜீவத்துவம் கழிந்து அகண்ட பரிபூரண சச்சிதாநந்த சிவவடிவாய் விளங்குந் தன்மையை முடிவாகக் கூறுவது முண்மையே. அங்ஙனமே ஷை இரண்டனையும் பற்றித் தேவார திருவாசக சிவஞானபோதங்கள் கூறுவது முண்மையே. இதில் நீலகண்டரதுவாதம் ஸர்வசம்பிரதிபந்நமாயதென்ன? வேதமுதலிய நூல்களில் தஹரோபாசனைவரையில் சகுணங்கூறுவதால் அதுவரையில் நீலகண்டரும் இவர் மதஸ்தரும் அத்வைதிகளும் ஒத்துப்போனார்களென்பதில் ஆக்ஷேபமேதுமில்லை. நமது ஆக்ஷேபம் நீலகண்டர் சகுணமாத்திரம் கூறுகின்றாரென்றும் நிர்க்குணம் ஒப்பாமைமாத்திரமன்றி மறுத்தலுஞ் செய்கின்றாரென்றுமன்றோ? அதற்கிவர் சமாதானம் யாது கூறினார்? ஒன்றுமில்லையே. ஏதோ சமாதனங் கூறுவதுபோல் வந்து கேட்டகேள்வியை மழுப்பிவிட்டார். அவர் சகுணமாத்திரஞ்சொல்லி நிர்க்குணத்தை மறுக்கிறாரென்றும் இவர் மதஸ்தர் அதை யொப்பவில்லை யென்றும் அதனால் இவர் மதத்தைவிட நீலகண்டர் மதம் வேறென்றும் ஆதலால் இரண்டு மதஸ்தரும் ஒரு மதஸ்தரென்று கூறுவது தப்பென்றும் நாம் சொன்னதற் கிவர் என்ன சமாதானங் கொடுத்தார்? வேதத்திற்கூறிய தகரோபாசனை முதலிய யாவும் உமாஸகாயத்வாதிலிங்கங்களோடு கூடிய பிர்மத்தைக் குறித்ததென்றும் 'திராவிடசூக்திகளும் சிவஞானபோதமுதலிய சித்தாந்த நூல்களும் அவ்வாறே கூறுகின்ற'தென்றுங் கூறுகின்மையின் தேவார திருவாசக சிவஞான போதாதிநூல்களும் உமாசகாயத்வாதி லிங்கங்களோடு கூடிய பிர்மத்தைக் குறித்ததென்றே சொல்லவேண்டும். உமாசகாயத்வாதி லிங்கங்களோடு கூடிய பிரமத்தையே சொல்லுகின்றனவென ஏற்பட்டமையின் நிர்க்குணப் பிரமத்தைச் சொல்லவில்லையெனவும் தீர்மானமாகின்றது. ஆகின்றமையின் தேவார திருவாசக சிவஞான போதாதிகளெல்லாம் சரூபசகுணப் பிரமவாதியான நீலகண்டாருடைய மதத்தைச்சார்ந்த நூல்களாம். இவரது மதத்தைச்சார்ந்த நூல்க ளன்றாம். அன்றி அவைகள் இவர் பின்சொல்லுகிறபடி இருமல மும்மலமுடையார்க் குரியனவாம்; ஏகமலமுடையார்க் குரியன வன்றாம். சிவஞான போதாதிகள் கூறும் ஒரு மலமுடையாரான விஞ்ஞானகலர்க்கு எவ்வித முத்தி கிடைக்குமோ அறியோம். தேவார திருவாசகங்கள் வேதசம்மதமானதால் அவற்றில் ஷை ஆன்ம பேதங்கள் கூறவில்லை. கூறாதபோது அவை யிருமல மும்மல முடையார்க் குரியனவென்பது பழுதாகும். இவற்றினால் தேவார திருவாசகங்களும் சிவஞானபோதாதிகளும் இவரைக் கைவிட்டன. கைவிட்டமையான் இவர் அரசனைநம்பிப் புருஷனைக் கைவிட்டவள்போ லானாரென்க. வேறுபட்ட மதஸ்தரைத் தம்மதத்தவரெனச்சொல்ல ஆசைபடப்போய் இதுவரையில் தமது மதத்துக்குரியனவெனச் சொல்லிக்கொண்டிருந்த நூல்களும் தமக்குச் சம்பந்தமின்றி நீலகண்டார்க்குரிய வாயினவென்பதாம்.

இதன்பேரில் "நிர்க்குணவாதமும் அவருக்குத் தோஷ க்ரஸ்தமாகாதெனினும், நிர்க்குணமே முக்கியமென்று வாதிடும் மாயாவாத (அத்வைத) மூர்க்கரையுத்தேசித்து, அதனைப் பிரதிக்ஷேபித்திருக்கலாமென்க. நிர்க்குணம் வேதபடிதமாயினும், ஏகமலபத்தாளாகிய விஞ்ஞானகலருக்குரிய அரூபசிவத்தை யாசிரயித்துடைய தென வறிந்தின்புறுதலே யெமது சித்தாந்த

மென்றுணர்க"என்றார். மாயை முதற்காரணமாகக்கொள்ளு மிவரே மாயாவாதியென்பது பலவாதங்களினால் தேர்ந்துவிட்டமையால் இம்மாயாவாதி: கயிற்றரவுங் கட்டையிற் கள்ளனும்போல் மாயா மயக்கமற்ற அத்வைதிகளை மாயாவாதியென்பது மாயாவாசக மென்றொறுத்திடுக.

நீலகண்டர்க்கு நிர்க்குணந் தோஷக்ரஸ்தமாகாதெனினும் என்றதனாலே சற்றுத் தோஷமு முண்டுப்போலும். இவ்வாறு கூறுவதடாது. அவர் சகுணவாதியேயாம்; அன்றி நிர்க்குணத்துக்குத் தோஷங்கூறிக் கண்டிப்பவருமாம். வேதத்தில் நிர்க்குணமென்று வருமிடங்களிலெல்லாம் ஏயமான குணமில்லாதவன் சிவன், அதாவது கலியாணகுணமுடையவனென நீலகண்டர் உரை செய்திருக்கின்றார். ஈசுவரன் சகுணன் அதாவது கலியாணகுணமுடையவனென்று சொல்வது மாத்திரமன்றி, நிர்க்குணம் அதாவது குணமில்லாமை சாஸ்திரார்த்தமாகாதென்றும் சகுணமே சாஸ்திரார்த்தமென்றும் கூறுகின்றார். அதுமாத்திரமா, ஈசுவரனுக்குச் சரீரமுமுண்டென்றுங் கூறுகின்றார். இவ்விஷயத்தில் நீலகண்டாசாரியாருரையும் இராமாநுஜாசாரியாருரையுமொன்றுதான். நீலகண்டர் சொல்லும் சிவனென்னும் பதத்திற்கு இராமாநுஜர் விஷ்ணு என்கிறார். இவ்வளவுதான் வித்தியாசம். நீலகண்டரும் விசிஷ்டாத்வைதிதான்; இராமாநுஜரும் விசிஷ்டாத்வைதிதான். நீலகண்டர் ப்ரம்மத்தைச் சிவனென்பதனால் சைவவிசிஷ்டாத்வைதியும், இராமாநுஜர் விஷ்ணு என்பதனால் வைஷ்ணவ விசிஷ்டாத்வைதியு மாகின்றனர். இங்ஙனமாக நீலகண்டர்க்கு நிர்க்குணம் உடன் பாடென்று கூறுவதனால் அவர் சித்தாந்தம் அறியாரென்றாவது அவர் மதஸ்தராகப் பேராவல் கொள்ளுகின்றாரென்றாவது கூறவேண்டும். அவர் மதத்தை யறியாரென்னின் அறிந்துகொள்ளக்கடவர்; அவர் மதஸ்தராகப் பேரவாக் கொள்கின்றாரென்னின் அவர் மதத்துக்கு மாறுபட்ட கொள்கைக ளெல்லாவற்றையும் விட்டொழிக்கக் கடவர்.

அவரை யிவர் மதஸ்தர்போலக் காட்டுவதற்குக் காரணம் இவர் மதச்சார்பாக வேதபாஷியமாவது சூத்திரபாஷியமாவீது இல்லாமையால் அப்படிப்பாஷியம் இனித்தோன்றுகிறவரையில் சத்தியாகநீலகண்டரைத் தம்மதஸ்தர் போலக் காட்டிவைப்போமென்ப திவரது தந்திரமென்க. வேதபாஷியமாவது சூத்திரபாஷியமாவது இல்லாதமதத்தை யோர் மதமாகக்கொள்வது பரதகண்டத்தில் இகழ்ச்சியாயிருப்பதால், நீலகண்டர், தமக்கு அனேகவகையில் விரோதியாயிருந்தாலும் சமயத்துக்கு அவரை யிழுத்துப்போட்டுக் கொள்ளுவது ஓர்வித வுபாயந்தான்.

எல்லாமதஸ்தரும் தம்பெரியோர் செய்த பாஷியத்தைப் பெருமையாகப் பாஷியமென்றும், அப்பாஷியத்தை யியற்றியவரைப் பாஷியக்காரரென்றுஞ் சொல்விக்கொள்வது போல, இவரும் இவர் மதஸ்தரும் தமிழ்ச் சிவஞானபோதப் பேருரையைத் திராவிடபாஷியமென்றும் அதை யியற்றினாரைத் திராவிடபாஷியக்கார ரென்றும் சொல்விக்கொள்ளுகின்றார்கள். இந்தத் தமிழ்ச் சிவஞானபோதப் பேருரையைத்தவிரச் சமஸ்கிருத வேதபாஷியமாவது சமஸ்கிருத சூத்திரபாஷியமாவது இவர்மதத்துக் கில்லவேயில்லை. நீலகண்டர், அத்வைதிகளுக்காகப் பிரதிநிஷேதித்திருக்கின்றன ரென்றதனால் தம் பொருட்டுப்பிரதிநிஷேதித்திருக்கவில்லை யென்றாகின்றது. பிரதிநிஷேதிருக்க

வில்லையென்ப துண்மையானால் நிர்க்குணமென்று வரு மிடங்களிலெல்லாம்
ஏயமான குணமில்லாதவனென்றும் கல்லியாணகுண முள்ளவனென்றும்
பேசி நிர்க்குணஞ் சாஸ்திரார்த்த மாகாதென்றும் சகுணமே சாஸ்திரார்த்த
மென்றும் இவர் மதவிரோதமாக நீலகண்டர் சொல்லவேண்டிய அவசிய
மில்லையே !

அத்வைதிகள் நிர்க்குணமே முக்கியமென வாதிக்கின்றனரெனக் கூறி,
உடனே அது வேதபடிதமாயினும் என்றதனால் வேதத்துக்கு நிர்க்குணமு
முடன்பாடென்று துலங்குகின்றது. உடன்பாடாயினும் நிர்க்குணமே முக்
கியமென அத்வைதிகள் கூறுவதுமாத்திரம் இவர்க்குச் சம்மதமில்லை;
சகுணமும் முக்கியமெனக் கூறவேண்டும்போலும். ப்ரம்மத்துக்கு முக்கிய
குணம் சகுணத்வமா ? நிர்க்குணத்வமா ? என்னுங் கேள்விக்கு இவர் கொடுக்
கும் விடையாவன சகுணத்துவமும் நிர்க்குணத்துவமுமாம். சகுணத்துவமும்
நிர்க்குணத்துவமும் நேர் எதிர்மறைக் குணங்கள். இவை ஒருபொருளின்க
ணிருத்தல் அசம்பவம். இது சூரியனிடத்தில் ஒளியும் இருளும் இருக்கின்றன
வென்பதுபோலாம். பூர்வபக்ஷியார்பொருட்டுப் பிரமம் சகுணமும் நிர்க்குண
மும் முக்கியமாம்போலும். இவரதாஞ்ஞை பிரமத்தின்கண்ணுஞ் செல்லும்
போலும் ! ஓர் வஸ்திரத்தில் ஓரிடத்தில் கறுப்பும், ஓரிடத்தில் வெண்மையும்
இருப்பதுபோலப் பிரமத்தின்கண் சகுண நிர்க்குணங்கள் இருக்குமென்னின்
இது வெகு அழகு! அப்பொழுது பிரமம் அம்சமுள்ளதாய் விடும். எது அம்ச
முள்ளதோ அது அநித்தியமாய் விடுமானதால் பிரமமும் அழிந்துபோமென்ப
தாம். இந்த நியாயப்பிரகாரம் இப்போது பிரமம் அழிந்துபோயே யிருக்கவே
ண்டும். இவர், நிர்க்குணப்பிரமம் ஏகமல பத்தர்க்குரிய தென்கிறார். வஸ்திர
த்தின் ஓர் இடத்தில் கறுப்பு அல்லது வெண்மை யிருப்பதுபோலப் பிரமத்
தின் ஓர் இடத்தில் சகுணமும் ஓர் இடத்தில் நிர்க்குணமும் இருக்குமானால்
சகுண மிருக்கிறவிடத்திலுள்ள ஏகமல பத்தர்களான விஞ்ஞானகலர்க்கு அந்
தச் சகுணப் பிரமம் எங்ஙன முரித்தாகும்? நிர்க்குண மிருக்கிறவிடத்திலுள்ள
இருமல மும்மலப் பிரளயாகலர் சகலர்க்கு அந்நிர்க்குணப்பிரமம் எங்ஙனமுரி
த்தாகும்? அந்தந்தச்சமயத்துக்கும் இடத்துக்குந் தக்கபடி சகுண நிர்க்குணங்
கள் மாறிக்கொள்ளுமோ? மாறிக்கொள்ளுமானால் ஷை இருகுணங்களும் ப்ரம
மத்துக்குக் கற்பிதமாமே. இருகுணமும் அமைக்கப் பார்ப்பதில் ஒருகுணமு
மில்லாமற் போகிறதே. இதற்கியாது செய்வார் !

இவர் வேதத்தில் நிர்க்குணம் படிதமென்று கூறினாரேயன்றிச் சகுணம்
படிதமெனக் கூறினாரில்லையே. கூறாவிடினும் “அது ஏகமல பத்தாளாகிய
விஞ்ஞானகலர்க்குரிய அரூபசிவத்தை யாசிரத்துடையது” எனக் கூறியிருக்
கின்றாராகலின், மற்றப் பிரளயாகலர் சகலர்களுக்குச் சகுணம் படிதமென
வேதங்கூறுவதாக வைத்துக்கொள்ள வேண்டுமென்னின் விஞ்ஞானகலர்,
பிரளயாகலர், சகலரென்னும் பதம் வேதத்திற் குடன்பாடான பதமன்றாக
வின், அதுபற்றி வேதம் சொல்லவில்லையென்க. வேதவேதாந்தங்களில் எவ்
விடங்களிலும் ஜீவபேதம் சொல்லவேயில்லை. ஷை பதங்கள் வேதத்திற்கூறி
யிருப்பதாகவே வைத்துக்கொள்வோம். வைத்துக்கொண்டாலும் ஏகமல பத்
தர்களான விஞ்ஞானகலர்க்குரியது நிர்க்குணப் பிரமமென்றும்,மற்ற இருமல
மும்மலமுள்ளவர்க்குரியது சகுணப் பிரமமென்றுங்கூறி, நிர்க்குண் சகுணங்

கள் இரண்டும் தமது சித்தாந்தத்திற் குடம்பாடென நீலகண்டசிவாசாரியார் கூறினாரன்றே. நிர்க்குணத்தை முற்றுமே யொப்பாமல் வேதத்தில் நிர்க்குணமென்று வரும் இடங்களிலெல்லாம் சகுணமே யுரைசெய்து, நிர்க்குணவாதிகளை மறுத்து, தமது மதம் சகுணமேயென ஸ்தாபித்திருக்கும்போது, தமது சித்தாந்தத்தை அவர் சித்தாந்தமென்று வரைவது என்னநியாயம்! இவருடைய வாக்கியத்தில் "எமது சித்தாந்தம்" என்று பேசியிருப்பதால் நீலகண்டரது சித்தாந்த மன்றென்று மாகின்றதோடு, இவருடைய சித்தாந்தம் வேறு, அவருடைய சித்தாந்தம் வேறு என்று மாகின்றன. இவருடைய சித்தாந்தமும் அவருடைய சித்தாந்தமும் ஒன்றெனச் சொல்லவந்து இந்த விடத்தில் இவரது சித்தாந்தத்தினின்றும் அவரது சித்தாந்தத்தை வேறுபடுத்தினார்.

ஏகமல பத்தர்க்கு அரூப சிவம் உரியது என்றதனால் மற்ற இருமல மும்மல பத்தர்க்குச் சரூப சிவம் உரியது என்றாகின்றதன்றோ? இவர் நிர்க்குணத்துக்கு அரூப சிவத்தையும் சகுணத்துக்குச் சரூப சிவத்தையும் அமைக்கின்றார். அங்ஙனமாயின் நிர்க்குணமென்று வரும் இடங்களிலெல்லாம் அரூபத்தையும், சகுணமென்று வரும் இடங்களிலெல்லாம் சரூபத்தையுங் கொள்ளவேண்டும் போலும். சிவன் ஏகமல பத்தர்க்கு நிர்க்குணமும் இருமல மும்மல பத்தர்க்குச் சகுணமும் என்றதனால் திருஞானசம்பந்தசுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்திசுவாமிகள், மாணிக்கவாசகசுவாமிகள் முதலிய பத்தர்களை யிருமல மும்மல முள்ளவர்களாகச் சொல்லி, அவர்களுக்குச் சகுண சரூப சிவபதமே கிடைத்ததாகச் சொல்லவேண்டும். இவர் சித்தாந்தப்பிரகாரம் சகுண சரூபசிவமோக்ஷம் ஒன்றும், நிர்க்குண அரூப சிவமோக்ஷம் ஒன்றுமாம். இவ்விரண்டில் உண்மையான மோக்ஷம் எது? சகுண சரூப சிவபதமா? நிர்க்குண அரூப சிவபதமா? அல்லது இரண்டுமே மோக்ஷமா? நீலகண்டர் சகுண சிவபதமே மோக்ஷமென்கிறார். இவர் இரண்டுபதமும் மோக்ஷம் என்கிறார். இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று நேர் விரோதம். இவ்விஷயத்தில் இருவர் கொள்கைகளும் பேதப்படுவதோடு உண்மை முத்தி இதுதான் என்றுந் தெரியவேண்டும். நீலகண்டர் சகுண பதவியே மோக்ஷமென்றும் நிர்க்குணபதவி அசாஸ்திரீயமென்றும் சொல்லுகின்றமையால் இவரது நிர்க்குண மோக்ஷத்தை அவர் அங்கீகரிக்கமாட்டார். நிர்க்குணபதம் சகுணபதம் இரண்டும் நேர் விரோதங்கள். இவ்விரண்டில் ஒன்றைச்சொன்னால் சொல்லலாமேயன்றி இரண்டையுஞ் சொல்லப்படாது. சகுணம் முத்தியானால் நிர்க்குணம் பந்தமாகும்; நிர்க்குணம் முத்தியானால் சகுணம் பந்தமாகும். ஆதலால் இரண்டும் முத்தியென்றல் பொருந்தாது. இவர் நிர்க்குணம் என்பதற்கு ரூபமின்றெனக்கூறி, அது ஏகமல பத்தர்க் குரியதெனக் கூறினாரன்றோ? அருளுவான், பெறுவானென்கிற பேத மிருக்கிறபோது, அரூப நிர்க்குணமென்றுரைத்தல் கூடுமா? அரூப நிர்க்குணம் எங்ஙனம் அருளும்? அரூப நிர்க்குணப் பொருளிலிருந்து ஒன்று எங்ஙனம் பெறும்?

## அரூபநிர்க்குணம் சரூபசகுணம்.

அரூப நிர்க்குணம், சரூப சகுணமான இரு இலக்கணமும் ஒரு சிவனுக்குச் சொல்வதில் இரண்டு குணமும் யதார்த்தமா? ஒன்று யதார்த்தமும் ஒன்று அயதார்த்தமுமா? இரண்டும் யதார்த்தமென்று சொல்ல முடியாது. ஏனென்னின் அவை யிரண்டும் ஒன்றுக்கொன்று விரோத குணங்கள். ஆதலால்

அவை யிரண்டும் ஓரோகாலத்தில் சிவனிடத்தி லிருப்பனவாய்ச் சொல்லக் கூடாது. சிவன் அரூப நிர்க்குணரா யிருக்குங்கால் அவரிடத்தில் சரூப சகுண மிருக்கமாட்டா; சரூப சகுண மிருக்குங்கால் அரூப நிர்க்குண மிருக்கமாட்டா. இரண்டுஞ் சிவனுக்குச் சொல்வதால் இரண்டும் ஒருகாலத்தி லில்லாவிட்டாலும் வேறு வேறு காலத்திலாவது இருப்பதாய்ச் சொல்லவேண்டும். சொல்லுங்கால் ஒன்றிருந்தபோது மற்றொன்றிராது. இராதாகவே இரண்டும் வந்துபோகின்றன வாகவேண்டும். எது வந்து போகின்றதோ அது அந்தப் பொருளுக்கு இயற்கைக்குணமெனக் கூறலொல்லாது; செயற்கைக் குணமெனவே கூறத்தகு மென்க.

இரண்டுஞ் செயற்கைக்குணமாகவே சிவன் அரூப நிர்க்குணனு மன்று; சரூப சகுணனு மன்றென்று சொல்லவேண்டும். அங்ஙனம் சொல்லுங்கால் வேறு யதார்த்த இயற்கைக்குணம் யாது? "கிணறு வெட்டப்போய்ப் பூதம் புறப்பட்டது'' என்றபடி அரூபநிர்க்குணத்துவமும் போய் சரூபசகுணத்துவமும் போய் வேறு ஒரு குணத்தைத் தேடவேண்டியதாய் நேரிட்டது. அப்படித் தேடுதற் கிப்போதுள்ள வேதபுராண இதிகாசாகமங்கள் இடந்தரா. இரண்டையுஞ்சொல்வதில் இவ்வளவனர்த்த முண்டாகின்றமையால் இரண்டில் ஒன்றைச் சொல்வோமெனின் எதைச் சொல்லுகிறது? அரூபநிர்க்குணத்துவத்தைச் சொல்லுகிறதா? சரூப சகுணத்வத்தைச் சொல்லுகிறதா? அரூபநிர்க்குணத்வத்தைச் சொல்லுகிறதெனின் சரூபசகுணத்துவ மில்லாமற்போகின்றது. சரூபசகுணத்துவத்தைச் சொல்லின் அரூபநிர்க்குணத்துவ மில்லாமற்போகின்றது. அரூபநிர்க்குணத்துவத்தை மாத்திர முரிமையாகச்சொல்லி, வேண்டியபோது சரூபசகுணத்துவத்தைப் பெறுகின்றானென்னின் சரூப சகுணத்துவத்தைப் பெறும்போது அரூப நிர்க்குணத்துவம் இருக்கிறதா? இல்லையா? இருக்கிறதெனின் சரூபசகுணத்துவம் வர விடமில்லை. வருமெனின் அரூபநிர்க்குணத்துவம் செயற்கையாகிறது. அரூபநிர்க்குணத்துவமே செயற்கையாகிறபோது வருகிற சரூபசகுணத்துவம் செயற்கையென்று நாம் சொல்லாமலே விளங்கும். இரண்டும் செயற்கையாகிறபோது மூன்றாவது ஒரு குணம் தேட நேரிடுங் குற்றம் வருமென முன்னரே கூறினும். அன்றி அரூபத்துவமும் நிர்க்குணத்துவமும் சரூபத்துவமும் சகுணத்துவமும் சொரூப குணமா யிருக்கவேண்டு மானதால் அவை பிரியுமென்றுசொல்வது கூடாது. பிரியுமெனின் சிவனே யில்லாமற்போவார். விளக்கினிடத்தில் வடிவமும் உஷ்ணமும் பிரகாசமும் பிரியுமென்று சொல்லலாமோ? அவை எப்போது பிரிகின்றனவோ அப்போது விளக்கென்பதே யில்லாமற்போகின்றது. அதுபோல அரூபநிர்க்குணத்துவம் சரூபசகுணத்துவம் பிரியுமானால் சிவனே யில்லாமற் போவாரென்பது திண்ணம். நிற்க; ஒரு குணம் பிரிந்து ஒரு குணம் வந்ததாகவே வைத்துக்கொள்வோம். வருவதற்குமுன் அது எங்கே யிருந்தது? எந்தப்பொருளைப் பற்றியிருந்தது? அங்கே அந்தப்பொருளினின்றும் அக்குணம் பிரியும்போது அந்தப்பொருள் வேறு எந்தக்குணத்தை நூதனமாகப் பற்றியது? இன்னொருபொருளிலிருந்து வந்த குணத்தை யென்னின் அந்தப்பொருள் எந்தப்பொருளினின்றும் வந்த குணத்தைப்பற்றியது? இவ்வாறு செல்லச்செல்ல அநவஸ்தா தோஷமுண்டாவதோடு கூடச் சொரூப குணத்தைவிட்டுக் குணம் பிரியும்போது பொருளே நாசமாய்க்கொண்டு வருகின்றமையின் இவ்வாதம் மணம் பெறுவாதமாமென்க. அநவஸ்தாதோஷம்

வந்தாலும் வரட்டுமென்று பார்த்தாலும் சிவன் எங்கும் நிறைந்து பூரணமாயிருப்பதால், ஒன்றினின்றும் குணம்பிரிந்து வருவதற்கு வேறு பொருளிருக்க விடமின்று. வேறுபொருளே யிருக்க விடமில்லாதபோது அதினின்றும் குணம் பிரிந்து வருமென்பது கூடாதகாரியம். இனி யரூபநிர்க்குணத்துவம் யதார்த்தமாயுள்ளது, சரூபசகுணத்துவம் கற்பிதமாய் வந்து போகின்றதெனின் அரூபநிர்க்குணத்துவத்தையும் சரூபசகுணத்துவத்தையும் கற்பிதமாகவன்றி யதார்த்தமாய் ஒப்பும் பிரதிவாதியாருக்கு இது சம்மதமேபடாது. அன்றி அது அத்வைதிகளுடைய கொள்கையாயிருப்பதால் அதை யொருபோது மொப்பமாட்டார். சரூப சகுணத்துவம் யதார்த்தமாயுள்ளது, அரூபநிர்க்குணத்துவம் கற்பிதமாய் வந்து போகின்றதெனின் இப்படிச் சொல்வதும் பிரதிவாதியார் கட்சிக்கு விரோதமாகலின் இதையு மொப்பமாட்டார். (இவ்விரண்டில் சரூபசகுணத்துவமே யதார்த்தமா யுள்ளதென்கிற வரையில் நீலகண்டரது மதம். அரூபநிர்க்குணத்துவம் வந்துபோகின்றதென்பதவர் மதமன்று.) சரூபசகுணத்துவமும் அரூபநிர்க்குணத்துவமும் சொல்வதில் இவ்வளவு தோஷமிருக்கின்றமையின் விசிஷ்டாத்வைதியான நீலகண்ட சிவாசாரியார் மதத்தை அநுசரித்து நிர்க்குணத்துவத்தை யொப்பாமல் சகுணத்துவம ஒன்றையேயானாலும் சொல்லவேண்டும்; அல்லது அத்வைதியான சங்கராசாரியார் மதத்தை அநுசரித்து நிர்க்குணத்துவத்தை யதார்த்தமாகவும் சகுணத்துவத்தைக் கற்பனையாகவுமாவது சொல்லவேண்டும். இவ்விரண்டையும் விட்டு இருட்டொளிச் சூரியனென்பதுபோலச் சகுணத்துவ நிர்க்குணத்துவங்களிரண்டையும் சிவனுக்கு யதார்த்தமாகச் சொல்வது கூடவேகூடாது. இவர் மதஸ்தர் அத்வைதமதத்திலிருந்து நிர்க்குணத்துவத்தையும், விசிஷ்டாத்வைத மதத்திலிருந்து சகுணத்துவத்தையுந் திருடி இரண்டையுஞ்சேர்த்து ஒருமதமாகச் சில நூறுவருஷங்கட்குமுன் நவீனமாய்ச்சிருஷ்டித்துக் கொண்டனராகலின் இவர்கள் அத்வைதிகளுமன்று; விசிஷ்டாத்வைதிகளு மன்று. அவாந்தரமதஸ்தர்களாம். நிர்க்குணத்துவத்தை அத்வைதத்திற்கும் சகுணத்துவத்தை விசிஷ்டாத்வைதத்திற்கும் வாங்கின பிரகாரம் நியாயமாய்க் கொடுத்துவிட்டால் இவர்களுக்கு மதமே கிடையாது. மலடியென்ற சொல்லுக்கும், மகனென்ற சொல்லுக்கும் பொருளுண்டு. இரண்டையு மொன்ருய்ச் சேர்த்தால் பொருளில்லை; சொல்மாத்திரந்தான். அதுபோலச் சகுணமதமும் நிர்க்குணமதமு முண்மையாயுண்டு. இரண்டையு மொன்றுசேர்த்துச் சகுண நிர்க்குண மதமொன் றுளதோவெனின் இல்லையென்பதாம், அத்வைதிகள் சொல்லுகிறபடி சிவனுக்குச் சரூபமுஞ் சகுணமும் கற்பனையேயன்றி யதார்த்தமல்ல வென்பதற்கும், அவை மாயையினுலே கற்பிக்கப்பட்டன வென்பதற்கும் பிரமாணங்கள் வருமாறு :—

ஸாமவேதம் மைத்திராயண்ணி யுபநிஷத் ௨-வது பிரபாடகம்.

ரூபமற்றவனுதலாலும். (எ)

ஷை ஷை ௬-வது பிரபாடகம்.

பிரமத்திற்கு மூர்த்தம் அமூர்த்தம் என இரண்டு ரூபங்களுள்ளன. எது மூர்த்தமோ (உருவமோ) அது அசத்தியமானது; அமூர்த்த மெதுவோ அது சத்தியமானது. இதுதான் பிரமம்.

### சுக்கில யசுர்வேதம் நிராலம்போபநிஷத்.

சுத்தம், சிவம், சாந்தம், நிர்க்குணம் இந்தச்சத்தங்களால் சொல்லத்தக்கதாயும் வாக்குக்கெட்டாததாயும் இருக்கிற சைதன்னியமே பிரமம்.

### சூதசங்கிதை பரசிவசோரூப விசாரம்.

மறைமுதல் தனக்கு நாமரூபங்கள் மருவுதலில்லையே யெனினும் கறையற விளங்குமாயையினாலே கற்பிக்கப்பட்டனவாகும். (௰சு)

### ஷை மோசகனையுரைத்தது.

குறிகுணமில்லதுவாயன்பருளங்கொள்ளுந்தூய
முத்தாகி மணியாகி விளங்குபரசிவனினையே முன்னு நின்றேன். (௰எ)

### வாயுசங்கிதை இலிங்கோற்பத்தி.

நிகரினிர்க்குணத்தை மகேச்சுரனோடு சதாசிவன்றன்னை, (கஅ)

### திருவாசகம்.

ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமில்லாற்கு ஆயிரம்
திருநாமம் பாடித்தெள்ளேணங் கொட்டாமோ.

சுந்தரவேடத்தொருமுத லுருவுகொண்
டிந்திரஜாலம்போலவந்தருளி.

(உருவுகொண்வேந்த துஇந்திரஜாலமாகலின் உண்மையன்றென்பதாம்.)

குணங்கடாமில்லா இன்பமே.

குணங்களுங் குறிகளுமிலாக்குணக்கடல்.

### பிரமகீதை சாந்தோக்கிய வுபநிடதம்.

நாமரூபம் வேறும் உண்மையிலெல்லாம்
பொய்யாலுண்டாகும் அனைத்துமன்றே. (கஅ)

### ரிபுகீதை ௨-வது அத்தியாயம்.

நாமமுருவெவையுமிலாப்பிரமநீயே. (௫)

கூறுபடாக்குணாதீத சொரூபநீயே
குணங்குறிகளெவையுமிலாச் சொரூபநீயே. (௧௬)

### ஷை ௰௨-வது அத்தியாயம்.

குணங்களிலா நிர்க்குணமாம் பிரமரூபம். (௨௧)

### விஷ்ணுபுராணம் முதலம்சம் மூன்றம்-அத்தியாயம் காலப்பிரமாணம்.

மயித்திரேயர் பாாசரமுனீந்திரனை நோக்கி முனிசிரோஷ்டரே ! நிர்க்குணமும் அப்பிரேயமும் சுத்தமும் நிர்ம்மலமுமான பரப்ரம்மத்துக்குச்சிருஷ்டிதிதி சங்காரத்துவம் எப்படிக்கூடுமென்று கேட்க.

ஷை ஆறமம்சம் யோகமார்க்கவுபதேசம்.

ஏகபாதமுள்ளது மிரண்டு பாதமுள்ளதும் அனேகபாதமுள்ளதும் பாதமில்லாததுமான சகலமும் ஸ்ரீ அரிபகவானுடைய மூர்த்தஸ்வரூபம். இது சிந்திக்கக்கூடியதானாலும் மூன்றுபாவனைகளுள்ளதாகையால் சுத்தமன்று................வித்துவான்களாலே சத்தென்றுசொல்லப்பட்ட அமூர்த்த ரூபமாம். நாம ரூபாதிகற்பனைகளில்லாதசொரூபத்தைத் தியானங்கொண்ட மனதினாலே கிரகிப்பது சமாதியென்று சொல்லப்படும்.

**திருநாவுக்கரசு சுவாமிகள்.**

இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவன் இறைவனென் றெழுதிக்காட்டொணாதே.

## வைதிகசைவர் தாந்திரீகசைவர்.

இவர் முடிவாக "வைதீகசைவர் வேதசிவாகமங்களைத் தெளிந்து அவ்விருவித நூல்களினுங் கூறிய வநுட்டானங்களையும் நிட்டையையும் மேற்கொண்டவர்கள். தாந்திரீகசைவராவர் சிவாகமமொன்றினையே விசாரித்து அது வேதத்தின் பாஷ்யமாயிடுதலைத் தெளிந்து வேதாவிரோத புத்தியுடன் அச்சிவாகமாநுஷ்டானத்தையும் அதிற்போந்த நிட்டையையு மேற்கொண்டவர்கள்" என்றார். வைதிகசைவர் வேதசிவாகமங்களைத் தெளிந்து அதன்படி அநுஷ்டானஞ் செய்வோர் எனச் சொன்ன விவரே, மற்றொரு நாகை நீலலோசனியில் "வேதத்தின் வழிநின்று சிவனைவழிபடுவது வைதிகசைவமும், ஆகமத்தின் வழிநின்று சிவனை வழிபடுவது ஆகமசைவமுமாம்" எனக் கூறினார். இவ்விரண்டில் சத்திய மெது? அசத்திய மெது? நாம் கூறுவதியாதெனின் வேதத்தின் வழிநின்று சிவனை வழிபடுவதே வைதிகமாகிய சைவமாமென்க. சிவாகமம் ஒன்றனையே கொண்டு அதன் வழி நின்றவர் ஆகமசைவ மென்கிறாரே. அஃதுண்மைதான். அதனுடன் வேதாவிரோத புத்தியுடன் என்கிறாரே. அது பின்னும் உண்மைதான். இது சத்துவகுண முள்ளபோது எழுதிவிட்ட வாக்கியம்போலும். அடுத்து ராஜஸகுணமே விட்டு 'வேதத்தின் பாஷியம்' என்கிறார். இது பொருந்தாது. இவர் சென்ற நந்தனஞு ஆனிமீ 8௳ நாகை நீலலோசனியில், "வேதம் உலகினர்க்குரியது, சிவாகமம் சத்திநிபாதர்க் குரியது" என்றும், "வேதம் பல தெய்வங்களைக் கூறுவது, சிவாகமம் சிவனை மாத்திரம் கூறுவது" என்றும், "வேதம் சுவர்க்கத்தை யளிப்பது, சிவாகமம் சாலோகாதிகளை யளிப்பது" என்றும், "வேதம் பசுநூல் சிவாகமம் பதிநூ"லென்றும், "வேதம் மயக்கஞானத்தைக் கொடுப்பது,சிவாகமம் அதனைத்தவிர்த்துத் தெளிந்த ஞானத்தைப் பயக்குவது" என்றும் இவ்வாறு பலவிதமாய் வரைந்தமையானென்க. பலவிதத்திலும் மேலெழுதியபடி குறைவுபட்ட வேத(?)த்திற்குப்பலவிதத்திலும் மேற்பட்ட சிவாகமம் (?) உரையாமா? உலக நூலும் பசுநூலும் மயக்கஞானநூலும் இன்னும் இப்படிப்பட்ட பல அயோக்கியதையைக் கொடுக்கும் நூலுமான வேதத்திற்கு மோக்ஷநூலும் பதிநூலும் தெளிந்த ஞானநூலும் இன்னும் இப்படிப்பட்ட பல யோக்கியதையைக் கொடுக்கும் நூலுமான ஆகமம் உரையாமா? "அதருமத்தைச்செய்" என்கிற நூலொன்றினுக்குத் "தருமத்தைச்செய்" யென்கிற நூல் உரையாமா? மூலத்திற்

சொன்னபடிதானே யுரையுமிருக்கவேண்டும். மாறுபடலாமா? உள்ளதை விளக்கிச் சொல்லாததே யுரையன்றுமாயின் நேர்விரோதமாகச் சொல்லும் நூலை உரையெனச் சொல்வ தெங்ஙனம் பொருந்தும்? வேதம் மோக்ஷங் கொடாதென்றால் அதை விளக்கியன்றோ ஆகமஞ் சொல்லவேண்டும்? அதை விட்டு மோக்ஷங் கொடுக்குமெனச் சொல்லலாமோ? அப்படிச்சொன்ன ஆக மத்துக்கு வேதத்தோடு என்ன சம்பந்த மிருக்கிறது? இருளுக்கும் ஒளிக்கு முள்ள சம்பந்தம்போற்றானே. "சித்தாந்தமாவது காமிகம் முதலியன வாம். இதில் உயர்ந்தது பிறிதொன்றுமில்லை. இந்தச் சைவநூல் மூலமாய்ச் சதுர் வேதங்களும் இதினின்றும் பிறந்தனவாம்" என மற்றொரு நீலலோசனி யில் இவரே கூறியிருக்கின்றனர். இதனால் ஆகமத்தினின்றும் வேதம் வந்ததென விளக்கமாயிற்று. ஆகமத்தினின்றும் வந்த வேதத்திற்கு ஆகமம் உரையாமோ? மூலம் முன்னும் உரை பின்னுமன்றோ இருக்கவேண்டுவன?

ப்ரம்மவித்தியா 7-வது புத்தகம் 11-வது 12-வது பத்திரிகைகளில் மது ராந்தகவாசி கூறியபடி

* கூர்மபுராணம் 11-வது அத்தியாயத்தில் நாராயணர் வசனம் வரு மாறு:—

### சமஸ்கிருத சுலோகத்தின் மொழிபெயர்ப்பு.

"ரிஷபத்தைத் துவஜமாக வுடையவரே! வேதத்துக்குப் புறம்பான பாபிகளைக் காப்பாற்றும்பொருட்டு மிகவும் மோகிக்கத்தக்க ஆகமசாஸ்திரங் களை நாம் இருவருஞ்செய்வோம்."

"இவ்விதம் விஷ்ணுவால் ஏவப்பட்டவராய் உருத்திரன் அஞ்ஞானமய மான சாஸ்திரங்களைச் செய்தார். விஷ்ணுவும் உருத்திரனால் ஏவப்பட்டவ ராய்ப் பாஞ்சராத்திர முதலிய நூல்களைச்செய்தார்."

"காபாலம், லாகுளம், வாமம், பைரவம், பூர்வபச்சிரமம், பாஞ்சராத்தி ரம், கௌலம் இவைகள் தவிர வேதபாஹியமான அளவற்ற நூல்கள் அரு ளிச்செய்தார்கள்."

### * இலிங்கபுராணம் 19-வது அத்தியாயம்.

"இந்தவுலகத்தார் மோகிக்கும் பொருட்டு வேதவிருத்தமான வாமம், பாசுபதம், கௌலம், லாகுளம், பைரவமுதலான அனேக ஆகமங்கள் என்னு லருளப்பட்டன."

### பாத்மோத்தரபுராணம் 9-வது அத்தியாயம்.

"ஓ வசிஷ்டமகாமுனிவரே! உலகத்தில் சைவாகமத்தைக் கோருகிற வர் சிலர், யாமளத்தைக் கோருகிறவர் சிலர். இதுவுமன்றி வேதவிருத்த

---

* தமிழிலுள்ள கூர்மபுராணம் இலிங்கபுராண முதலிய புராணங்களில் டி பொருளுள்ள செய்யுள்கள் காணப்படவில்லை. எடுத்து விடப்பட்டிருக் கின்றன. இப்படியே இன்னும் பல புராணங்களில் ஆகம விரோதமான வசனங்கள் எடுபட்டிருக்கின்றன. சமயம் நேர்ந்தபோது அவற்றை எடு த்துக் காண்பிக்கப்படும்.

மான ஆகமங்கள் எவ்வளவுண்டோ, அவைகளைப்பற்றிக் கொடிய கலிகாலத்தில் அந்தணர்கள் மிக்க நம்பிக்கையோடு கோரமான பாவங்களைச் செய்வார்கள்.''

### பவிஷ்யோத்தர புராணம்.

விசாலமான நேத்திரத்தை யுடைய பார்வதியே! அந்தணர்கள் வேத நிந்தை யுடையவர்களாயும் தங்கள் கர்மங்களை விட்டொழிந்தவர்களாயும் மகா கோரமான கலியுகத்தி லுண்டாகப் போகிறார்கள்.

### ஆகமசாரம் 13-வது சுலோகம்.

"வேதம், சாஸ்திரம், புராணம் இவைகள் மிகத் தாழ்ந்த வேசியைப் போலும். ஒவ்வொரு சைவாகமமும் வீட்டுக்குள் தன்னுசாரம் தவறாமலிருக்கும் குலஸ்திரீயைப்போலுஞ் சொல்லப்படும்.''

இப்படிப்பட்ட வேத விருத்தமானதும் மோகத்தைச் செய்யத்தக்கதும் வேதானதிகாரிகளைக் காப்பாற்றும்பொருட்டுச் செய்யப்பட்டதும் வேததூஷணஞ் செய்வதுமான ஆகமம் வேதத்துக் குறையெனச் சொல்லப்படுமோ? இவ்வளவு தோஷமும் முன்பின் முரணும் இருப்பதால் இவருடைய வாக்கியம் பழுதுள்ள வாக்கியமேயா மென்க.

வைதிகசைவ மின்னதெனவும் ஆகமசைவ மின்னதெனவுந்தான் சொல்லிவிட்டாரே. இனி யிவரென்ன சைவரென ஆராய்வாம். வேதத்தைப் பசுநூல் மயக்கநூல் உலகநூல் எனவும், ஆகமம் அவற்றிற் கெதிர்மறையாகப் பதிநூல், தெளிவுநூல், மோக்ஷநூல் எனவும் சொல்லிவிட்டமையாலும், ஷை நாகை நீலலோசனியிலேயே வேதம் தமக் கவசியமில்லையெனச் சொல்லிவிட்டமையாலும், 'வேதத்தின் வழிநின்று சிவனை வழிபடுவது வைதிகசைவம்' என இவரே எழுதிவிட்டமையாலும் இவர் வைதிகசைவத்தினின்றும் விலகினவரானார். ஷை நீலலோசனியில் "இனி இதனால் துணியத்தக்க வுண்மை பௌராணிக சைவ முயர்ந்ததா? வைதிக சைவ முயர்ந்ததா? ஆகம சைவம் உயர்ந்ததா?'' என்கிற கேள்வி போட்டு, அதற்கு விடையாக, "புராணத்தினும் வேதம் உயர்ந்தது, வேதத்தினும் சிவாகமம் உயர்ந்தது'' என்றுகூறி அதன்பேரில் "ஆகம சைவமே சர்வோத்தமமென ஒப்ப முடிந்ததாயிற்று'' என்றமையாலும் இந்தச் சைவமே தமக்குரியதெனப் பலமுறையெழுதியிருப்பதாலும் தாந்திரீக சைவரென அவர்வாக்கினாலேயே சொல்லிக்கொண்டவரானார்.

நிற்க, வாயுசங்கிதை ப்ாசுபதயோகமும் எண்வகை நாமமுமுரைத்த அத்தியாயத்தில் 5-வது செய்யுளில் "நான்மறையை......இருபத்தெட்டாகமம் தழுவாது'' என்றதனாலும், சூதசங்கிதை விசிட்டதரும விசாரமுரைத்த அத்தியாயத்தில் 14 வது செய்யுளில் "முன்னது காபாலாதி பேதத்தால் மொழி பலவிதப்படும் அதனில், பின்னது காமிகாதிபேதத்தால் பேசிடும் இருபத்தெண்வகையாய், மன்னிடும் ஈதுவிசேடமாம் இதனின்வைதிகதருமமுத்தமமாம்.'' என்றதனாலும் இருபத்தெட்டு ஆகமங்கள் வேதசம்பந்தம் அற்றதென்றும் வைதிகதருமத்தினும் இருபத்தெட்டாகமம் தாழ்ந்ததென்று மாவதோடு, இவர் வரைந்தபடி இவர் அவைதிக சைவரும் தாந்திரீக சைவருமாகின்றார்.

## கேட்ட கேள்வியைத் திருப்பிக் கேட்டல்.

நாம் வினவிய வினுக்களில் அடியில் காண்பித்த மூன்றுவினுக் களுக்கு விடைபகராமல் திருப்பி அத்வைதிகளைக் கேட்கின்ருர்.

நாம்கேட்ட ஷை மூன்று வினுக்கள் வருமாறு:—

(1) பதிக்குப் பசு பின்னமா அபின்னமா? "பின்னுபின்னமா? "பின்னமாயின் பதிக்குப் பூரணத்துவங் குறையும்; அபின்னமாயின் "பதியே பசுவாகிப் பசுவுக்குள்ள பாசம் பதியையுஞ் சாரும். பின்னு "பின்னமாயின் மேற்படி இருவித தோஷமும் பொருந்துவதனேடு "நேர்மறுதலையான இருவித தர்ம்மும் ஒருபொருளின்க ணிருத்தல் "அமையாது. அன்றிப் பதி பசு ஆகிய இரண்டுபொருள்களில் ஆதார "மெது? ஆதேயமெது?. ஆதார ஆதேயங்களுக்குத் திருட்டாந்த "மொன்று கூறவேண்டும்."

"(2) பதிக்கு உலகம் பின்னமா? அபின்னமா? பின்னுபின்ன "மா? பின்னமாயின் பதி பரிபூரணப் பொருளாகாமற் போகும்; அபி "ன்னமாயின் பதியே உலகாய் உலகத்திலுள்ள சடத்துவம் பதியைச் "சாரும். பின்னுபின்னமாயின் மேற்படி இருவகைத் தோஷங்களும் "பொருந்துதலோடுநேர்மாருன இருவகைத் தர்ம்மம் ஒரு பொருளின் "கணிருத்தல் அசம்பவமாம்."

"(3) மாயைக்கு உலகம் பின்னமா? அபின்னமா? பின்னுபின் "னமா? மாயையினிடத்து உலகுண்டாதல் மாதாவினிடத்தில் பிள் "ளையுண்டாதல் போலா? வித்தினின்று மரமுண்டாதல் போலா? "பால் தயிராதல் போலா? இவைகளில்லாவிடில் வேறெதுபோல்? "மாயையின்கண் உலகம் பொருளா? குணமா? தொழிலா?"

கேட்ட ஷை கேள்விகளுக்குத் தமது பக்ஷமாக விடைதரவேண்டியதை விட்டு, திருப்பி அத்வைதிகளைக் கேட்பதினுனும், அதற்கு விடைபகரின் இவரது மதத்திற்கே ஊனமாமென்பது அவ்வினுக்களினுலேயே விளங்குகின்ற மையினுனும், அத்வைதிகள் பிரமம் ஒன்றேபொருளெனச்சொல்வதாய் இவரே பலவிடங்களிற்கூறுவதனுனும், ஒன்றேபொருளென்பாரைப்போய் அப்பொருளுக்கு மற்றப்பொருள் பின்னமா அபின்னமா என்பன முதலியவினுக்கள் வினவுவது முற்றுந் தெரியாமையே யாமெனவும் ஆதலால் பயந்து ஒளிந்தே மறுமொழிபேசாமற்போனுரெனவும் அறிந்துகொள்க. அத்வைதிகளைத் திருப்பிக் கேட்டாலுங் கேட்கட்டும். தமது பக்ஷத்துக்கு விடைசொல்லியல்லவோ கேட்கவேண்டும்? அங்ஙனமின்றிக் கேட்பதும் அதிலும் கேட்கப் படாத கேள்விக்கேட்பதும் அபஜெயத்திற்கே யிடமாமென்க.

## விடைகூருமல் மௌனஞ் சாதித்தது.

இதனடியில் காட்டிய 6-வது இலக்கக் கேள்விக்கு முற்றும் மௌனமே சாதித்தார்.

"6 வியாசமுனிவரியற்றிய வேதாந்த சூத்திரத்துக்கு நீலகண்ட சிவாசாரியார், சங்கராசாரியார், இராமாநுஜாசாரியார், மத்துவா சாரியாராகிய இந்நால்வரும் தனித்தனியே பாடியஞ்செய்தருளினார்கள். இதில் சைவபாடியம் நீலகண்ட சிவாசாரியா ரியற்றியது. இப்பாடியத்தை யிப்போதுள்ள ஞானமிர்தத்தைச்சார்ந்த சைவசித்தாந்திகள் தங்கள் பாடியமாக வொட்புக்கொள்ளுகின்றனரா?"

இந்தக்கேள்விக்கு ஒப்புக்கொள்ளுகின்றார்களென்றாவது ஒப்புக்கொள்ளவில்லையென்றாவது சொல்லவேண்டும். ஒன்றும் பேசாமையினால் "சைவம் சைவம்" எனக் கும்பலில் கோவிந்தம் போடுஞ்சங்கதி வெளிப்படுமென்று பயந்தொளிந்தாரெனத் தெரிகின்றது.

நீலகண்டசிவாசாரியர் மதம்வேறு, இவர் மதம்வேறு.

இனி நீலகண்ட சிவாசாரியார் மதத்திற்கும் இவர் மதத்திற்கு முள்ள தார தம்மியங்களை யெடுத்துக்காட்டுவோம்:—

1. நீலகண்ட சிவாசாரியார் முற்றுஞ் சகுணவாதி; இவர் சகுண நிர்க்குணவாதி.

2. அவர் கைலாயபதவி யென்றும் அழியாதென்கிறவர்; இவர் அப்பதவியும் அழிந்துபோம் என்கிறவர்.

3. அவர் கைலாயத்தில் போயிருப்பதுவே முத்தியென்கிறார். இவர் அப்பதவியும் அழிந்துபோவதால் அதையே முத்தியென் றேற்புகின்றனரில்லை.

4. அவர் வருணாசிரம தருமங்களை யொப்புக்கொள்ளுகின்றவர்; இவர் பிரமசமாஜிகளைப்போல் ஒப்புக்கொள்ளாதவர். (இதை யிவரினத்தார் ஒப்புவ தில்லை.)

5. அவர் வேதம் அபௌருஷேயமென்பவர்; இவர் பௌருஷேயமென்கிறவர்.

6. அவர் வேதம் அந்தணர்க்கே யுரியதென்பவர்; இவர் ஜாதியையொப்பாமையால் பிரமசமாஜிகளைப்போல எவர்க்கும் உரியதென்பவர். (இதையுமிவரினத்தா ரொப்புவதில்லை.)

7. அவர் வேதஞ் சுதந்தரப் பிரமாணமென்றும் வேதத்தைச்சார்ந்தே ஆகமம் பிரமாணமென்றும் கூறுகின்றவர்; இவர் வேதத்தைச் சாராமலே ஆகமம் பிரமாணம் என்கிறவர்.

8. அவர் வேதம் மோக்ஷநூலென்கிறவர்; இவர் அது பசுநூல் உலகநூல் மயக்கநூல் என்கிறவர்.

9. அவர் வேதத்தில் சிவனே பரத்துவமென்று கூறுவதாய்க் கூறுபவர்; இவர் பல தேவதைகட்கும் பரத்வஞ் சொல்லுகிறதென்கிறவர்.

10. அவர் பாஷியத்தைச் சிவத்விஜர், தங்கள் பாஷியமாகக் கொள்ளுகின்றார்கள். இவர், அதைத் தம் பாஷியமாகக்கொள்ளாது அதற்கு மாறுபடுகிற சிவஞானபோத சிவஞானசுவாமிகளுரையைத் தம்பாஷியமாகக் கொள்ளு

கின்றவர். ஷ சிவஞானசுவாமிகளுரையை ஷ சிவத்விஜர்கள் ஒப்புக்கொள்வதில்லை. இவர்பக்ஷத்தாரான சாமக்குளத்தான் என்ற ம-ா-ா-ஸ்ரீ வெங்கடரமணதாஸ் என்பவர், மற்றப்பாஷியங்களுடனே நீலகண்டபாஷியத்தையும் பூர்வபக்ஷமெனகூறித்தள்ளி, சிவஞானசுவாமிகளுரையையே சித்தாந்தமெனக்காட்டி அதுவே தம் பக்ஷமென வரைந்தார்.

அதுவருமாறு:—விஜயஹூ௵ ஆவணிமீ ௨௮௨ நாகைநீலலோசனியின்படி "வேதாந்தசூத்திரத்துக்கு (நீலகண்டபாஷியம், சங்கரபாஷியம், இராமாநுஜபாஷியம், மத்துவபாஷியம்) இந்த நான்குபாஷியங்களே பிரபலமாம். இனிச் சிவஞானபோத நெறியில் உபயபாஷைகளிலும் இலகுபாஷிய குருபாஷியங்கள் செய்யப்பட்டு மெய்கண்டசந்தான சித்தாந்த சைவபரம்பரையொன்று வெள்ளிடைமலைபோல் விளங்கி நிற்கின்றது. இதுவோ ஏனையோர் கொண்டமுடிபெல்லாம் பூர்வபக்கமெனக்காட்டி மெய்யிதுவென நாட்டி முன்னிற்பது." இந்தவாக்கியத்தினாலே நீலகண்டர் மதம் வேறென்றும் இவர்மதம் வேறென்றும் ஸ்பஷ்டமாய் விளங்குகின்றன. நீலகண்ட பாஷியம் பூர்வபக்ஷமென்றும் இவரினத்தாரியற்றிய சிவஞானபோதவுரை சித்தாந்தமென்றும் கூறியதனாலும் இவரதுபரம்பரைவெள்ளிடைமலைபோல் விளங்குகின்றதென்பதனாலும் இவர்மதப்பிரகாரம் இவரது மதம் மேலெனவும், நீலகண்டரது மதம் தாழ்வெனவுமாவதோடு நீலகண்டரது மதம் வெள்ளிடைமலைபோல் விளங்காமல் மறைந்து கிடக்கின்றதெனவும் ஏற்படுகின்றது.

11. அத்வைதிகளுக்கும் நீலகண்டமதஸ்தரான சைவ விசிஷ்டாத்வைதிகளுக்கும், வைணவவிசிஷ்டாத்வைதிகளுக்கும், மாத்துவர்களுக்கும், வீரசைவர்களுக்கும், சாக்தர்களுக்கும், வல்லபர்களுக்கும் சூத்திரபாஷிய மிருப்பதுபோல இவர்மதத்துக் கில்லவேயில்லை. அன்றி அத்வைதிகள் முதலாயினார்க்கு உபநிஷத்பாஷியம் இருப்பதுபோலவும் இவர்மதத்துக்கு இல்லை.

12. அவர் உலகத்துக்குப் பிரமத்தை அபின்ன நிமித்தோபாதானமாகக்கூறி, கேவல நிமித்தகாரணவாதங் கூறுவோரை மறுக்கின்றார். இவர் பிரமத்தைக் கேவல நிமித்தகாரணமாகவே கூறுகின்றார். அவர் உலகத்துக்கு உபாதானம் (குடத்துக்கு மண்போல்) பிரமத்தைக்கூற, இவர் மாயையபோலென்கிறார். அவர் பிரமமான சிவனது காரியமாக வுலகைச்சொல்வதால் உலகமெல்லாஞ் சிவமயமென்கிறார். இவர் மாயகாரியமென்பதால் மாயாமயமென்று சொல்லவேண்டியவராகின்றார். ஆதலால் சிவமயம் என்ற சொல் இவராவது இவரினத்தாராவது சொல்ல உரியரல்லர்.

13. அவர் பிரமமான சிவனது காரியம் ஜீவனென்றுசொல்லி, ஜீவனைச் சிவாம்சம் என்கிறார். அதை இவர் ஒப்புக்கொள்ளுகின்றனரில்லை.

14. குடத்துக்கு மண்போல வுலகிற்குச் சிவனை முதற்காரணமாகக்கூறுவதால் அவர் சிவவாதி; அதை மறுத்து மாயையைக்கூறுவதால் இவர் மாயாவாதி.

15. அவர் ஜீவன் மலமுள்ளபோதும் ஒழிந்தபோதும் அணுவென்கிறார். இவர் மலமுள்ளபோது அணுவென்றும் ஒழிந்தபோது வியாபகமென்றும் கூறி என்றும் அணுவென்பவரை மறுக்கின்றார், அவர் என்றும் அணு

வென்ன, இவர் முன்பு வியாபகம், பின்பு வியாபகம், இடையில்மாத்திரம் அணுவென்கிருர்.

16. அவர் ஆன்மாவைச் சத்தென்ன, இவர் சதசத்தென்கிருர்.

17. அவர் சிவன் கைலாயத்திலிருக்கிருரென்றும் அவரது ஞானம் எங்கும் வியாபகமென்றும் சொல்லுகிருர். சூரியன் ஒரு இடத்திலிருந்து அவனது பிரகாசம் எங்குமிருப்பதுபோலாம். இவர் சிவனே யெங்கும் பரிபூரணர் என்கிருர்.

18. அவர் ஸ்மிருதிகளிற் கூறிய கர்மங்களை அநுஷ்டிக்கவேண்டுமென்றும் ஸோமபூஷணனுன ஸோமனை (சிவனை) ஸோமயாகத்தால் ஆராதிக்க வேண்டும் என்றுகூற, இவர் ஸ்மிருதிகளையும் ஸ்மிருதிகர்மங்களையும் வைதிக சம்பந்தமான யாகாதிகளையும் தூஷித்தது கங்குகரையில்லை.

19. விரஜாநதியைக்கடந்து விஷ்ணுலோகஞ்சென்று பிறகு சிவலோகப் பிராப்தி யுண்டாமென்கிருர். இவர் அதை யொப்புக்கொள்ளுகின்றனரில்லை.

20. அவர் பிரமலோகத்தையடைந்து அங்குபிரமதேவனுடன் வசித்தே பிறகு மோக்ஷமடையவேண்டுமென்றனர். அதை யிவரொப்பமாட்டார்.

21. அவர் முத்தியிலுஞ் சரீரம் உண்டென்கிருர். இவர் அதையொப்பார்.

22. அவர் முத்தியில் ஜீவன் முற்றும் சிவசாமியம் பெற்றுப் பஞ்சகிருத்தியஞ் செய்வான் என்கிருர். இவர் அதையொப்பாது சார்ந்ததன்வண்ணமாய் மலம் நீங்கிச் சிவனைச்சார்ந்து சிவனுய் நிற்பானென்கிருர்.

23. அவர் எக்காலத்தும், ஜீவன் சிவைக்கியம் பெறமாட்டான் என்கிருர். இவர் இரண்டறக்கலத்தலென்னும் போலி ஐக்கியங் கூறுகின்ருர்.

24. அவர், சூட்சும சிதசித்விசிஷ்டமே பிரமம் என்பவர். இவர் நிர்விசேஷமே பிரமம் என்பவர்.

25. அவர் முத்தியில் ஜீவபேதங் கூறினரில்லை. இவர் விஞ்ஞான கலராதி பேதமொப்புகின்ருர்.

26. அவர் சந்நியாசத்தை யொப்புகின்ருர். இவர் ஒப்பார்.

இன்னும் இவ்வாறு இவர் மதத்துக்கும் அவர் மதத்துக்கும் அனேக பேதங்களிருக்கின்றமையால் அவர் மதம்வேறு, இவர் மதம்வேறு. ஆதலால் அவர்வழிவந்த மதந்தான் இவர் மதமெனச் சொல்லப்படாது.

## கண்ணொளிவிஷயமாக முன்ருெடர்ச்சி.

கண்ணுக்கு ஒளியுண்டெனத் தாபிக்க வெழுந்த வெங்கடரமணதாஸரென்பார், பூனையாதிகளுக் கிரவில் ஏன் கண் தெரிகின்றதெனக் கேட்டனரன்ருே? பூனையாதிகளுக்குக் கண்தெரிகின்றதென்ருரேயன்றி மனிதர்களுக்குக் கண் தெரிகின்றதென்று தாபித்தனரில்லை. பூனையாதிகளுக்குக் கண்தெரிவதையே ஆதாரமாகக்கொண்டு உபமானங் கூறுவாராயின் ஆன்மஞானத்தை

அஞ்ஞானம் மறைக்கின்றதென்று கூறும் உபமேயத்துக்கு அது பொருத்த முறுது. ஏனென்னில் இரவில் இருளானது பூனையாதிகளுடைய கண்ணை மறைக்கவில்லை. சோமசுந்தரநாயகரும் "கண்ணொளியைப் பூதவிருள் மறைத்ததுபோலாம்" என்றும், "கண்ணொளியையே பூதவிருள் மறைப்பதன்றி" என்றும் கூறி யிருக்கின்றனர். இவரது மதஸ்தரான சிவஞானசுவாமிகள் முதலானோரும் அவ்வண்ணமே கூறியிருக்கின்றனர். ஆதலால் பூனையாதிகளினது கண்ணுபமானம் உபமேயத்துக்குப் பொருத்தமுறுதென்க.

நிற்க; ஆன்மா அஞ்ஞானத்தோடேனும் ஞானத்தோடேனும் இருக்குமேயன்றித் தனித்து நில்லாதென்றும், இந்தவுபமேயத்துக் குபமானமாகக் கண் இருளோடேனும் ஒளியோடேனும் கூடியிருக்குமேயன்றித் தனித்து நில்லாதென்றுங்கூறுவதிவர்மதம். இதற்குச்சரியாக இவரது மதஸ்தரான திருநெல்வேலி ஜில்லா பொன்னைமாநகரம் ம-ா-ா-ஸ்ரீ கவிராஜ அழகிய நம்பியா பிள்ளையவர்கள் குமாரர் ம-ா-ா-ஸ்ரீ ஆரியங்காவுப்பிள்ளை அவர்கள் எழுதிய "பெரியர் அற்புதத்திரட்டு, சைவ சித்தாந்த நவநீதம்" என்னும் நூலின்கண் சைவசித்தாந்த நவநீதமென்னும் பகுதியில் 108 வது பக்கத்தில் 79 வது வினுவில் "ஆன்மாக்கள் எக்காலத்தினுந் தனித்திருக்கின்றதில்லையோ?" என்னும் வினுப்போட்டு, அதற்கு விடையாக "கண்ணானது ஒருக்கால் ஒளியோடும் ஒருக்கால் இருளோடுங் கூடி யிருப்பதன்றி, எக்காலத்திலுந் தனித்திராததுபோல ஆன்மாக்களெல்லாம் ஒருக்கால் மலத்திலேயும் ஒருக்கால் பரம்சிவத்திலேயும் கூடி யிருப்பதன்றி எக்காலத்திலுந் தனித்திரார்கள்" என்றெழுதி யிருக்கின்றூர். இந்த உபமேயத்துக்குப் பொருத்தமாகப் பூனையின்கண் இருளோடு ஒருகாலத்தும் ஒளியோடு ஓர்காலத்துங் கூடியிருக்கவேண்டும். அவ்வாறு கூடியிருக்கவில்லையென்பதற்குச் சாக்ஷி: அப்பூனையாதிகளினுடைய கண், பகலிலும் இரவிலும் அவர் கேள்வியின்படி ஒளியினுதவியின்றிப் பொருள்களை யறிகின்றமையேயாம்.

பூனையாதிகளினுடைய கண்ணை யுபமானமாகச் சொல்வதில் அது என்றும் இருளின்றி யொளியினையே பெற்றிருக்கின்றமையின் அதுபோல ஆன்மாவும் அஞ்ஞானமின்றி யென்றும் ஞானத்தையே பெற்றிருத்தல்வேண்டும். அங்ஙனமாங்கால் அஞ்ஞானத்தைப் பெற்றிருப்பது ஓர்காலமென்றும், ஞானத்தைப் பெற்றிருப்பது ஓர்காலமென்றும் சொல்வதோடு, அஞ்ஞானத்தை யொழித்து ஞானத்தைப் பெறவேண்டுமென்றுஞ் சொல்வது பொய்யாம். அன்றி ஆன்மாவின் ஞானத்தை அஞ்ஞானம் மறைத்ததென்பதும் பொய்யாம். பொய்யாகிறபோது ஆன்மா ஞானப்பிரகாசமாகவே யென்றும் இருப்பதாய் ஆகின்றது. ஆகின்றபோது அதற்குப் பந்தமென்பதில்லை. பந்தமில்லாதபோது பிறப்பிறப்பும், ஆகாமிய சஞ்சித பிராரத்த வினைகளும், சாக்கிர சொப்பனசுழுத்தியவத்தைகளும், தூல சூக்ஷுமகாரணசரீரங்களும், ஞாதாஞானஞேயங்களான திரிபுடிகளும், ஆதிஆத்மீக ஆதிதெய்வீக ஆதிபௌதீக தாபத்திரயங்களும், நல்வினை தீவினைகளும், பாவபுண்ணியங்களும், சத்துவ ரஜோ தமோகுணங்களும், யான் எனதென்னுஞ் செருக்கும், காமவெகுளிமயக்கமுமின்னும் அஞ்ஞானசம்பந்தமான வெவைகளும் இல்லையாம். இவையில்லாதபோது பந்த மொழிந்து முத்திபெறுவதுமில்லையாம். முத்தியே இல்லாதபோது வைதீக தாந்திரீக அநுஷ்டானங்களும் அநாவசியமாம். அவை அநாவசியமான

போது வேதாகமசாஸ்திர புராணேதிகாசங்களும் அநாவசியமாம். அவை அநாவசியமானபோது சத்தப்பிரபஞ்ச பொருட்பிரபஞ்சங்களும் ஈசுவரன் சிருட்டி செய்யவேண்டிய ஆவசியமில்லை. அநாவசியமான காரியத்தை ஈசுவரன் செய்வது வீணேயாகும். கண்ணுக்கொளியுண்டெனக்கூறி அதைத்தாபிப்பதற்குப் பூனைமுதலியவற்றிற்கு இரவில் ஏன் கண்தெரிகிறதென்று கூறுவதில் இவ்வளவு விபரீதமுண்டாகின்றமையின் பூர்வபக்ஷியாரின் வாதம் துர்ப்பலமாய்க்கழிந்துபோயதோடு, பூனையாதிகளின் கண்ணை உபமானமாகக்கூறியது உபமானவுபமேயப்பொருத்தந் தெரியாமையுமாமென்க.

## முடிவுரை.

நாம் முதலில் யாழ்ப்பாணம் கோபா சபாபதிநாவலரவர்களைஎட்டுக்கேள்விகள் கேட்டோம். அவர், கேள்வியின் அருமையையும் உரப்பையுங்கண்டு அஞ்சி, அம்மம்ம! இதற்குத்தரங்கூற நம்மாலாகாதென்றும், தப்பிக் கூறின் அவமானமும் உள்ள கௌரவமும் போய்விடுவது மன்றித் துவித சித்தாந்தத்திற்கு மோசமும் வருமெனக் கருதி, “வழி வந்தகப்பட்டானைத் தொழுவத்தில் மாட்டிவிட்டு வாய்க்காலுக்குப் போய் வருகிறேனென்று போய்விடுவது” போலக் கழுவுக்குத் தக்க கோமுட்டியான சூலை--சோமசுந்தர நாயகரென்பவரை நமக்கு விடையிறுக்கும்படி மாட்டிவிட்டு ஜாடையாய்த் தலைமறைந்து பதுங்கி மௌனவிரதத் தவஞ்செய்யப் போய்விட்டார். அப்படிப் போனவர் சும்மாபோனாரா, இல்லை! இல்லை!! கீழேவிழுந்தவன் மீசையில் மண்படவில்லையெனக் கௌரவமாய்ச் சொல்வதுபோல, ஷைவினாக்கள் பாலவினாக்களென்றும் அவற்றினுக்கு விடைகொடுக்கற்பாலார் சைவபாடசாலைச் சிறுவரேயென்றுங் கௌரவமாய்ச் சொல்லியே போனார். இந்தத் தந்திரத்தைக் கள்ளங் கவடற்ற சோமசுந்தரநாயகர் அறியாது, சபாபதிநாவலர் கூறியபடி, பாடசாலைச் சிறுவராய் நின்று, தமது துவித சித்தாந்தம் சுருதி யுத்தி அநுபவங்கட்குப் பொருத்தமற்றதென்றும், அத்துவித சித்தாந்தமே அவைகட்குப் பொருத்த முற்றதென்றும் காட்டிக் கொள்ளத்தக்க ஆபாச விடையளித்தார். நாம் அவ்வாபாசவிடையை ஆபாசவிடையென அணு அணுவாய்ப் பிரித்துக் காட்டினதுமன்றி, அத்வைத மதந்தான் உண்மையென்றும் துவிதமதங் கற்பனையே யென்றும் விளக்கினாமென்க. இதிலுள்ள வாதமெல்லாம் ப்தி பசு பாசங்களைப்பற்றியனவே யாகலின் இந்நூலுக்குப் “பதி பசு பாச வாதம்” என்று பெயர் தரப்பட்டதென்பதாம்.

ஆரியன்.

☞ இப்புத்தகம் 27 ம் பக்கம் 14 வது வரிவரையில் ப்ரம்மவித்தியாவில் வந்திருக்கிறது.